# யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ கவிஞர்களும் கீர்த்தனைகளும்



எஸ். ஜெபநேசன்
யாழ்ப்பாண அத்தியட்சர்

[illegible]

# யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ கவிஞர்களும் கீர்த்தனைகளும்

ஆசிரியர்
கலாநிதி எஸ். ஜெபநேசன்
யாழ்ப்பாண அத்தியட்சர்

தென்னிந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்
வட்டுக்கோட்டை
இலங்கை

# யாழ்ப்பாணத்து
# கிறிஸ்தவ கவிஞர்களும், கீர்த்தனைகளும்

ஆசிரியர்: பேராயர், கலாநிதி. எஸ். ஜெபநேசன்
யாழ்ப்பாண அத்தியட்சர்.

வெளியீடு: தென்னிந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்

முதலாவது பதிப்பு:- மார்ச்- 1994

பக்கங்கள்: 100

அச்சுப் பதிப்பு: அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகம்
யாழ்ப்பாணம்

விலை: 100-00

(பதிப்புரிமை நூலாசிரியருடையது)

---

## YAALPANATHU
## Christhava Kavingharkalum, Keerthanaikalum

Author:- Rt. Rev. Dr. S. Jebanesan
Bishop in Jaffna

Publishers:- Jaffna Diocese of the Church
of
South India

First Edition:- March- 1994

Pages:- 100

Printers:- American Ceylon Mission Press
Jaffna

Price:- Rs. 100/-

(Copy right Reserved)



Mr. D. P. Niles

# அணிந்துரை

"கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்! பூமியின் கடையாந்தரத்திலிருந்து அவருடைய துதியைப் பாடுங்கள்" என்று தீர்க்கன் ஏசாயா அழைப்பை விடுத்தார். கிறிஸ்துவின் பிறப்பைத் துதித்து பரம சேனையின் திரளே பாடினர் என்று லூக்கா நற்செய்தியாளன் கூறியிருக்கிறார்- அந்த நற்செய்தி எங்கெங்கே கூறப்பட்டதோ அங்கெல்லாமிருந்து மக்கள் தங்கள் தங்கள் நாவிலும், பற்பல இசைகளிலும் கலாசாரம் பண்பாடுகளுக்கு அமையவும் கர்த்தருக்குப் புதுப் பாடல்களைப் பாடியே வந்திருக்கின்றார்கள்- பரம சேனையின் எதிரொலியாக இன்று மக்கள் ஆயிரம் மொழிகளுக்கு மேலாக பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மண்ணுலகின் சேனையாகத் திரண்டு கர்த்தருக்குப் புதுப் பாடல்களை ஏறெடுக்கின்றார்கள்.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலேயே கிறிஸ்துவின் நற்செய்தி தமிழ் உலகில் கூறப்பட்ட காலந்தொட்டு, தமிழ் பக்தர்கள் தங்கள் விசுவாசத்தையும், துதியையும், வேண்டுதல்களையும் தமிழ் கீர்த்தனைகள், பஜனைகள், கூட்டுப்பிரார்த்தனைகள், தேவாரங்கள், விருத்தங்களுக்கூடாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்,பாளையங்கோட்டை ஹென்றி ஆ. கிருஷ்ணபிள்ளை போன்றவர்கள் செய்த பெரும்பணியை யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவ பக்தர்கள் மெச்சத்தக்க முறையில் ஆற்றி வந்திருக்கிறார்கள், கிறிஸ்துவுக்குள் எந்நாடோ எம்மொழியோ அந்நியமானதல்ல. எனவே கர்த்தருக்குப் புதுப் பாடல்களை எந்நாட்டிலும், எம்மொழியிலும் பாடும் வாய்ப்பு நமக்குண்டு.

யாழ்ப்பாணத்தில் இவ்வரும் பணியை நிறை வேற்றிய பதினெட்டுப் புலவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும், புலமைத்துவத்தையும் எடுத்து ஒரு நூலாகத் தொகுத்து எழுத வேண்டும் என்று தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் அத்தியட்சர் மகாகனம் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஏவப்பட்டதற்காக தமிழ்] மக்கள் என்றும் கடமைப்பட்டிருப்பார்கள், எமது இலக்கிய மரபை அறிவது ஒரு தனி மகிழ்ச்சியைக் கொடுக்கும், மேலும் இம்மரபை வளர்க்க முன்வருவோர் இதை அறிவது இன்றியமையாதது: இப்புலவர்களின் பாடல்களைப் பாடும் நம்மவர்கள் இன்னும் கருத்துடனும் ஆர்வத்துடனும் பாட இந்நூல் பெரிதும் உதவியாயிருக்கும்.

அமெரிக்க இலங்கை மிஷன் தமிழிற்கும், தமிழ் மக்களுக்கும் செய்த பணிகளை வரலாற்று ரீதியில் ஆராய்ச்சி செய்து நூல்களை வெளியிட்ட அத்தியட்சர் ஜெபநேசன் இந்நூலையும் வெளியிட்டது மிகவும் பொருத்தமே. இதைப் படித்துப்பார்ப்பவர்களும், இலக்கிய ஆர்வமுள்ளவர்களும் பயனடைவார்களென்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

+ டி. ஜே. அம்பலவாணர்
தென் இந்திய திருச்சபை
யாழ். ஆதீன
முன்னாள் அத்தியட்சர்

மிஷன் இல்லம்,
மானிப்பாய்.
25 - 4 - 1994

# நூலாசிரியரின் உரை

யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ கவிஞர்களைப் பற்றியும், அவர்கள் இசைத்த கீர்த்தனைளைப் பற்றியும் ஒரு நூல் எழுத வேண்டும் என்ற ஆர்வம் என்னுள்ளத்தில் நெடுங்காலமாக இருந்தது. இதற்கான முக்கிய தகவல்களைச் சேகரித்து வந்தேன்; இப்பொழுது பதினெட்டுக் கவிஞர்களைப் பற்றிய சுருக்கமான இறுக்கமான கட்டுரைகளை எழுதியுள்ளேன்; இக் கவிஞர்களிலே சிலர் எனது நெருங்கிய நண்பர்களாக இருந்தனர்; உலக வாழ்வினை நீத்தவர்கள் பற்றிய கட்டுரைகளே எழுதப்பட்டுள்ளன, உயிரோடிருக்கும் கவிஞர்களைப் பற்றிய கட்டுரைகள் இந் நூலில் இடம் பெறவில்லை!

இறையியற் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், திருச்சபை வரலாற்று ஆய்வாளர்களுக்கும் இந் நூல் துணைபுரியும் என்பது எனது நம்பிக்கை. இத்துறையின் முதலாவது முயற்சி இது! யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ மரபை விரிவாக ஆராய்ந்து, அதனை இளைய தலைமுறையினருக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது.

அறிஞர்கள் இந் நூலில் இன்னும் சேர்க்கப்பட வேண்டிய தகவல்களும், புகுத்தப்பட வேண்டிய கருத்துக்களும் இருப்பின், அவற்றைச் சுட்டிக்காட்டுவாராயின் அடுத்த பிரசுரத்திலே அவற்றை மகிழ்ச்சியுடன் சேர்த்துக் கொள்வேன்!

யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ கவிஞர் பரம்பரை பலவித சிறப்புக்களுடையது. அமெரிக்கன் மிஷனரிமாரின் கல்விப்பணியினாலே கவரப்பட்ட சிறந்த தமிழ்ப் புலவர்களே கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார்கள். இவர்களிலே சிலர் பிற்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைக் கைவிட்டனரெனினும், கிறிஸ்தவ இலக்கியத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பினை யாருமே குறைத்து மதிப்பிட முடியாது.

இளைய தலைமுறையினருக்கு, மறைந்துபோன ஒரு தலைமுறையின் சாதனையையும் விழுமியங்களையும் ஒரளவிற்கேனும் அறிந்து கொள்ள இந் நூல் துணைபுரியுமென்று நம்புகிறேன்.

இந் நூலை உருவாக்குவதில் எனக்குப் பல வழிகளிலும் துணை புரிந்த பிரபல எழுத்தாளர், நண்பர் திரு. நாவேந்தன் அவர்களுக்கும், அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சக அதிபர் திரு. வி. மித்திரரஞ்சன் அவர்களுக்கும், புளொக்குகளைச் செய்வித்தனுப்பிய வண. எஸ். ஜெயநேசன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்!

+ எஸ். ஜெபநேசன்
யாழ்ப்பாண அத்தியட்சர்

அத்தியட்சர் அலுவலகம்
வட்டுக்கோட்டை 28-03-1994

# பொருளடக்கம்


| விடயம்: | பக்கம் |
|---|---|
| 01 ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை | 01 |
| 02 ஜெர்மையா எவாட்ஸ் கனகசபைப்பிள்ளை | 07 |
| 03 வண. ஜே. எஸ். கிறிஸ்மஸ் அடிகளார் | 13 |
| 04 பேரறிஞர் றொபேட் பிறெக்கன்றிட்ஜ் | 19 |
| 05 சி. வை. தாமோதரம்பிள்ளை | 24 |
| 06 புலவர் எஸ். எஸ். எரேமியா | 31 |
| 07 பேராசிரியர் அலன் ஆபிரகாம் அம்பலவாணர் | 35 |
| 08 வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகர் | 42 |
| 09 நொத்தாரிசு எஸ். கந்தையாபிள்ளை | 49 |

10 பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை 53
11 வித்தகர் ஜே. வி. செல்லையா 58
12 முகாந்திரம் ஏ. பி. குமாரகுலசிங்கி 64
13 பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வார்பிள்ளை 70
14 அறிஞர் ஏ. எம். கே. குமாரசுவாமி 75
15 விடிவெள்ளி க. பே. முத்தையா 80
16 சின்னண்ணன் வண. ஈ. த. இயேசுசகாயம் 85
17 கவிஞர் தோமஸ் ஹட்சன் பரமசாமி 93
18 வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் 97

# ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை

" தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை" என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். ஆனால் அவர் பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்து நவாலியூரில் அவதரித்தவரான அருட்கவிஞர் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை தமிழ் கூறும் நல்லுலகம் வியந்துரைக்குமளவுக்குப் பல்வேறுபடைப்புக்களைத் தமிழன்னையின் மணி முடியில் அலங்கரித்து அழியாப்புகழ் பெற்றவராவர். இது நிகழ்ந்தது 19 ஆம் நூற்றாண்டிலாகும். அப்போது தமிழறிவும், புலமையும், கல்வியும் சைவ ஆலயங்களிலும், கிறிஸ்தவ மிஷனரிமாரின் பிரசாரப் பிரசுரங்களிலுமே பெரிதும் தங்கியிருந்தன. இவற்றை மீட்டெடுத்து மக்கள் மயப்படுத்திய மாபெரும் மேதைகள் இருவராவர். ஒருவர் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை, மற்றவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவர்கள் இருவரும் சமகாலத்தவர்; ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷன் செமினரியைச் சார்ந்து நின்றும், ஆறுமுகநாவலர் உவெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியைச் சார்ந்து நின்றும் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை 1820-10-11 ஆம் தேதியில் நவாலியூரில் மிகமதிக்கப் பெற்ற சைவ வேளாண்குடும்பத்தில் அருணாசலம் ஆனந்தப்பிள்ளை ஆசிரிய தம்பதிகளுக்கு புதல்வராக அவதரித்தார். ஆரம்பக் கல்வியை நவாலியிலுள்ள ஒரு சைவப் பாடசாலையிற் கற்ற பின்னர் 1831 ஆம் ஆண்டில் தமது ஆங்கிலக் கல்வியை மானிப்பாயிலுள்ள மிஷன் ஆங்கில பாடசாலையில் ஆரம்பித்து அடுத்த ஆண்டில் வட்டுக்கோட்டை செமினரியில் தொடர்ந்தார். இதேகாலத்திலேதான் பிற்றைநாளில் "வசனநடை கைவந்த வல்லாளர்" எனவும் "நாவலர்" எனவும் புகழ் பெற்ற ஆறுமுகநாவலர் யாழ் மத்திய கல்லூரியில் தமது கல்வியை ஆரம்பித்தார். 1835 ஆம் ஆண்டில் சதாசிவம்பிள்ளை கிறிஸ்தவராகி அருணாசலம் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை என்னும் நாமம் பெற்றார். இவர் 1841 ஆம் ஆண்டு மானிப்பாய் மிஷன் ஆங்கில பாடசாலையில் ஆசிரியராகி உடுவில், சாவகச்சேரி ஆதியாம் இடங்களிலுள்ள பாடசாலைகளிலும் கற்பித்தார். 1854 இல் உடுவில் மகளிர் விடுதிப் பாடசாலையின் தலைமையாசிரியரானார். 1857 இல் "உதயதாரகை" தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியரானார். 1881 இல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியரானார். 1891 இல் தமிழ்ப் பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற போதும், 1895 இல் தாம் இறக்கும் வரை "உதய தாரகை" ஆசிரியராராகக் கடமையாற்றி

னார். மொத்தத்தில் '' உதயதாரகை '' ஆசிரியராக சதாசிவம் பிள்ளை நான்கு தசாப்தங்கள் பதவி வகித்துள்ளார். இக்காலகட்டத்தில் தமிழின் மறு மலர்ச்சிக்கும், தமிழிலக்கியவிருந்திக்கும் அவராற்றிய தொண்டுகள் அளப்பரியனவாகும்.

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளைக்கு அழியாப் பெயரைப் பெற்றுத் தந்தது. அவர் எழுதி வெளியிட்ட '' பாவலர் சரித்திர தீபகம் '' என்னும் நூலேயாகும். இந்நூலே தமிழில் முதலாவதாக வெளிவந்த தமிழ்ப் புலவர் சரித நூலாகும். இந்நூல் மானிப்பாயிலுள்ள ஸ்திறாங் அன்ட் அஸ்பரி'. என்பவரின் அச்சியந்திர சாலையில் அச்சிடப் பெற்று 1886 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. சைமன் காசிச் செட்டி என்பவர் 1859 ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட தமிழ் புளூராக் என்னும் தமிழ்ப் புலவர் சரிதம், ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் சரிதம் பற்றி முழுமையான, அல்லது விரிவான ஆய்வுடையதன்று, சைமன் காசிச் செட்டி புத்தளம், சிலாபம் கொழும்பு, முதலிய இடங்களில் வாழ்ந்து பல உயர் பதவிகளை அரசில் வகித்தவர். எனவே அவரது நூல் ஆங்கிலத்தில் அமைந்ததும் ஈழத்தின் தமிழ்ப் புலவர்கள் பற்றிய விரிவான தகவல்களைத் தராது போனதும் வியப்புக்குரியதன்று! சைமன் காசிச்செட்டிக்கு யாழ்ப்பாணத்தினையோ மற்றும் மட்டக்களப்பு, வன்னி முதலிய தமிழ்ப் பகுதிகள் பற்றியோ, ஆங்கு வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பற்றியோ விரிவான விளக்கம் கிடைத்திருக்கவில்லை. 196 தமிழ்ப் புலவர்கள் பற்றிய சுருக்கமான விபரங்களை மட்டுமே ''தமிழ் புளூராக்'' நூல் சமர்ப்பித்துள்ளது. ஆனால் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை எழுதிய '' பாவலர் சரித்திர தீபகம்'' 410 தமிழ்ப் புலவர்களது சரிதங்களை விபரமாகத் தந்துளது. கலாநிதி பொ. பூலோகசிங்கம் 1970 ஆம் ஆண்டில் வெளியிட்ட ''தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள்'' என்னும் நூலில் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையவர்களின் பரந்துபட்ட இலக்கிய ஆற்றல்களைக் காணலாம்.

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை தமிழிலக்கியம் குறித்து மட்டுமன்று, விஞ்ஞானம், தத்துவஞானம், ஒழுக்கம், வரலாறு ஆகியன குறித்தும் மிக ஆழமான அர்த்தமுடைய படைப்புக்களை வழங்கியுள்ளார். அவற்றுள் பன்னிரு நூல்கள் பிரசித்தமானவையென ஆராய்ச்சியாளர்களாற் கருதப்படுகின்றன. திருச்சதகம், மெய் வேதசாரம், வெள்ளை அந்தாதி, நன்னெறிமாலை, நன்னெறிக்கொத்து சற்போத சரணம், கீர்த்தனாசங்கிரகம், ஞானவெண்பா, இல்லற

நொண்டி, நன்னெறிக்கதாசங்கிரகம், வானசாஸ்திரம், குடும்பத்தர்ப் பணம், பாவலர் சரித தீபகம் என அவை குறிக்கப்பட்டுள்ளன. பிள்ளையவர்களின் தமிழறிவுக்கும், தமிழார்வத்திற்கும் வித்திட்டவை வட்டுக்கோட்டைச் செமினரியில் மூலம் அவர் பெற்றிருந்த பாரம்பரியத்தொடர்பு அகலாத தமிழாசிரியர்கள் அளித்த போதனையே. அதற்குதாரணமாக செமினரியில் அவருக்குத் தமிழ் கற்பித்தவர் பிரபலம் பெற்ற சண்முகம் சட்டம்பியாராவர். ( 1794 - 1845 ) இவர் புகழ் பெற்ற இருபாலைச் சேனாதிராய முதலியாரது ( 1750 - 1840 ) பிரபலமான சீடராக மிளிர்ந்தவர். சேனாதிராய முதலியாரே ஆறுமுகநாவலருக்கும் குருவாகக் கணிக்கப்படுகிறார்.

சரளமாகக் கவிதையாக்கும் ஆற்றல் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளைக்கு கைவரப் பெற்றிருந்தது ஐநூறுக்கும் மேற்பட்ட தோத்திரப்பாடல்களை அவர் யாத்துள்ளார் எனத் தெரியவருகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் தழுவிய தமிழறிஞர்களிற் பலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். தாமியற்றிய பக்தி இலக்கியங்களில் வைணவ மதச்சாயல் படியும்படியாகச் செய்திருப்பதனை ஆய்வாளர் அறிவர். "கிறிஸ்தவக்கம்பர்,, என்று வருணிக்கப்படும் எச். ஏ. கிருஷ்ணபிள்ளையினது இரட்சணிய யாத்திரிகம், வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி போன்ற கிறிஸ்தவ காவியங்கள் ஈழத்தில் எவராலும் இயற்றப்பட்டதாக தெரியவில்லை. கனகசபைப்பிள்ளை என்ற புலவர் திருவாக்குப்புராணம் என்ற நூல் எழுதினார். அது முற்றுப் பெறவில்லை. ஆனால் தமிழ் நாட்டிற்கும் முன்னுதாரணமாக மிளிரும்வகையில் சைவசமய இலக்கியங்களின் சாயல் செறிந்த கிறிஸ்தவ தோத்திரப் பாடல்கள் பலவற்றை ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை ஆக்கி அளித்துள்ளார். பாடல்களும் தமிழ் யாப்பு விதிகளுக்கமைவனவாகவுள்ளமை மேலுஞ் சிறப்புத்தருகின்றது. கருத்தோட்டத்திலும் மேலைத் தேசத்துக்கு ஒத்ததான "உலகம் மிகவும் சிறந்தது" என்ற கருத்திலிருந்து வேறுபட்டுக் கீழைத்தேயத் தத்துவக் கருத்துக்களின் வழி நின்று "பிறவிப் பிணி, மன்னிப்பு" முதலான தலைப்புகளில் பாடல்களைத் தந்து ஏகபெருமானை எமக்கு எழில்பெற அறிமுகப்படுத்துகின்றார்.

> "ஈனப் பிறவி யெடுத் தெல்லையில்லாத் தீது செய்தேன்"
> வானவ நீ யன்பால் மன்னித்திடுவ தெக்காலம்!"
>
> — முத்திநாட்டம் ( பஞ்சரத்தினம் )

" பூலோக வாழ்வொழிந்து போகக் கண்டேன்
பூவையர் தம் சௌந்தரியம் பூவாய்க் கண்டேன்
மாலார் மண்ணுரிமை குடி வாங்கக் கண்டேன்
மல்கு சுற்றம் யாத்திரிகர் மடமாய்க் கண்டேன்
காலமது தூமம் போற் கழியக் கண்டேன்
கடைக் கணித்தாண்டிடக் கருணை கண்டேனின்பாற்
சாலவினித் தாமதந் தான்றராது மேலாம்
சாலோகந்தா யேசு சாமி நாதா......... ! "

— சாலோகப் பிரவேசம் (பஞ்சரத்தினம்)


| | |
|---|---|
| " மோசமாய்ப் போகீர் | — முகிழ் செறி தாமரைப் |
| பாசியிடை நீர் | — பற்றிடல் போலவும் |
| புளியினற் பழத்திற் | — பொருந்து மோடொப்பவும் |
| இழிவுறு முலகுடன் | — இசைந்து நீரிருப்பீர் |
| ஆரியப் பாவை | — யாடினுமாங்குதங் |
| காரியமே கணாய்க் | — கருத்துரைப்பவர் போல் |
| எவ்விட மிருப்பினும் | — எந்நிலையாகினும் |
| அவ்விடந் தேவனை | — அன்புடன் வணங்கிப் |
| பாவ வேரறுத்துப் | — பரமனுக்கருள் செய் |
| யேவு சாலோகமாம் | — வீடு சேர்குவீரே ! " |

மெய்யறிவுறுத்தல் (பஞ்சரத்தினம்.)

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை சைவசமயச் சாயல் படிந்த இப்பாடல்கள் மூலம் கிறிஸ்தவ தரிசனத்தை நல்குகிறார். பாடல்களின் பதப்பிரயோகங்களும், யாப்பமைதியும் மாணிக்கவாசக சுவாமிகளையும், சித்தர்களையும் நினைவுறுத்துகின்றன. காலங் கடந்து நிற்கும் கவியாற்றல் நிச்சயமாக இப்பாடல்களுக்குண்டு சைவசமய தத்துவங்களையும், கிறிஸ்தவ தத்துவத்தையும் ஒரோ வழி இணைத்துக் காட்டும் இன்பம் தமிழ்ச் சுவை தேர்வார்க்கே தெரிவதாகும்; இவ்வாறு கவிதைகளைப் படைப்பதற்கு ஆக்கி யோனுக்கு இருந்திருக்கக்கூடிய சைவசமயப் புலமையினையும் கிறிஸ்தவ திருமறையறிவினையும் நாம் மனங்கொள்ளல் அவசிய மாகும். ஆசிரியரது பரந்துபட்ட ஆசிரியப் பணியினதும், பத்திரா திபர் பணியினதும், சமூக அணுகுநோக்கினதும், சமய அணுகு நோக்கினதும் அழகுசான்ற தன்மைகளை நாம் அவதானிப்



**Mr. J. R. Arnold**



போமாக. இத்தகைய தனிச்சிறப்புக்கள் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளைக்கு மட்டுமே உரியதனித்தன்மைகளாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எந்தவொரு பல்கலைக்கழகந்தானும் செய்ய முடியாத ஆராய்ச்சி, இலக்கிய, சமயப் பணிகளை ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை தனியொருவராகத் தாமே செய்துள்ளார். நுண்மாணுழைபுலம் மிக்க சமகாலச் சிந்தனையாளர்கள் பலருக்கும் முன்னோடியாக, வழி காட்டியாக, செயற்றிறன் மிக்கவராக அவர் விளங்கியுள்ளார்.

எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகத்திலே ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் மூன்று பாடல்கள் மட்டுமே தற்போது இடம்பெற்றுள்ளன. அவரது பாடல்கள் கொண்டதொரு தொகுதி தனியாகத் தென்னிந்திய யாழ்ப்பாணப் பேராயத்தினால் வெளியிடப்பெறுவது சாலப் பொருத்தமானது. எனினும் இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க வேண்டியதும், இன்றும் எமது சபைகளில் இசைக்கப்படுவதுமான அவரது கீர்த்தனை ஒன்று இங்கு தரப்படுகின்றது.

வந்தனை

இராகம் :- காம்போதி ஆதிதாளம்

பல்லவி

வானம் புவி பாதாளம் மல்கும் சரமசரம்
வகுத்தும் நரனாய் வந்தாய்!

அனுபல்லவி

தேனார்ந்திடு தண்சோலை திகழுஞ் சீயோனின் றொல்லைக்
கோனான் தவிதுகுலக் கொழுந்தே — வானம்

சரணங்கள்

1 ஆதிக் கநாதியாகி, யகண்டா கண்டனுமாகிச்
சோதி மயமுமாகிச் சொரூ பானந்தமுமாகி
வேத வேதாந்தனான விமலா, வெம்பவந்திரென்
றோதி யுலகோரிட்ட ஓலங்காதினிற் கேட்டோ? — வானம்

2 சந்திர சூரியர் நிதம் வந்துன் புகழ் கொண்டாடச்
சந்ததங் கோடி தூதர் சிந்து சங்கீதம் பாடத்
தந்தையுடனோர் பத்ரா சனத்திலே கொலுவிரா
இந்தப் புவி யீடேற்றச் சிந்தையுட் காதலுற்றோ? — வானம்

3 பூவும் மணமுமென யாவும் வியாபியான
தேவனல்லேலூயா, யேகோவா, விம்மானுவேலென்
றாவலுடன் பேரின்ப சிவனியம் நிரம்ப
ஓவாதமு மடியார்க் கேவல் புரிவதற்கோ? — வானம்

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் பாடல்கள் எவ்வாறு தனித் தொகுதியாக வெளிவர வேண்டியது அவசியமோ, அவ்வாறே அவரது உரைநடை நூல்கள், குறிப்பாகப் "பாவலர் சரித்திர தீபகம்" பற்றிய ஆய்வுகளும் நூல்களாக வெளிவர வேண்டும். பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள், கலாநிதிப் பட்டம் பெற ஆய்வுகள் மேற்கொள்வோர் இக் கருத்துக்களை மனங்கொள்வரென நம்புகின்றோம். ஆசிரியராகவும், பத்திராதிபராகவும், பிரபலம் மிக்க நூல்களின் ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் வாழ்ந்த ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை 1895 ஆம் ஆண்டில் மறைந்தார். அவர் பூதவுடல் மறைந்தாலும் அவர் படைத்த பக்திப் பாடல்களும், ஆக்கிய அரிய நூல்களும் என்றும் நின்று மிளிருந்தகையன. இன்று ஈழத்திலும், தமிழகத்திலும் தமிழிலக்கிய ஒப்பியல் ஆராய்ச்சி வல்லுநராகக் கருதப்படும் எமது இனிய நண்பர் அமரர், பேராசிரியர் க. கைலாசபதி (1932 - 1982) தாம் மறைவதற்கு ஒரு ஆண்டு முன்னதாக, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மஞ்சரியின் Misallany நூற்றாண்டு (1981) மலரில் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை பற்றி எழுதிய கட்டுரையை இவ்வாறு நிறைவு செய்கிறார்.

"He was an exemplary Tamil scholar and teacher a Prolific writer, editor, author of poems and stories, an accomplished Public Speaker and above all a noble person. His contribution to 19th Century Ceyon Tamil Literature and to the modern movement in general is significant. The Colombo Tamil Sangam has brought out recently a new edition of The Galaxy of Tamil Poets (1975) with the copious notes contributed by Dr, P. Poologasingham. It is to be hoped that this will create renewed interest in the works of Sathasivampillai and a systematic evalution of the man and his contributions will become possible."

19 ஆம் நூற்றாண்டில் ஈழத்திலும், தமிழகத்திலும் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளைக்கு நிகராகப் பணியாற்றியவர்கள் எவருமிலர் என்பதனையே இந்நிறைவுரையும் நிறுவுகின்றது. அவரது பன்முகப்பட்ட பணிகள் மேலும் இறவா வரம் பெறக் கிறிஸ்தவ திருச்சபை தன்னாலான பங்களிப்பினை நல்குமாக!

# ஜெர்மையா எவாட்ஸ் கனகசபைப்பிள்ளை

" திருவாக்குப் புராணம்" என்னும் பாரிய செய்யுள் நூலையும், பல தனிப்பாடல்களையும், ஒரு நிகண்டு நூலையும் யாத்தளித்தவர் அளவெட்டியைத் தமதூராகக் கொண்ட ஜெர்மையா எவாட்ஸ் கனகசபைப்பிள்ளை அவர்களாவர். இவர் அளவெட்டியிலே சைவ வேளாளகுலத்தினரான வைத்தியநாதத்தம்பிரான் மரபிலே வேலுப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக 1815 - ம் வருடம் மாசி மாதம் 12 ம் தேதி பிறந்தார். இவரது பெற்றோரும் முன்னோரும் சைவசமயத்தவராயினும், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவசமயத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர்களாக விளங்கினர், சிதம்பரத்தில் வசித்துப் பெரும் புகழுடன் விளங்கியவரான சுப்பிரமணியத்தம்பிரான் இவரது தாய் மாமனாராவர். கனகசபைப்பிள்ளை வட்டுக்கோட்டை செமினரியிற் படித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை மிக்கவராக இவர் விளங்கினார். வட்டுக்கோட்டையில் அப்போது வசித்த Dr. Ward என்பவரிடம் ஆங்கில வைத்தியத்தை வெகுவிருப்புடன் பயின்றார். இவரது தந்தையாரோ புகழ் மிக்க தமிழ் வைத்தியராக விளங்கினார். அதனால் ஆங்கி வைத்தியத்திலும் பார்க்கத் தமிழ் வைத்தியமே புலவருக்குப் புகழ் சேர்ப்பதாக அமைந்தது.

கனகசபைப்பிள்ளை அவர்களுக்குத் தமிழ்ப் புலமை இயல்பாகவே கைவரப் பெற்றிருந்தது அவரது ஆக்கங்கள் அனைத்தும் பழந்தமிழ்ப் புலவர்களின் மரபு சார்ந்தனவாய், இன்றைய தலைமுறையினருக்கு இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாதனவாக இருப்பினும், அவற்றைத் தனித் தனியே தொகுத்து உரையெழுதிப் பதிப்பித்து வெளியிட்டால் வருங்காலக் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு அவை பெரும் பயனளிப்பவையாக அமையும்! அவர் செய்யுள்களில் வருணனை, சந்தம் இலக்கண வழுவின்மையென்பன நேர்த்தியாக அமைந்துள்ளன.

" திருவாக்குப் புராணம்" என்னும் நூலில் வேதாசமத்தின் சில பாகங்கள், சனன காண்டம், யாத்திரை காண்டம் ஆகிய இரு காண்டங்களில்,உற்பத்திப்படலம், வினை சூழ்படலம் ஆதியாம் 19 படலங்களிற் பாடப்பட்டுள்ளன. இவ்விரு காண்டங்களிலும் 1573 விருத்தங்கள் உள்ளன. மொத்தமாக இப் புராணத்திலே 1751 செய்யுள்கள் உள்ளன. இவராக்கிய செய்யுள் நூல்களில் திருவாக்குப் புராணமே தலையாயதெனலாம்!

அக் காலத்தில் கோப்பாயில் இருந்த வண. வீறென் என்பார். பிரசுரித்த "சமயப்பரீட்சை" என்னும் நூலுக்கும், அதன் ஆக்கத்திற்கும் கனகசபைப்பிள்ளை அவர்களே உந்து சக்தியா விருந்தவினார். அந்நூல் சைவ, கிறிஸ்தவ - சமய உண்மைகளை ஒப்பிட்டாராய்ந்து, தர்க்கரீதியாகக் கிறிஸ்தவ சமயத்தின் மேனிலையை நிருபித்து எழுதப்பட்டது!

கனகசபைப்பிள்ளை அவர்கள் சில காலம் சென்னை மாநகரில் அமெரிக்கன் மிஷனரிமாரின் தலைமையின் கீழ் தமிழ் அகராதி வேலையில் ஈடுபட்ட பின்னர், மானிப்பாயில் உள்ள அமெரிக்கன் மிஷன் அச்சியந்திரசாலையில் மேற்பார்வையாளராகவும், கோப்பாயில் உள்ள தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் கடமை புரிந்தார். அத்துடன் தமது பரம்பரைத் தொழிலான தமிழ் வைத்தியத்திலும் பிரகாசித்தார். இவர் சென்னையிலிருந்தபோது பல தமிழ்ப் பெரியார்களுடனும் பிரபுக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார். அவர்களில் ஒருவர் வேலூரில் அப்பொழுது வாழ்ந்த கண்டியரசனின் பேரனான அழகர் சாமி என்பவர். கனகசபைப் பிள்ளை அவர்கள் மன்னர் மரபிலே வந்த அழகாசாமி மீது பிரபந்தம் ஒன்றைப் பாடினார். பிரபந்தத்துடன் பின்வரும் சீட்டுக் கவிதையையும் எழுதி, அரசர் அழகர் சாமிக்கு அனுப்பி வைத்தார்.

நிறை நிலவு பொழியமுதகிரண சந்திரனென்ன
நின்றிலகு கின்ற கொடையாய்,
நேரலர் படைக்கடலை, வீரவேகங் கொண்டு நிருமூலமாக்கு
படையாய்,

நெடியதரு மைந்து மெழு முகிலு மிணையல்லவென
நித்தமருள்சின்ற கொடையாய்' நிலவலய மெங்கணும்
நிலவி நிலைபெற்றிலகு நிகரற்ற சீர்த்தியுடையாய்'
நிறை நிலவுதவழு முயர் பொறை பலவு மென வெளவு செங்கை
யுத்தண்டதீரா,

செயமாது குடி கொண்ட திண்புயாசலந் திருமாதுவக்கு
நெறியாய்,

தென்னிலங்கேச, வெழின்மன்னுமங்கசரூப, திறலழகர்சாமி
யெனுஞ்

சிங்கவேறனையவுத்துங்க, வுள்ளக்களி சிறந்திட மகிழ்ந்து காண்க
துறைநிலவுகலைவாரி கரைகண்டுயர்ந்துநின் – தொல்குலத்தரசர்
தம்பாற்றோமிலா நண்பு பெற்றோங்கு வைத்தியநாத சுகுணன்

குலத்துதித்தோன், துகளற்ற சீரளவை நகரத்து வரு கனகசபை
மிக்கதுன்றுபத்திதூண்ட நின் மாபெருமை பூண்ட சமுகம்
பெறச் சோர்விலாதெழுது நிருபம்,
முறைநிலவு மிறைமை பெறு முடி மன்னர் திலக நீ
முகமலர்ந்தகமுவந்தே
முளுமன்பாலணிய நீளுமின் பானவிசை மொய்த்தமடன் மாலை
தரவும்
முகதரிசனங்கண்டு - மிகுகரிசனங் கொண்டு முன்பெய்தவுங்
கருதிநின்
முன்னனுகு மென்றனக்கின்னருள் சுரந்தாழி மூதுலகினி
வாழியவே!,,

இச்சீட்டுக் கவிதையும், பிரபந்தமும் அரசர் அழகர் சாமியின் மனதை அள்ளிவிட்டது. கனகசபைப்பிள்ளை அவர்களை அழைத்து அவரைக்கொண்டே தமது சமுகத்தில் பிரபந்தத்தை அரங்கேற்றி அகமிக மகிழ்ந்தார் அழகர்சாமி. பொன்னும், பொருளும் வேண்டி யன கொடுத்துப் புலவரைப் புகழ்ந்தார். புலவரவர்கள் வேலூரிலிருந்து சென்னை திரும்பும் வழியில் எதிர்ப்பட்ட புலவர்களை அழகர்சாமியை நாடுமாறு இவ்வண்ணம் ஆற்றுப்படுத்தினார்.

''பூவின் மீதெவரும் மெய்ச்சு பா புல்லர் மீது சொல்லி
நெஞ்சுகால்
புண்கள் பட்டு வரு பாவலீரெனையோர் புரவலன் கொலெனவெண்ணிவீர்
யாவின் மீது முயரோவில் சீருறுமிலங்கை நாடரசியற்று பேர்
இசைவிளங் கழகர்சாமியண்ணலரும் ஈகை பெற்று வருபுலவன்
யான்
நாவின் மீதுலவுபாவினத்தகமை நன்குணர்ந்த தமிழறிவினான்
நாவலர்க்குதவுள்ளலங்கவனை நண்ணிலின்னபரிசெய்துவீர்
மாவின் மீதரசனந்த மத்திமிசை மருவு பேரரசனந்த நீள்
வைய மீதரசனந்த மென்று மவன் வாயின் முன்னடையாளமே!

இச் சீட்டுக் கவிதையொன்றே கனகசபைப்பிள்ளை அவர்களின் புல மைத் திறனையும், பழந்தமிழிலக்கியப் பரிச்சயத்தையும், கவி பாடுத்திறனையும் காட்டப் போதியதாகும். இஃது புலவராற்றுப் படையெனப் பழந்தமிழிலக்கியம் பகரும்! யாழ்ப்பாணத்துப் புலவர் பெருமக்களில் முன்னிடம் பெருந்தகைமையர் கனகசபைப்பிள்ளை. அவர் எமது தென்னிந்திய ஐக்கிய திருச்சபை (அமெரிக்கன்மிஷன்)

யினைச் சேர்ந்தவராகவும், சார்ந்தவராகவும் இருந்தமை நாம் பெற்ற பெரும் பாக்கியமே; தமிழுணர்ச்சியும், தமிழுரிமையுணர்ச்சியும் விறிட்டோங்கும் இக்காலகட்டத்திலே இத்தகைய புலவர் பெருமக்களது சமயப் பணிகளையும், தமிழ்ப்பணிகளையும் கிறிஸ்தவ சமுதாயம் அறிந்து பயன் செய்யவேண்டியதவசியம். கனகசபைப் பிள்ளை அவர்களுக்கு இருபுதல்வர்கள் இருந்தனர்; ஒருவர் டாக்டராகவும், மற்றவர் சுண்டிக்குளிப் பாடசாலையில் தலைமையாசிரியராகவும் கடமையாற்றினர்.

அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலாக வந்தபோது யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே ஆக இரு பெண்கள் மாத்திரமே எழுத வாசிக்கத் தெரிந்தவராக இருந்தனர்; அவர்களில் ஒருவர் கனகசபைப்பிள்ளை அவர்களின் தாயாராவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "புலமைக் காய்ச்சல்" அன்றும் இன்றும் மிக்குள்ள தமிழுலகிலே கனகசபைப்பிள்ளை அற்புதமான புலவராக விளங்கினார், ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, உடுவில் சந்திரசேகர பண்டிதர் ஆகியோர் எழுதிய நூல்களுக்கு அருமையான முன்னுரைகளைக் கவிதைகள் மூலம் அணி செய்து அகமகிழ்ந்தார். அவர் சிறந்த பேச்சாளர். நகைச்சுவை ததும்ப எந்நேரமும் உரையாற்ற வல்லவர். அவரது கருத்துக்களை ஏற்காதவர்கள் கூட அவரது வாசாலகத்தில் மயங்கித்திளைத்து இன்புற்றனர் என்பது வரலாற்று உண்மை.

கனகசபைப்பிள்ளை அவர்கள் சென்னையில் பணிபுரிந்தபோது அவருடன் பணிபுரிந்தவர் வீராசாமிச் செட்டியார். அவர் சற்று வயதானவர், நரைத்த குடுமியுடையவர். பிள்ளை அவர்களின் கவிதாசாமர்த்தியத்தைச் சோதிக்கும் பாவனையிலும், அவர் வாயிலிருந்து புதியதொரு பாடலைத் தோற்றுவிக்கும் வகையிலும் ஒருவர், 'செட்டியாருடைய நரைத்த குடுமியைச் சுட்டிக்காட்டி இதன்மீது ஒரு பாட்டுப்பாடுங்கள் என்று கேட்டார்.

"நாவலர் வியக்கப் பாவலர் நாவானன்கலைமதி
வளர்ந்தோங்கிப்
பாவலர் முகம் செம்பதுமமாக்குவிக்கும்
பான்மையோன் மாயனோடுளத்து
மாவலர் வீராசாமி வேள்குஞ்சி மலரயன்றேவி வெண்கஞ்சப்
பூவலர்ந்திருப்ப வதன்மிசையிருந்த
பொற்பெனப் பொலிந்திலங்குறுமால்!"

என்று பாடி அனைவரையும் ஆச்சரியத்திலாழ்த்தினார்!

வீராசாமிச் செட்டியார் குஞ்சி மேலும் வெண்மை பெற்றுப் பொலிந்தது.

புலமை விறு கதித்த கனகசபைப்பிள்ளை எப்போதுமே ஏசு பிரான் மலர்த்தாளினை மறவாத தன்மையர். பக்தி மிகுந்தவர். அதனை அவர் யாத்த திருவாக்குப்புராணத்தில்.

''அனைத்துலகுந் திருவாக்காலளித்தகில
சராசருமு மருட்சித்தத்தே
நினைத்துளவப் படியமைத்துக் காத்தழிக்குந்தனி
முதலா நிகரிலாதான்
தனைத்துதி செய்தெண்ணுகின்ற தங்கருமஞ்
சித்திபெறத்தருக வென்றே
இனைத்தென வொப்போதரியு விணைமலர்த்தான்
சிரத்தேந்தி யிறைஞ்சுவோமே!''

என்று பாடிப்பரவுகின்றார்.

கனகசபைப்பிள்ளை அவர்கள் தமது புகழ்பூத்த வைத்தியத் தொழிலின் நிமித்தம் பூநகரிப் பகுதிக்குச் சென்றிருந்தபோது எதிர் பாராதவிதமாக இரத்த அழுத்த நோய்க்காளாகி மயங்கி விழுந்து விட்டார். அதுவும் நீராடும்போது கேணியில் நிகழ்ந்தமையாற் கடுங்குளிர் தோஷத்திற்குமுள்ளானார். ஒருவாறு ஊருக்குக் கொண்டு வரப்பட்ட அவர் சில தினங்கள் செல்ல 1879-ம் வருடம் தை மாதம் 9-ம் தேதியில் கர்த்தருக்குள் ஐக்கியமானார். அவரது பூத வுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது மறைவு குறித்து 1879-ம் வருடம் தை மாதம் 19-ம் தேதி 'உதயதாரகை'ப் பத்திரிகை பின்வருமாறு எழுதியது:

''ஆ, அளவையம்பதித் தமிழ்ப்புலவன் ஸ்ரீ. வே. கனகசபைப் பிள்ளையின் மரணத்தால் யாழ்ப்பாணம் ஒரு சிரேட்ட அறிஞன், புலவன், வைத்தியன், வாசாலன், இலக்கண, இலக்கியன், கனவான், தனவானை இழந்ததென்று துன்புற்றுப் புலம்புகிறோம். ஆ, மரணமே, நீ பெருங் கொடியன். எத்தனையோ பேரை உன் வாயிலிருந்து இவர் தப்பவைத்தார் என்று வன்மஞ் சாதித்தா, எத்தனையோ பேர் பிரலாபிக்க இவரை இத்தனை சீக்கிரத்தில் மடித்தாய்? கெட்டி, கெட்டி, கெட்டி. உன் கெட்டித்தனம் என்ன? நீ கொடியனே கொடியன். ஆயிற் பிறந்தாருள் இறவாதவர் யார்? நீ செய்ததில் ஓர் திறமை இல்லை என்று எண்ணுகிறோம்!''

அன்றைய காலகட்டத்தில் கனகசபைப்பிள்ளை அவர்களது புகழ் சமுதாயத்தில் எவ்வளவுக்குப் பரந்திருந்தது என்பதற்கு ''உதய தாரகை''யின் இந்த அஞ்சலி வரிகள் ஆதாரமாக அமைகின்றன. 'தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை' என்று அறிஞர்கள் கூறுவர். கனகசபைப்பிள்ளை அவர்கள் தமிழுக்கும் தொண்டு செய்தார். இறையரசரான ஏசுபிரானுக்கும் உண்மையடியவராக விளங்கித் திருவாக்குப் புராணம் முதலான பல பனுவல்களைத் தந்தார்.

அவர் கையாண்ட செய்யுள் நடை இன்றைய காலத்துக்கு ஏற்றதாக இல்லாவிடினும் சங்கச் செய்யுள்களையும், ஐம்பெரும் காப்பியங்களையும் அரிதின் முயன்று கற்கும் தமிழுலகு பிள்ளையவர்களது உ ழதனைய தெய்வத் திருப்பாடல்களையும் தேர்ந்து கற்றுப் பயன் பறவேண்டும் என்பதே எமது வேணவா. அஃது நனவாகுக!

# வண. ஜே. எஸ். கிறிஸ்மஸ் அடிகளார்

கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதிலும், சபையினரை ஏசுபிரானின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழச் செய்வதிலும் இன்றுங்கூடப் பல பிரச்சனைகள் இருந்து கொண்டேயுள்ளன எனப் பல நற்செய்தித் தொண்டர்களும், போதகர்மாரும் குறிப்பிடுதலை நாம் மறக்க முடியாது! பிரச்சனைகள் எதுவும் இல்லாத காலம் ஒருபோதும் இராது. சமுத்திரத்தில் அலைகள் ஒருபோதுமே ஓயப்போவதில்லை என்பதனை இத்தகைய கூற்றுக்களுக்கு ஏற்றமாறுத்தரமாக நாம் எடுத்துக் கொள்ளலாம். கல்வியறிவும், விஞ்ஞான வசதிகளும், சமயங்களிடையே புரிந்துணர்வுகளும் மிகுந்த இக்காலகட்டத்திலேயே 'இவ்வாறான' தரவுகள் கிறிஸ்தவ திருச்சபையைப்பற்றியிருக்குமாயின் 170 ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலே சைவவேளாண்குடும்பத்திலே பிறந்து, அவ்வூரிலுள்ள உவெஸ்லியன் மிஷன் பாடசாலையிலும், பின்னர் வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷன் செமினரியிலும் கல்விகற்று, 1839ஆம் வருடம் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த ஒருவரின் நிலைமை எவ்வாறிருந்திருக்கும் என்பதனை யாங்கற்பனை செய்தே முதலிற் கண்டு கொள்ளுதல் வேண்டும். பின்னரே அவரது யதார்த்த பூர்வமான கிறிஸ்தவ திருத்தொண்டையும், வாழ்க்கையையும் வரலாற்று உண்மைகளுடன் ஒப்பு நோக்கி உணர்ந்திடல் வேண்டும்.

இவ்வாறு மகத்தான புரட்சி செய்த ஒரு தேவமனிதரே எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகத்தில் உள்ள (கீர்த்தனை இல. 311)

இராகம்: குரஞ்சி — ஆதிதாளம்

**பல்லவி**

உச்சித மோட்ச பட்டணம் போக
ஓடி நடப்போமே - அங்கே
உன்னத இயேசு மன்னவருண்டு, ஓயா இன்பமுண்டு!

**சரணங்கள்**

1. நரகத்தினகோரம் மனதினிற்கண்டு
நாமதை நீக்கி விட்டோம் - மிகவும்
நல்லவர் இயேசு அவரடி வாரும்
நற்கதி நீர் பெறுவீர்! — உச்சித

2. கப்பலிலேறி அக்கரை சேரும்
காரண தேசிகர் தாம் - அங்கே
கண்ணொளி கொள்ளாவிண்ணொளி மாநகர்
காதலுடன் தருவார்! — உச்சித

3. பாவத்தை விட்டோம் பரனருள் பெற்றோம்
பாக்கியம் நாமே பெற்றோம் - ஐயா
பார் முழுதாளும் இராசாக்கள் தாமும்
பார்க்கொணா மகிழ்வுற்றோம்...! — உச்சித

4. அன்பினால் அழைப்பார் ஆறுதல் சொல்வார்
அதிபதி இயேசுதுரை - அங்கே
இன்பங்களுண்டு, இயேசுவின் சமுகம்
என்றென்று மாறுதலே! — உச்சித

5. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய் - எங்கள்
சீவனதிபர் இயேசு நம்மகிபர்
சீயோன் இறை மனுவேல்...! — உச்சித

என்ற பாடலை இயற்றித்தந்துள்ள அருட் கவிஞர் ஜே. எஸ். கிறிஸ்மஸ் போதகர் அவர்களாவர். பாட்டுப் புத்தகத்தில் இவரது இப்பாடல் ஒன்றே இப்பொழுது சேர்க்கப்பட்டிருந்தாலும் அஃது மிகச் சிறந்த பக்திநயம் பயப்பதாகும்! அதன் சுவையினை அனைவரும் நுகருதற்காக அப்பாடல் முழுமையாக இங்கே தரப்பட்டுளது.

இருபத்து மூன்றுவரிகளில், பல்லவி, சரணங்கள் என இரு பகுதியாகக் கர்நாடக இசைக்கமைய எழுதப்பட்ட இக்கீர்த்தனையின் நயத்தை நாமனுபவிப்பது பேரின்பம் பயக்கின்றது.

கிறிஸ்மஸ் போதகருடைய குடும்பம் பெரியது. அவருக்கு நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமாக எண்மர் சகோதர, சகோதரிகளாக வாய்த்திருந்தனர். வட்டுக்கோட்டைச் செமினரியில் ஏழு ஆண்டுகள் கற்று அரங்கேறிய பின்னர், இவர் உடுவில் அமெரிக்கன் மிஷன் செமினரியில் இரு ஆண்டுகள் எழுதுவினைஞராகவும், கண்டி கொழும்பு ஆதியாமிடங்களில் பதினொரு ஆண்டுகள் அரச உத்தியோகத்தராகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் இவரது ஆன்மீக, உலகியல் வாழ்க்கையைப் பரிசோதிக்கும் பல சம்பவங்கள் நடைபெற்றன. 1844-1850 வருடங்களில் இவர் கொழும்பில் கடமையாற்றியபோது பெரும் பொருள்சம்பாதித்தார். குதிரைகளும், வண்டி

களும், பல்லக்குகளும் உடையவரானார். தமக்குகந்தவொரு சைவப் பெண்ணையே திருமணஞ் செய்து கொண்டார். எனினும் இளமையில் தான்கற்ற வேதசத்தியங்களை மறந்து விடுவது இவருக்கு இலகுவாக இருக்கவில்லை. இடையிடையே கிறிஸ்தவ திருமறையைத் தமது மன ஆறுதலுக்காகப்படிப்பதுடன், தமது மனைவிக்கும் எடுத்துரைத்து வந்தார். இடையில் இவர் கண்டிக்குச் செல்ல நேர்ந்தது. கொழும்பிலும், கண்டியிலும் இவருடைய மேலதிகாரிகளாக இருந்த ஆங்கிலேயர்களுடன் இவரால் ஒத்துப்போக முடியவில்லை. அவர்கள் எப்பொழுதும் இவரைப் பற்றித்தம் மேலதிகாரிகளுக்குப் 'பொய்யான அறிக்கைகளைக்' கொடுத்து இவர் மனம் பேதலிக்கச் செய்து வந்தனர். இச் செயல்களால் இவர் தாம் வகித்து வந்த அரச பதவியினைத் துறந்து விடவும் நினைத்தார். அன்றியும் இயேசு பெருமானின் திருவவதாரத்தைப்பற்றியும், அவர் ஏன் இம் மண்ணுலகிற்கு வந்து தம்மைச் சிலுவையில் அறையும்படி செய்ய வேண்டும் என்றும் சந்தேகங் கொண்டார்.

ஆனாலும் வேதப்புத்தகத்தை வாசிப்பதனை அவர் நிறுத்தவில்லை. நாளாக, நாளாகப் பிரச்சனைகள் அவரைச் சூழ்ந்து நெருக்கத் தொடங்கின. மாலை நேரத்தில் தன்னந்தனியராக, ஒரு மலையடிவாரத்திற்குச் சென்று கிறிஸ்தவ திருமறையை வாசித்துப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். இவ்வாறான ஒரு மாலைத்தியானித்தலின்போது "பவுல்" அடிகளார் எழுதிய ''அவரே மெய்யான இரட்சகர்......'' என்னும் தேவவாக்கை வாசித்துக் கொண்டிருக்கும் போது, தூய ஆவியானவரின் அருள் அவரைச் சூழ்ந்து கொண்டது. அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தாரையாக ஓடியது. கிறிஸ்துவே மெய்யான இரட்சகர் என்று முழு இருதயத்தோடும் விசுவாசித்து தம்மை அக்கணத்திலேயே ஆண்டவரின் அடியானாக ஒப்புக் கொடுத்தார்!

அதன் பின்னர் அவர்தம் இல்லத்திலும், வெளியிலும் ஏசுபிரானைப்பற்றிப் பகிரங்கமாகவே பிரசங்கிக்கத் தொடங்கினார். ஒழுங்கான குடும்ப செபக்கூட்டங்களை நடாத்தினார். அவற்றுக்குத் தம் நண்பர்களையும் அழைத்து அவர்களுக்கும் ஏசுபிரானை எடுத்துரைத்தார். அப்போது கண்டிக்கு வந்திருந்த அவரது மனைவியின் தம்பியாருக்கும் இயேசு பெருமானைப் பற்றிப்போதித்தார். ஆறு மாத காலம் கண்டியில் தங்கியிருந்த போதகரின் மைத்துனர் யாழ்ப்பாணம் திரும்பும்போது பூரணமான கிறிஸ்தவராக வந்து சேர்ந்தார். இவையெல்லாம் கேள்வியுற்ற போதகரின் மனைவியின் தாயார் கோபித்துச் சினந்தெழுந்து, போதகரைமட்டுமல்ல, அவரை

மருகராகத் தேடிக்கொண்ட, தன் கணவனையே ஆவேசமாகப்பேசித் தீர்த்தார். ஆனாலும் சில நாள்களுக்குள் வாந்திபேதி என்னும் நோய்க்கு அவள் இரையானாள். போதகரின் மைத்துனரும் தனது தாயார் இறந்த இரண்டு மாத காலத்துள் சுசரோகத்துக்கு இரையாகினர். எனினும் அவர் இறக்கும்வரை தாங்கொண்டிருந்த தேவ விசுவாசத்தை நெகிழவிடவில்லை போதகரின் மனைவியும், தனது தம்பியார் மரித்துச் சிலநாள்களுக்குள்ளேயே தமது இரண்டாங் குழந்தையைப் பிரசவித்த துன்பத்தினால் மரித்தார். அவரும் இறக்கும் வரை கிறிஸ்தவராகவே இருந்து மறைந்தார்.

இந்நிகழ்வுகளின் பின் போதகருக்கு மேலும் பல நெருக்கடிகள் நேர்ந்தன. அவர் நம்பியிருந்த சில அரச ஊழியர்களால் தமது கைப்பொருள்களையே அரசுக்கு இறுக்க நேர்ந்தது. அதனால் தாம் வகித்துவந்த பதவியைத் துறந்து, தம் மகனுடன் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

1855-ம் வருடத்தில் சேர்ச் மிஷனரி சங்கத்தினரின் கீழ் இரட்சகரைப் பிரசங்கிக்கும் வேலையைத் தேர்ந்துகொண்டார். 1855-64 வரையுள்ள ஆண்டுகளில் சுண்டிக்குளி, முகமாலை, நல்லூர், வேலணை ஆதியாமிடங்களில் அவர் திருத்தொண்டு புரிந்தார்.

1858-ல் போதகர் மறுமணம் புரிந்துகொண்டார். அப்பொழுது அவருக்கு இல்வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தவர், அவரது நெருங்கிய நண்பராக விளங்கிய போதகர் அங்கிற்றெல் அவர்களின் மைத்துனியும், உடுவில் மகளிர் கல்லூரியில் மிகப்பிரபல்யம் பெற்று விளங்கியவருமான யூலியா சிவநாமனம்மாள் என்பவராவர். இவர் போதகர் கிறிஸ்மஸ் அவர்களுக்குற்ற உயிர்த்துணைவியும், அவரது முதல் தாரத்து மகனான சாமுவேல் கனகரத்தினத்திற்குப் பெற்ற தாய்போலும் விளங்கினார். இவர் 1864-ல் அமெரிக்க மிஷன் ஊழியரானார்.

போதகர் வேலணையில் திருமறை ஊழியஞ் செய்துவரும் காலத்தில், வட்டுக்கோட்டையில் படித்துக் கல்வியிலும் பக்தி நெறியிலும் மிக்குயர்ந்து விளங்கிய கனகரத்தினம் என்னும் அப்பிள்ளையைத் தேவன் பதினான்கு வயதில் தம்மோடு சேர்த்துக்கொண்டார். அக்காலத்தில் நிலவிய வாந்திபேதி நோயும், அதனைப் பொருட்படுத்தாது, அந்நோயினால் பீடிக்கப்பட்டிருந்தவர்களுக்கு இப்பிள்ளை வீடு, வீடாகச் சென்று மருந்து விநியோகித்துப் பணிசெய்துவந்ததுமே அவரது சடுதியான மறைவுக்குக் காலாயிற்று! வேலணையில் போத



Rev. J.S. Christmas

சர் 1864 - 73 ஆண்டுகளில் பணிபுரிந்தார். ஆங்கிருந்து சாவகச் சேரிக்குப் பிரசங்கியாக அனுப்பப்பட்டார். ஆங்குதான் வண. டி. ரீமர் என்னும் மிஷனரியின் வேண்டுகோளுக்கமைய 1876 - 09 - 15ம் சபைக்குருவாக அபிடேகம் செய்யப்பெற்றார். சாவகச்சேரியில் 1873 - 81 ஆண்டுகளில் மிக ஊக்கமான தேவ ஊழியம் செய்தபின் னர் தெல்லிப்பழைச் சபைக்குருவாக 1881 இல் இடமாற்றம் பெற் றார். இச்சபையில் இருபத்து நான்கு ஆண்டுகள் உற்சாகமான தேவ ஊழியத்தை இயற்றிய பின்னர் 1904 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுத் தமது சொந்த வீடு அமைந்துள்ள அராலியில் வதியத் தொடங்கினார்.

போதகரின் இரண்டாம் திருமணத்தின் பயனாக மூன்று மகன் களுக்கும், ஐந்து மகள்களுக்கும் தந்தையரானார். ஐம்பது ஆண்டு கள் திருமறை ஊழியஞ்செய்த கிறிஸ்மஸ் போதகர் எந்தச்சபையில் கடமையாற்றினாலும் அவர் இருக்கும் இடம் 'பெத்தேல்' போன்று ஒளிருகிறது என்று பாராட்டப்பட்டுள்ளது. சபையார் அனைவரும் அவ ரைத் 'தேவனோடுநடமாடும்பக்தன்' என்றே அழைப்பராம். அவர் தமது பிள்ளைகளின் மீது எத்தகைய பரிவும் பாசமும் கொண்டிருந்தாரோ அவ்வாறே திருச்சபையின் உறுப்பினர் ஒவ்வொருவர் மீதும் கருணை கொண்டிருநதார். அவர், தமது முதல் மகன் கனகரத்தினம் தனது பதினான்காவது வயதில் மரணப்படுக்கையில் இருந்தபோது அனைப் பரிவுடன் பார்த்துக் கேட்ட கேள்வி ''மகனே, மரணத்துக்கு நீ பயப்படுகிறாயா?'' என்பதுதான்! அதற்கு அவர் பிள்ளையோ, ''எனக்கு மரிக்கப்பயமில்லை. மரித்த உடனே நான் என் இரட்சகர் சமுகம் போவேன்!'' என்றாராம் உடனே போதகர் செபம் செய்ததாக வும், அப்பொழுது அவர்கள் இருந்த அறையில் மின்னல் போன்றதோர் காட்சி தோன்றியதாகவும், போதகர் செபத்தை நிறைவுசெய்து தமது கண்களை விழித்துப் பார்த்தபோது ''மகனின் ஆவி பறந்து விட்டதைக்'' கண்டாராம்! இஃது போதகரதும், அவரைப் பின் பற்றியோரதும் உண்மையான பக்திநெறிக்கு ஒரு எடுத்துக்காட்டா கும் என்பதில் ஐயமேயில்லை!

கிறிஸ்மஸ் போதகர் தமது இளம் வயதிலேயே சகலவற்றிலும் உறுதிவாய்ந்தவராக விளங்கினார். மாணவனாக இருக்கும்போது எல்லாவகையான விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டார். தமது வாலிபப்பராயத்தில் தம்மை எதிர்த்துநின்ற சகலவற்றையும் துச்சமாக எதிர்த்துப் போராடினார். தமது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புக்கள் அவரைக் கடுமையாகப் பாதித்தபோதும் தேவகிருபையினால் அவற்றை எதிர்த்துநின்று வாகைசூடினார்.

இனிய கணவவர், அருமையான அப்பா, ஒப்பற்ற சபைப்போதகர், ஈடிணையற்ற நற்செய்திப் பேச்சாளர், கிறிஸ்தவ அருட் கவிஞர் என்ற நிலைகளில் அவரை இன்றும் நாம் தரிசிக்கின்றோம்.

போதகர் கிறிஸ்மஸ் எனும் நாமந்தாங்கிய அவர், அதற்கமையவே 1904-ம் ஆண்டு, கிறிஸ்மஸ் தினத்திலேயே மறுமைக்குள் பிரவேசித்தார்; அராலியூரில் அமைந்திருந்த தமது சொந்த வீட்டில்!

1905 - 01 - 05-ந் தேதியில் வெளியியான "உதயதாரகை"க் குறிப்பு கிறிஸ்மஸ் போதகரின் மறைவு குறித்து இவ்வாறு கூறுகிறது:-

"தெல்லிப்பழைச் போதகராய் நெடுங்காலம் தேவதொண்டு செய்து வயோதிபத்தினிமித்தம், அச்சபைப் பொறுப்பைவிட்டு இளைப்பாறியிருந்த கனம் கிறிஸ்மஸ் போதகரவர்கள் சென்ற மாதம் 25-ம் தேதியாகிய கிறிஸ்மஸ் பெருநாள் முடிவிலே, அராலியிலுள்ள தமது இல்லத்திலே, தமது பூலோக சிவியத்தை முடித்துப் பரமபத இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தனர். ............... தமது மரணங் கிட்டியிருந்ததை முன்னுணர்ந்தவர் போலப் பேசிய வசனம் கவனிக்கப்படத்தக்கது!"

வண. கிறிஸ்மஸ் அடிகளாரின் கீர்த்தனை இன்றும் இறை புகழோடு அவர் புகழ் பாடுகின்றது.

★

# பேரறிஞர் றொபேட் பிறெக்கன்றிட்ஜ்

எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகம் 1980-ம் ஆண்டு திருத்திய பதிப்பில், கவிஞர் றொபேட் பிறெக்கன்றிட்ஜ் யாத்த ஒரு பாடலே தற்போது இடம்பெற்றுள்ளது. கவிஞர் வேறு பல பாடல்களையும் யாத்திருக்கலாம். ஆனால் அவற்றைப் பாதுகாக்கத் தவறிவிட்டோம் போலத் தோன்றுகிறது! இயேசுபெருமானின் மாசற்ற பேரன்பையும், அளவிடற்கரிய அருளையும் அவர் யாத்துள்ள இக்கீர்த்தனை எமதுளமுருகிக் குழையுமாறு இவ்வாறு ஒலிக்கிறது!

இராகம்: சங்கராபரணம் ஏகதாளம்

பல்லவி

இயேசு நேசிக்கிறார்; இயேசு நேசிக்கிறார்
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மா தவமோ...?

சரணங்கள்

1) நீசனாமெனைத்தான் இயேசு நேசிக்கிறார்!
மாசில்லாத பரன் சுதன் தன் முழு
மனதால் நேசிக்கிறார்!

2) பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிறாரென
நவிலலாச்சரியம்!

3) வேதத்தாச்சரியம் வெகுவாய்த் தோன்றுகிலும்
நாதன் இயேசெனை நேசித்த செய்தி யெந்
நாளுமாச்சரியம்!

4) நாதனை மறந்து நாட்கழித்துலைந்தும்
நீதன்இயேசெனை நேசிக்கிறாரெனல்
நித்த மாச்சரியம்!

5) ஆசை இயேசென்னை அன்பாய் நேசிக்கிறார்
அதை நினைந்தவ ரன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன்!

6) இராசன் இயேசுவின் மேல் இன்ப கீதஞ்சொலில்,
ஈசன் இயேசெனைத் தாஹேசித்தாரென்ற
இணையில் கீதஞ் சொல்வேன் !

இக்கீர்த்தனை வரிசைகளில் கவிஞர் றொபேட் பிறெக்கன்றிட்ஜ் அவர்களின் முழு வாழ்க்கையின் அனுபவங்களும் எழுத்துக்கு எழுத்து வடித்துத்தரப்பட்டுள்ளன. மிக ஏழ்மையிலும், இன்னலிலும் உழன்ற அவரை இயேசு பெருமான் எவ்வாறு மனிதனாக்கினார் என்பதனை அவர் மனமுருகிப் பாடியுள்ளார். யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை யூரில் சைவ வேளாளர் குலத்து உதித்தவர் கவிஞர் பிறெக்கன்றிட்ஜ். ஆனால் அவர் சிறுவனாக இருக்கும்போதே தந்தையை இழந்தார். தாய் இளம்பெண்ணாக இருந்தமையால், தாயும், மகனும் பாட்டியின் அரவணைப்பிலேயே வாழவேண்டியிருந்தது. வறுமையின் கொடுமை அவர்களை வாட்டிவதைத்தது. உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றித் தவித்தனர். அக்காலத்திலேதான் கவிஞரின் தாயும், பாட்டியும் அமெரிக்கன் மிஷனரிமாராகிய வணக்கத்துக்குரிய எல். ஸ்போல்டிங், ஆர். ஹோஷிங்டன் ஆகியோரது நற்செய்திப் பிரசங்கங்களைச் செவிமடுத்தனர். அவர்கள் மனங்களில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. எனினும் அவர்கள் இம்மிஷனரிமார்களிடம் யாசித்து வந்தார்களே தவிர, இரட்சகரைப் பூசிக்கும் பேறு பெறவில்லை. மிக விரைவிலேயே பாட்டியார் காலமானார். அவர் தமது மரணத்தருவாயில் தமது விதவையான மகளின் கையைப்பிடித்து வண. ஸ்போல்டிங் அவர்களின் கையில் ஒப்புக்கொடுத்து, அவளையும், பிள்ளையையும் பாதுகாக்குமாறு வேண்டிக்கொண்டே ஆவிநீத்தார். அதனையேற்றுக் கொண்ட வண. ஸ்போல்டிங் அவர்களுக்குத் தாராளமாக உதவிசெய்தார். வண. ஹோஷிங்டனும் அவ்வாறே உதவினார். சிறுவனாக இருந்த பிறெக்கன்றிட்ஜ் அயலிலுள்ள ஒரு மிஷன் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். தாய்க்கும் வருவாய் பெறக்கூடிய சிறு வேலைகள் தரப்பட்டன.

''விளையும் பயிரை முளையிலே தெரியும்'' என்பதற்கமைய சிறுவன் பிறெக்கன்றிட்ஜ் கிராமப் பாடசாலையில் மிகத்திறமைசாலியாக விளங்கியதனால் தேர்வுகளில் முதன்மை பெற்றுச் சித்தியடைந்து உயர்நிலைக் கல்வியையும் நிறைவுசெய்து வட்டுக்கோட்டைச் செமினரியில் சேர்ந்து கற்கலானான்.

வட்டுக்கோட்டைச் செமினரி 1823-ம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமாரால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியாகும்.

வட்டுக்கோட்டைச் செமினரியில் கற்கும் காலத்தில் தமிழ், ஆங்கிலம், இறையியல் முதலான பாடங்களில் முதன்மை பெற்று விளங்கினார். இவரது கல்விக்கான செலவை 'பால்டிமோர் பெண்கள் சங்கத்தினர்' வழங்கினர். செமினரியிற் படிக்கும் போதே இயேசுபிரானின் இன்னருளுக்காளாகி இவர் ஞானஸ்நானம் பெற்றார். மிகத் திறமைசாலியான இவர் தேசப்படங்களை வரைவதிலும் மகா நிபுணர். இவர் வரைந்த தேசப்படங்கள் மிஷன் பாடசாலைகளில் புவியியல், வரலாறு பாடங்களைக் கற்பித்தலுக்குப் பேருதவி புரிந்தன. பட்டதாரியானதும் செமினரியிலேயே ஏழு வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தார். முதலாவது அமெரிக்கன் மிஷன் ஆணையாளர் குழுப்பிரதிநிதிகளின் யாழ்ப்பாண விஜயத்தின் பெறுபேறாக வட்டுக்கோட்டைச் செமினரி 1855ம் ஆண்டில் மூடப்பட்டது அதற்குப் பதிலாக வேதபோதனா வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது!

வட்டுக்கோட்டைச் செமினரி மூடப்பட்டபோது கவிஞர் பெருங் கிலேசமுற்றார். ஆறு மாதகாலம் தமதுரான தெல்லிப்பழையில் பிரசங்கியாராகக் கடமையாற்றினார். ஆனாற் கல்விப்பணியையே அவர் மனம் நாடியது. கல்விப்பணிக்கூடாக அதிகமானோரைத் தமது இரட்சகரின் பக்கமாக்கலாம் என்று அவர் திடமாக நம்பினார். அவரின் விடாமுயற்சியாலும் சுதேச கிறிஸ்தவ பிரமுகர்களின் இடையறாத தூண்டுதல்களாலும், ஆதரவினாலும் 1856ம் ஆண்டு வட்டுக்கோட்டை ஆங்கில மகாவித்தியாலயம் தொடக்கப்பட்டது. கவிஞர் பிறெக்கன்றிட்ஜ் அவர்கள் அதன் அதிபராசப் பதினான்கு ஆண்டுகள் பதவி வகித்து அரும்பணியாற்றினார். அவ்வித்தியாலயத்திலிருந்து வெளிப்போந்தவர்களே பின்னாளில் பிரபலம் பெற்றவர்களான வண. டபிள்யூ. டி. நைல்ஸ், வண. ஹோஷிங்டன், வண. பாக்கஸ், உவில்லியம் மேதர், மாஷல் ஹோஷிங்டன் முதலியோராவர்.

கவிஞரோடு செமினரியிற்கற்ற சக மாணவர்களில் வண. பி. எச். றைஸ், நீதிபதி உவைமன், யாழ்ப்பாணக்கல்லூரித் தலைமை ஆசிரியரான ஹன்ட், உடுவில் மகளிர் கல்லூரித் தலைமையாசிரியரான பேஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

1870-ல் இலங்கையரசின் கல்விப்பகுதியினர் கவிஞர் பிறெக்கன்றிட்ஜ் அவர்களைக் கல்வி அதிகாரியாக நியமித்தனர். இலங்கையின் பாதிப்பகுதிக்கு அவர் கல்வி அதிகாரியாக இருந்தார். அந்தக்கால கட்டத்தில் இருநூறு பாடசாலைகள் அவர் பொறுப்பிலிருந்தன. இன்றைய வட, கிழக்கு மாகாணங்கள் முழுமையாக அவரது மேற்பார்வையிலிருந்தன. இதனால் கவிஞர் பிறெக்கன்றிட்ஜ் கல்விப் பணியுடன் நற்செய்திப்பணியினையும் மிகவும் 'லாவகமாக' மேற்கொள்ள முடிந்தது.

இளைய தலைமுறைக்கு, எமது முந்தைய கிறிஸ்தவ தமிழ்க்கவிஞர்களை அறிமுகப்படுத்தும்போது, அப்பணியை மிக்க பொறுப்புணர்வுடன் வரலாற்றுண்மைகள் பிறழாது, பிழையான தகவல்களையோ, திரிபுபடுத்தப்பட்ட புனைகதைகளையோ மனம்போன போக்கில் கொடுக்க முனையாது தவிர்த்தல் வேண்டும். 'கிறிஸ்தவ தமிழ்க்கவிஞர்கள்' என்ற பெயரில் சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் ஒரு நூலினை வெளியிட்டுள்ளது. அதனை எழுதியவர் மேற்படிசங்கத்தின் செயலாளரான வண. தயானந்தன் பிரான்ஸிஸ் என்பவராவார். அவர் ஏதோ 'கடன் கழிப்பதுபோல' ஈழத்து கிறிஸ்தவ கவிஞர்கள் இருவரைப்பற்றி தமது விருப்பின்படி எழுதியுள்ளார். அவ்வாறு எழுதப்பட்ட இருவரில் ஒருவர் கவிஞர் பிறெக்கன்றிட்ஜ் ஆவர். கவிஞரைப்பற்றிய சரியான விபரம் எதனையுமே தெரிந்து கொள்ளாது, மிகவும் பழிப்புக்கிடமான முறையில் தமது நூலில் 'ஏதோவெல்லாம்' எழுதியுள்ளார் வண. தயானந்தன் பிரான்ஸிஸ்!

1874-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20-ம் தேதி அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்திலுள்ள கிளீவ்லன்ட் என்னுமிடத்தில் ''பெண்களின் பிறதேச மிஷனரி ஊழியம்'' என்ற தலையங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திருமதி நான்ஸிலைமன் ஹோஷிங்டன் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெறும் மிஷனரி ஊழியம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார். அவ்வறிக்கையில் கவிஞர் பிறெக்கன்றிட்ஜ் அவர்கள் 1874-ம் ஆண்டு ஜூன் மாதம் 2ம் தேதி தமக்கு எழுதியுள்ள கடிதத்தை முழுமையாகச் சேர்த்துள்ளார்.

கவிஞர் பிறெக்கன்றிட்ஜ் அவர்கள் திருமதி. நான்ஸி ஹோஷிங்டன் அம்மையாருக்கு எழுதிய உள்ளத்தையுருக்கும் கடித வாசகங்களில் முக்கியமான சில பகுதிகள் இவை:

''எனது அன்புக்கும், வணக்கத்துக்குமுரிய அம்மா, தாங்கள் எனது நண்பரான வண. பி. எச். றைஸ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை கண்டதும் என்னுள்ளத்தில் எழுந்த உணர்வலைகளை வெளியிடமுடியாது திணறினேன். நீண்ட காலமாக (ஒக்டோபர் 1848 – ஜூன் 1874) எம்மிடையே தொடர்பில்லாமற் போய் விட்டது. இது வரையும் தங்களைக் காத்தருளிய கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

எனது அன்புக்குரிய அம்மா, யான் உங்களாற் கர்த்தருக்குள் ஈர்க்கப்பட்ட ஒரு இந்துசமயச் சிறுவன். இவ்வளவு காலமும் உங்

களுக்கு எழுதாதிருந்தமைக்கு என்னை மன்னிக்கவும். அதற்சாக யான் மிகவும் வருந்துகிறேன். என் அன்பான அம்மா, நான் உங்களையும் தந்தை வண. ஹோஷிங்டனையும் ஒரு போதுமே மறந்ததில்லை. எனது சக மாணவர்களுடன் எப்பொழுதும் உங்களிருவரைப் பற்றியும் உரையாடுவேன். புதிதாக இங்கு வரும் அமெரிக்கன் மிஷனரிமாரிடம் உங்கள் நலம் பற்றி விசாரிப்பேன். நான் ஒரு போதும் உங்களை மறந்து விடவில்லை.

நான் உங்களுக்குப் பல தகவல்களைக் கூறமுடியும். எதனை முற்கூறுவது என்று தெரியவில்லை! உங்களுக்கு 1848-ம் ஆண்டுக்கு முந்திய 'என் கதை' தெரியும், நான் வட்டுக்கோட்டைச் செமினரியில் ஆசிரியராகவும், பின் சில மாதங்கள் சபை ஊழியனாகவும், பின் பதினான்கு வருடங்கள் வட்டுக்கோட்டை ஆங்கில உயர் நிலைப் பள்ளி அதிபராகவும் கடமையாற்றிய பின்னர் இலங்கையரசின் துணைக் கல்வி அதிகாரியாகக் கடமை பார்க்கின்றேன்.

இடைக்காலத்தில் மூடப்பட்ட 'செமினரி' மீண்டும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதுடன் புத்துயிர் பெற்றுவிட்டதாகக் கருதுகிறேன். எமது செமினரியிற் கற்ற மாணவர்கள் பலர் இலங்கை, இந்தியா, பர்மா முதலான நாடுகளில் பொறியியலாளர்களாகவும், டாக்டர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும், நியாயவாதிகளாகவும் பணியாற்றுகிறார்கள். சிலர் வணக்கத்துக்குரிய குரவர்களாகவும் நற்செய்திப் பணிபுரிகிறார்கள்.

என் அன்பு அம்மா, மீண்டும் ஒரு கடிதம் எழுத முடியாத நிலை தங்களுக்கு ஏற்படுமானால், எமது கர்த்தராகிய இயேசு பெருமான் தமது உண்மையான ஊழியக்காரரான எனது அன்பு அம்மாவைத் தமது திருப்பாதங்களில் சேர்த்து கிருபையால் முடிசூட்டிப் பரலோக ராச்சியத்தில் சேர்த்துக்கொள்வாராக. இப்பொழுது நள்ளிரவு 12 மணி. எனது இன்றைய பணியை இத்துடன் நிறைவுசெய்கிறேன். எனது முழந்தாளில் நின்று எமது பரமதந்தையிடம் எனது அன்பு அம்மாவுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதும் வாய்ப்பினை நல்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

என் அன்பு அம்மா, உங்களை ஒருபோதும் மறவேன். நான் உங்கள் பணிவுள்ள மகன்!''

(ஒப்பம்) றொபேட் பிறெக்கன்றிட்ஜ்.

இவர் தாம் உண்மையான கிறிஸ்தவ தமிழ்க் கவிஞர் றொபேட் பிறெக்கன்றிட்ஜ், அவரது உள்ளத்தைப்போலவே அவரது கீர்த்தனைகளும் உள்ளத்தை உருக்கி எம்மையெல்லாம் ஏசுபிரானிடம் இட்டுச்செல்வனவாகும்!

# சி. வை. தாமோதரம்பிள்ளை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தமிழறிஞர்கள் பலர் தமிழகஞ் சென்று அரிய தமிழ்த் தொண்டாற்றியுள்ளனர் அவர்களில் தலையாயவர்கள் இருவரே. ஒருவர் ஆறுமுக நாவலர். மற்றவர் சி வை தமோதரம்பிள்ளை. நாவலர் சைவசமய வளர்ச்சிக்காகத் தம்மையர்ப்பணித்தவர். அவர் எழுத்தும், பேச்சும், செயற்பாடுகளும் சைவநெறி சார்ந்தனவாகவே அமைந்தன. அதனால் அவருக்குத் தமிழகத்திலோ, ஈழத்திலோ எதிர்ப்புகள் எழ இடமிருக்கவில்லை. ஆனால் நாவலரின் ஆளுமையாற் பெரிதும் ஈர்க்கப் பெற்ற சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு அவ்வாறான அமைதியான சூழ்நிலையமையவில்லை. நாவலரையும், சி. வை. தாமோதரம்பிள்ளையையும் உருவாக்கியதும், சைவ, தமிழ்ப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுழைக்கச் செய்ததும், அவர்களைத் தமிழ்நாட்டிற்கு முதலில் அறிமுகப்படுத்தி வைத்ததும் யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ மிஷனரிச் சூழலே என்பதனை எவ்வாற்றானும் மறுத்தலியாது. எனவே தமிழ்கூறு நல்லுலகு யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு என்றும் நீங்காக் கடமை பூண்டுள்ளது.

சி. வை. தாமோதரம்பிள்ளை 1832 இல் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் சைரஸ் கிங்ஸ்பரி வைரவநாதன். தாயார் பெயர் மேரி டேற்றன் பெருந்தேவியார். தந்தையார் சிறுப்பிட்டியையும், தாயார் ஏழாலையையும் தம் பிறந்தவூர்களாகக் கொண்டவர். 1833 பெப்ரவரி மாதம் 24 ஆம் நாள் தாமோதரம்பிள்ளை ஞானஸ்நானம் பெற்று சாள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம்பிள்ளை என்னும் நாமம் பெற்றார். இவரது தந்தையாரான வைரவநாதன் வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷன் செமினரியிற் படித்த காலை 1825 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் தேதி கிறிஸ்தவ மதத்தினைத் தழுவினார். தாயார் உடுவில் மகளிர் கலாசாலையிற் பயின்ற காலை 1830 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 20 ஆம் தேதி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். இத்தம்பதிகளின் மூத்த புதல்வரே தற்போது சி. வை. தாமோதரம்பிள்ளை என்று போற்றப்படுகின்ற சாள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம்பிள்ளை ஆவர்! வட்டுக்கோட்டைச் செமினரியிற் பயிற்சி பெற்ற சைரஸ் கிங்ஸ்பரி வைரவநாதன் பண்டத்தரிப்பு அமெரிக்கன் மிஷன் பாடசாலைத் தலைமையாசிரியராகவும், பிரசங்கியாராகவும் கடமையாற்றினார். இவரது மூத்த புதல்வரான சாள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம்பிள்ளை தமது ஆரம்பக்கல்



Mr. C.W. Thamotharampillai

வியை சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரிடமும், தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் கலாசாலையிலும் பெற்றார்.

பின்னர் 1844-10-12 தேதியில் வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷன் செமினரியிற் சேர்ந்து கற்றார். கல்வியில் மிகத்திறமையாள ராக மிளிர்ந்தார். தம்முடன் கற்ற மாணவர்களின் பெருமதிப்பை யும், நட்பையும் பெற்றிருந்தார். அத்தகையவர்களில் ஒருவரான வேலுப்பிள்ளை என்பார், சி. வை. தாவின் இறுதிக்காலம் வரை அவரது இனிய நண்பராக விளங்கியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது!

தாமோதரம்பிள்ளை தமது இருபதாவது வயதில் கோப்பாய் போதனாவித்தியாசாலையில் ஆசிரியராகச் சேர்ந்தார். சில காலஞ் சென்றதும் தமிழகத்திலுள்ள அறிஞர்களின் அழைப்பையேற்று ஆங் குச் சென்றார். நாவலருக்கு உதவி செய்த பேர்சிவல்பாதிரியாரே தாமோதரம்பிள்ளைக்கும் சென்னையில் ஆதரவளித்தார். தாம் நடாத்திவந்த ''தினவர்த்தமானி'' என்னும் பத்திரிகையின் ஆசிரி யராகத் தாமோதரம்பிள்ளையை நியமித்தார். தினவர்த்தமானி ஆசிரியரான தாமோதரம்பிள்ளை தமது முழுத்திறமையினையும் காட்டியுழைத்தமையால் சென்னை நகரிலுள்ள பெருமக்கள் பலர தும் கவனிப்புக்கு இலக்காயினர். உயர் பதவிகளிலிருந்த ஆங்கிலே யர்கள் சிலர் தாமோதரம்பிள்ளையிடம் தமிழ் கற்கலாயினர். அவர் களின் ஆதரவினால் தாமோதரம்பிள்ளை சென்னை இராசதானிக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் பதவி பெற்றார். சென்னைச் சர்வகலா சாலையிற் சேர்ந்து படித்து பீ. ஏ. பரீட்சையில் சித்தி பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டதாரிகள் இருவர். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் சி. வை. தா. மற்றையவர் கறோல் விசுவநாதபிள்ளை. இவர்கள் 1857ல் சித்தியெய்தினர். இவரது அசாதாரணத் திறமைகளைக்கண்டு அதிச யித்த சென்னைப் பல்கலைக்கழகத்தினரும், உயரதிகாரிகளும் இவ ரைக் கணக்காய்வாளர் பதவியிலமர்த்திச் சிறப்பித்தனர். பின்னர் B. L. பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

இயல்பாகவே தளராத தமிழ்க்காதல் கொண்ட இப்பெரியார் தமக்குக் கிடைத்த உயர் பதவிகளைத் தளமாகப் பாவித்து உலகம் வியக்கும் வகையான தமிழ்தொண்டு செய்யத்தலைப்பட்டார். தமது சொந்த வாழ்க்கையில் பல்வேறு திருப்பங்களை இவர் சந்தித்திருந் தார். வட்டுக்கோட்டைச் செமினரியிற் படித்தபோது தமது நண் பர் ஒருவரின் உறவினரான வள்ளியம்மை என்னும் பெண்ணை முத

லில் மணமுடித்தார். இருபிள்ளைகள் பெற்ற பின்னர் அப்பெண் மணி இறந்து போக, அவரது சகோதரியான நாகமுத்தம்மாள் என் பவரை மணஞ் செய்தார். இத்திருமணத்தின் பேறாக அவருக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் ஒருவரே பின்னாளில் பிரபலம் பெற்று விளங்கிய பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகர் என்பவ ராவர். சில ஆண்டுகளில் நாகமுத்தம்மாளும் இறந்து போக 1890ல் மூன்றாவது முறையும் திருமணஞ் செய்து கொண்டார். அதன் பேறாக அவருக்குப் பின்னரும் இரு குழந்தைகள் கிடைத்தன!

ஆசிரியர், பத்திரிகாசிரியர், கணக்காய்வாளர், நீதிபதி முதலான பல உயர் பதவிகளை வகித்தும் அவர் பெயரை நிலைநாட்டியது, அன்றும் இன்றும் அழியாதிருப்பது, அவர் பதிப்பித்துத்தமிழுலகிற் குத் தந்த பெருநூல்களே! தமிழ்நூல்களைப் பதிப்பிக்கும் பணிக்கு இடையூறு நேரக்கூடும் என்பதற்காகத் தமக்குக் கிடைக்கவிருந்த புதுக்கோட்டை அரசரது, முதலமைச்சர் (திவான்) பதவியையே வேண்டாம் என்று உதறித் தள்ளியவர் தாமோதரம்பிள்ளை! செல் லுக்கு இரையாகிச் சிதைந்த பல ஏடுகளைத்தேடி தமிழ் நாடெங் கும், பட்டிதொட்டியெங்கும் பயணம் செய்தவர் அவர். புதுக் கோட்டை நீதவான் பதவியை அலங்கரித்தவர்.

அன்றைய தமிழகத்தின் நிலைமையே வேறு. பாரிய பழந்தமிழ் நூல்கள் யாவும் ஒரு சில பண்டிதர்களிடமும், மடாதிபதிகளிடமும் உறங்கிக்கிடந்தன. ஏட்டுருவில் கிடந்த அவை நாளுக்கு நாள் செல்லுக்கு இரையாகிச் சிதைந்து போவது குறித்து யாரும் மனங் கவன்றாரல்லர். இந்நிலை தாமோதரம்பிள்ளை அவர்களைத் தத் தளிக்க வைத்தது. ஆறுமுகநாவலரின் அன்புக்குப் பாத்திரமான அவர், நாவலர் காட்டிய வழியில் மேலும் ஒரு படி முன் சென்று ஏடு களாய்ச் சிதைந்து கிடந்த பழந்தமிழ் நூல்கள் அனைத்தையுமே அச்சுவாகனமேற்றித் தமிழன்னையை அலங்கரிக்க விரும்பினார். இவ்வவாவினால் அவர் மிகத்துயருற்றார். பழந்தமிழ் ஏட்டுச்சுவடி களை வைத்திருந்தோர் அவற்றைத் தாமோதரனாரிடம் தரத்தயங் கினர். 'புனிதங் கெட்டுவிடும்' என்று கூடப் புலம்பினர்! ஆதீனங் களையும், மடங்களையுஞ் சார்ந்து நின்ற, தமிழ் மட்டுமே தெரிந்த புலவர்கள் 'தாமே அந்நூல்களை அச்சுவாகனமேற்றுவோம்' என்று அடம்பிடித்தனர்! சில சமயங்களில் மட்டும் தாமோதரம்பிள்ளைக்கு உதவிய ஆதீனங்கள், பல தடவைகளில் தம்மைச் சார்ந்து நின்ற புலவர்களைக் கொண்டு அவர் முயற்சிகளுக்குத் தடங்கல்கள் செய் தன. ஆனால் தாமோதரனார் இவற்றுக்கெல்லாம் தளர்ந்துவிட வில்லை. அவரது தமிழ்க் காதலும் தணியவில்லை!

தமிழகத்திலேயே பிரபல பதிப்பாசிரியர் என்று அன்றும் இன்றும் போற்றப்படும் உ. வே. சுவாமிநாதையர் தாமோதரனாரோடு உள்ளொன்றும் புறம்பொன்றுமாக' நடந்துகொண்டார். பல தடவைகளில் தாம் தப்பும் தவறுமாகப் பதிப்பித்த நூல்களின் பதிப்புரைகளில் தாமோதரனாரை மறைமுகமாகச் சாடியுள்ளார். இவரைப் போலவே ஈழத்தைச் சேர்ந்தவரும் அப்பொழுது திருவாடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கியவருமான சபாபதி நாவலரும், நல்லூர் வண. ஞானப்பிரகாச சுவாமிகளும், தமிழகத்து வீராசாமி முதலியாரும், இத்தகையர் வேறு சிலரும் தாமோதரனாரின் தமிழ்நூல்கள் பதிப்பித்தல் முயற்சிகளுக்குத் தடைக்கற்களாக விளங்கியதுடன் அவரை இழித்தும், பழித்தும் எழுதிப் பேசினர்! ஆறுமுகநாவலர் எவ்வளவுதான் தாமோதரம்பிள்ளையை ஆதரித்து நின்றபோதும், அவரை எதிர்த்து நின்றவர்கள் ''அவர் ஒரு கிறிஸ்தவர், சந்தர்ப்பவாதி, ஆங்கில மொழியின் பக்தர்'' என்றெல்லாம் அவதூறு செய்தனர். இதனை எளிதிலுணர்ந்துகொண்ட தாமோதரனார் தம்மைத் தாக்கியவர்களுக்கும் பல வழிகளில் உதவினார். குறிப்பாகச் சாமிநாதையருக்கும், சபாபதி நாவலருக்கும் அவருதவியது வரலாற்றுண்மைகளாகும்!

தமிழ் வளர்த்த தாமோதரனார் 'தடக்குற்றது' ஒரே இடத்திலேயே என்று நான் கருதுகின்றேன்! தமிழ்க்காதல் வேறு. சமயப் பின்னணி வேறு என்பதனை அவரால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அத்துடன் நாவலர்பாற்கொண்ட பிரேமையும் அவரை அலைக்கழித்துள்ளது. 'சைவமும் தமிழும் ஒன்று' என்று மருண்டமையாலேயே' தாமோதரனாருக்கு ஈழத்திலும் எதிர்ப்பு எழுந்து, அவர் புகழை மறைத்து, 'சாதாரணர்களை' வானளாவ உயர்த்தி வைத்தது. பரம்பரைக் கிறிஸ்தவரான தாமோதரம்பிள்ளைக்கு இந்நிலை ஏற்பட்டது துரதிட்டமே!

இந்நிலைமைகள் தாமோதரனார் உள்ளத்தில் பல மோதல்களை உருவாக்கின போலும்! அதனாலேயே ஒன்றுக்கொன்று முரணான சில நூல்களையும் அவரால் எழுதநேர்ந்தது. அவர் சுயமாக எழுதின நூல்களாவன :- சைவமகத்துவம், ஆதியாகமகீர்த்தனை, விவிலியவிரோதப்பாயிரம், ஆறாம் வாசகம், ஏழாம் வாசகம், கட்டளைக்கலித்துறை, வசனசூளாமணி, நட்சத்திரமாலை என்பனவாம். தாமோதரனாருக்கு எழுந்த எதிர்ப்புகள் மூலமும், அவர் எழுதிய நூல்கள் மூலமும் அவர் தமது இறுதிக்காலம் வரை 'கிறித்தவரா? சைவரா? என்ற அகப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாதவராய், நாவலர் காட்டிய வழியை மட்டும் பின்பற்றிச் சென்றமையினை ஆய்வாளர் தெரிந்துகொள்வர்.'

சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்த பழந்தமிழ் நூற் பட்டியல் வருமாறு:-

1. நீதி நெறி விளக்கம் 1854 ஆம் ஆண்டு
2. தொல்காப்பியம் (சேனாவரையம்), (சொல்லதிகாரம்) 1868 ,,
3. வீர சோழியம் 1881 ,,
4. தணிகைப் புராணம், இறையனாரகப் பொருள் 1883 ,,
5. தொல்காப்பியம்-பொருளதிகாரம் 1885 ,,
6. கலித்தொகை 1887 ,,
7. இலக்கண விளக்கம், சூளாமணி 1889 ,,
8. தொல்காப்பியம்-சொல்லதிகாரம் (நச்சினார்க்கினியம்) 1892 ,,

சாமிநாதையர், சபாபதிப்பிள்ளை ஆகியோரின் பதிப்பாளர், பத்திரிகையாளர் முயற்சிகளுக்கு வாழ்த்தும், பொருளும் வழங்கியுள்ளார் தாமோதரானார்! அவர் விசாலமான மனப்பாங்குடையவர், "தமக்குத் தெரிந்தவற்றை மட்டும் எவ்வித ஆய்வுமின்றி எழுதிவிட்டு" ஏனைய பதிப்பாசிரியர்கள் மீது காயுந்தன்மை கடுகளவுமில்லாதவர்! ஒவ்வொரு நூல்களின் பதிப்புரையும் தாமோதரனாரின் விஞ்ஞான ரீதியான தமிழாய்வு மனப்பான்மைக்குக் கட்டியங்கூறும்.

இதனாற்றான் பெரும் புலவர்களான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், முருகேசபண்டிதர், சூரியநாராயணசாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) வி. கலியாணசுந்தரமுதலியார், பேராசிரியர்கள் எஸ். வையாபுரிப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற பலர் தாமோதரனாரின் தமிழ்த் தொண்டினைப் பல படப் பாராட்ட நேர்ந்தது. 1875ல் இராவ்பகதூர் பட்டம் பெற்று, சென்னை மாநகரையே தமது வாழ்விடமாக மாற்றிக் கொண்டிருந்த தாமோதரனார் தமது தாயாரின் மீது நீங்காப் பாசமுள்ளவர். அதனாற் போலும் திருவாட்டி மேரி டேற்றன் பெருந்தேவியார் வைரவநாதன் நினைவாக 1876ம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் நாள் ஏழாலையில் "ஏழாலை சைவப் பிரகாச வித்தியாசாலை' என்னும் பெயரில் ஒரு பாடசாலையைத் தோற்றுவித்தார். அப்பாடசாலையில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும், முருகேசபண்டிதரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். பாடசாலை நிர்வகித்தல், ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்கல் யாவற்றையும் தாமே ஏற்றுக் கொண்டிருந்தார். 22 ஆண்டுகளாக

1898ஆம் ஆண்டு வரை அருங்கல்விப்பணி செய்த இப்பாடசாலை மூடப்பட நேர்ந்ததும் துரதிட்டமே!

சி. வை. தாமோதரம்பிள்ளை பாடிய கீர்த்தனை ஒன்று, இன்றும் எமது திருச்சபைப் பாட்டுப்புத்தகத்தில் உள்ளது. இப்பொழுதும் நாம் அதனை இசைத்து வருகிறோம்! மனங்கவரும் அக்கீர்த்தனை இதுவே!

**கிறிஸ்துவைப் பின்செல்லல்**

தன்யாசி ராகம் — ஆதிதாளம்

பல்லவி

எருசலை நாயகர் தரிசனமதை நான்
எப்போ காண்பேனோ......?

அநுபல்லவி

மரிசுதனாய் வந்து பரிசனஞ் சூழத்
துரிச முண்முடியோடோர் குருசது சுமந்த — எரு

சரணங்கள்

1) நித்த நிருமல நிராமய போதன்
நெடிய வினைகள் தொலைத்திட வந்த பாதன்
சத்திய மறை புகழ் சற்குணாதீதன்
தனி முதலருள் சுதனெனும் இயேசுநாதன் — எரு

2) அன்பருக்கெளிய வனாய் வரு பாவன்
அமரர்க்கரியபரன் குமரனற் சீலன்
இன்பசாகரத்தில் எமை விடுமூலன்
இகபரசித்தியரு ளிம்மானு வேலன் — எரு

3) பாவங் கதிர் முன்னெதிர் பனியென வோட
பாசங்களுடன் வரு பணியென வாட
மேவும் பரிசுத்தாவி விண்ணொளி நீட
வேத கீத ஒலி மோதப் பண்பாட — எரு

இப்பாடல் மூலம் அவரது சமய நிலையை உய்த்துணரலாம்!

தாமோதரம்பிள்ளையின் பண்புகளைத் தொகுத்துப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பின்வருமாறு கூறுகிறார்.

''நம்மைப் போலக் குடும்பச் சூழலில் வாழ்ந்தவர். அவலச் சுவையால் தூயதான மனம் படைத்தவர். மெய்யுணர்வு தந்த குர வரை மறவாத மனத்தவர். தமிழ் மரபு பிறழாமற் கற்றவர். சைவக் கொள்கைகளில் ஈடுபட்ட உள்ளத்தவர். கடவுள் வடிவங் களிற்றிளைத்த மனப்பண்பு பெற்றவர். தமிழ் நூலைத் தேடி பலைந்து வெளியிடுந்தொண்டிற்கெனவே வாழ்ந்த தமிழர். தமிழ்ப் புலவரைப் பெரிதும் போற்றி, அவர் மறைவிற்கேங்கும் கசிந்த சிந் தையர். செய்ந்நன்றி மறவாத சீரியர். பொறாமைப் பேய்களிடையே தமிழ்ப்பொழுது விடிவதைக் கூறி நின்று அமைதி கொண்டவர். பரந்த நோக்கத்தின் சிறந்த பண்பாடே வடிவானவர்!''

அவரே "Ceylon and Tamil" என்னும் கட்டுரையில் மேலும் கூறுகிறார்.

"The first graduate of the Madras University a Ceylon Tamilian C. W. Thamodarampillai. He edited Tholkappiyam the earliest grammer in Tamil and other works of Tamil Literature. His scholarly edition of the Sangam work Kalithokai has been a model for subsequent edition."

*1990 - 01 - 01* தேதியில் தமிழ் வளர்த்த, கிறிஸ்தவ பாரம்பரி யத்தில் உதித்த சி. வை. தாமோதரம்பிள்ளை மறைந்தபோது, அவரது உழுவலன்பரான, பரிதிமாற்கலைஞர் எனப் பெறும் வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், இவ்வாறு கூறிக்கவன்றார்;

''காமோது வண்டார் கடி மலர்த்தேன் கட்டுதல் போல்
நாமோது செந்தமிழில் நன்னூல் பல தொடுத்த
தாமோதரம்பிள்ளை சால்பெடுத்துச்சாற்றிட யார்
தாமோதரமுடையார், தண்டமிழ்ச் செந்நாப்புலவீர்!''

பரிதிமாற் கலைஞருடன் சேர்ந்து நாமும் இவ்வாறே தமிழ் வளர்த்த தாமோதரனாருக்கு அஞ்சலி செலுத்துவோம்!

# புலவர் எஸ். எஸ். எரேமியா

இறையருட் கவிதைகள் புனைவதிலும், இனிய கதாப்பிரசங்கங்கள் செய்வதிலும் வல்லவர் எஸ். எஸ். எரேமியாப் புலவர் அவர்கள். இவர் முதலில் வட்டுக்கோட்டை வேத போதனா வித்தியா சாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவரது மேதாவிலாசத்தை முதலிற்கண்டறிந்தவர் வணக்கத்துக்குரிய டபிள்யூ. ஈ. டிறீமர் அவர்களாவர். (1869—1878) இவர் வட்டுக்கோட்டை, உடுப்பிட்டி, சாவகச்சேரித் திருச்சபைகளில் மிஷனரி ஊழியஞ் செய்தவர். தமிழ் மொழியிலும், தமிழ் மக்களிடத்தும் பேரன்பு பூண்டவர். மிஷனரியாக ஊழியம் புரிந்த காலத்திலேயே தமிழ்மொழியை முயன்று கற்றுத் தேறியவர். ஆங்கிலக் கீர்த்தனைகளைப் பாடுவது போலவே, தமிழ்க்கீர்த்தனைகளையும் இசையுடன் பாடுவதில் வல்லவர்.

எரேமியாப் புலவரது தமிழ்ப்புலமையை நன்கறிந்து அவரையும் தமது மிஷனரி ஊழியத்திற் சேர்த்துக் கொண்டார். புலவரின் இனிய கீர்த்தனைகளும், வளமான சாரீரமும் வண. டிறீமர் அவர்களது நற்செய்திப்பணிக்குப் பேருதவி புரியலாயின. வட்டுக்கோட்டை, உடுப்பிட்டி, சாவகச்சேரி திருச்சபைகளில் எரேமியாப்புலவர் பல கிறிஸ்தவ கதாப்பிரசங்கங்களை வண. டிறீமர் அவர்களது ஆதரவுடன் நடாத்தி மக்களை மகிழ்வித்ததுடன், அவர்களை இயேசுபெருமானிடத்து ஆற்றுப்படுத்தவும் செய்தார்.

வண. டிறீமர் அவர்களைத் தமிழ்மக்கள் 'பாதிரியார் தருமர்' என்றே அழைப்பர். அவ்வளவுக்கு மக்களிடம் நெருங்கிப் பழகி நற்செய்திப்பணி புரிந்த அவர், எரேமியாப்புலவரைத் தமது 'வலதுகரமாகப்' பாவித்ததில் வியப்பேதுமில்லை! வண. டிறீமர் தாயகந் திரும்பிய (1878) பின்னர் மீண்டும் இங்குவர முடியாது சுகவீனரானார். ஆனால் அவரால் நற்செய்திப் பணியில் ஊக்குவிக்கப்பட்ட எஸ். எஸ். எரேமியாப்புலவர் தொடர்ந்து ஆசிரியப்பணியும், நற்செய்திப்பணியும் மேற்கொண்டார். அவர் கானாமிர்தமான பல கீர்த்தனைகளைப் புனைந்துள்ளார். அவற்றுள் சில எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பிரபலமானதும் பெரும்பாலும், ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைகளின் போதும் பாடப்படுவதுமான கீர்த்தனை இதுவாகும்!

இராகம்: உசேனி ஆதிதாளம்

பல்லவி

பாதம் ஒன்றே வேணும் - இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

சரணங்கள்

1) நாதனே துங்க மெய்வேதனே - பொங்குநற்
காதலுடன் துய்ய தூதர் தொழுஞ்செய்ய — பாதம்

2) சீறும் புயலினால் வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்த உன் — பாதம்

3) வீசும் கமழ் கொண்ட வாசத் தைலத்தை
ஆசையுடன் மரி பூசிப்பணிந்த பொற் — பாதம்

4) போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் தூக்கி நடந்தநற் — பாதம்

5) நானிலத்தோர் உயர்வான் நிலத்தேற வல்
ஆணி துளைத்திடத் தானே கொடுத்த உன் — பாதம்

6) பாதம் அடைந்தவர்க் காதரவாய்ப்பிர
சாதம் அருள் இயேசு நாதனே, என்றும் உன் — பாதம்

பக்திநயம் பரிமளிக்கக் கீர்த்தனை யாப்பதில் எரேமியாப் புலவர் வெகுசமர்த்தர். இருமறையின் அருள் வாக்கியங்கள் அவருளத் தடத்தில் நிறைந்து கங்குகரை காணாத ஆனந்தவின்பப்பெருக்கை யளிப்பதினாற்போலும் அவர் தம்மை மறந்த பரவசத்தில் திளைத்துப் பாடுகின்றார். கவிஞனது பெருமை அவனது ஆக்கத்தின் வடிமைப்பிலோ, சொல்லமைப்பிலோ, இலக்கண மரபுகளுக்கோ கட்டுப்பட்டு நின்றுவிடாது மக்கள் நெஞ்சங்களில், கவிதை மூலம் கவிஞன் என்ன கருத்தினைப் புகுத்த விழைந்தானோ அதனை முழுமையாக நிறைவேற்றி அவர்களையும் புளகாங்கிதமடையச் செய்வதிலேயே தங்கியுள்ளது. எரேமியா புலவரது கீர்த்தனைகளில் நாம் பரக்கக் காண்பது, அவற்றைப் பாடுவோரது நெஞ்சங்களை நெகிழ வைத்து, இயேசு பெருமானின் திவ்விய திருத்தரிசனத்தை அவற்றின் கண்காண வைப்பதே! புலமையின் விழுமிய பண்புகளில் சாலச் சிறந்தது இதுவே: அதனாற்போலும் புலவர் ஏரேமியாவின் கீர்த்

தனைகள் கால வெள்ளத்தைக் கடந்து; எதிர்நீச்சலடித்து இன்றும் புதிய சௌந்தரியத்தோடு மிளிர்கின்றன. மிஷனரிச் சகோதரிகளான திருமதி மேரிலீச், செல்வி மாகிரெட் லீச், திரு. ஜி. டபிள்யூ லீச் (1980 - 1886) ஆகியோரின் காலத்திலும் எரேமியாப் புலவர் சமூகப் பணிகளில் முன்னின்றுழைத்துள்ளார். அக்காலகட்டத்தில் யாழ்ப் பாணக் குடாநாட்டில் நிலவிய 'மது அரக்கனின்' சோரத்தாண்ட வத்தை முறியடிப்பதில் புலவரவர்கள் பெரும் பங்காற்றினார். இத னால் கிராமம் புறப்பெண்களது நாளாந்த வாழ்க்கையில் 'மறு மலர்ச்சி' உதயமானதெனலாம்! கிறிஸ்தவர்களாற்றிய சமூக, சமு தாயப்பணிக்கு இம்மது விலக்குப் பிரசாரம் நல்லதொரு சான்றாக அமைந்து, பயன் விளைத்தது!

வட்டுக்கோட்டையிலமைந்திருந்த வேதபோதனாவித்தியா சாலை 1872-ல் தெல்லிப்பழைக்கு இடம் மாறியது. ஏற்கனவே வட்டுக்கோட்டை ஆங்கில மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய புலவரவர்களும் தெல்லிப்பழை வேதபோதனா வித்தியாசாலைக்கு இடமாற்றம் பெற்றார். இப்போதனா வித்தியா சாலை, மிஷன் பாடசாலைகளுக்கான ஆசிரியர்களையும், நற்செய் திப்பணி புரியும் ஊழியர்களையும் பயிற்றுவிக்கும் கலாசாலையாக மிளிர்ந்தது இக்கலாசாலையில் எரேமியாப் புலவரவர்கள் பல்லாண்டு காலம் பணிபுரிந்தார். அரிய பல கீர்த்தனைகளை எழுதினார். அவற் றுட் பல "உதயதாரகை" வார இதழிற் பிரசுரமாயின

1885-ல் வேதபோதனா வித்தியாசாலையின் இருபத்தைந்தாவது வருடக்கொண்டாட்டம் (வெள்ளிவிழா) தெல்லிப்பழையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அப்பொழுது புலவர் எஸ். எஸ். எரே மியர் போதனாவித்தியாசாலையின் தலைமையாசிரியராக இருந் தார். அவரது முப்பது வருட ஆசிரியப் பணியில் இருபத்தொரு வரு டங்கள் மேற்படி வித்தியாசாலையின் தலைமையாசிரியராக அவர் கடமையாற்றியுள்ளார். ஏனைய 9 வருடங்களும் வட்டுக்கோட்டை யில் வேத போதனாவித்தியாசாலை இயங்கியபோதும், ஆங்கில மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். நற்செய் திப்பணி, சமூகப்பணி, ஆசிரியர், தலைமையாசிரியர் மிகச்சிறந்த கீர்த்தனாசிரியர் பதவிகளை அவர் திறம்பட வகித்துள்ளார்.

தற்போது நாம் உபயோகிக்கும் பாட்டுப்புத்தகத்தில் எரேமி யாப் புலவரின் ஐந்து கீர்த்தனைகள் அடங்கியுள்ளன. அவற்றை 'பஞ்சரத்தினங்கள்' என்றும் வருணிக்கலாம். மீட்பின்வழி, திரு மணம், திருமுழுக்கு நற்செய்திப்பணி என்னும் நான்கு மகுடங்களி

லும் இந்த ஐந்து கீர்த்தனைகளும் தனித்துவம் மிக்கனவாக ஒளிரு கின்றன. கீர்த்தனைகளில் புலவர் எடுத்தாண்டுள்ள சவிநயஞ்சுரக் கும் பதங்கள் எம்நெஞ்சைப் பிணிக்கின்றன உள்ளத்தில் இனிக்கின் றன. இறையன்பில் திளைக்க வைக்கின்றன எந்தவொரு விடயத் தையும் அழகு, உண்மை, நன்மை குன்றாது பாடுபவனே புலவன் என்பர் திறனாய்வாளர். எரேமியாப் புலவரது கீர்த்தனைகளில் இவற்றுக்கும் மேலாக இறையருளின் மேன்மை பிரகாசித்துக் கொண் டுள்ளமையை அவற்றைப் பாடும்போது எம்மிதயங்களே கனிந்து, உணர்ந்து, உவகை பூக்கின்றன. திருமுழுக்குப் பெறும் பாலர்களைப் பற்றிப்பாடும்போது புலவர் அப்பாலர்களின் பெற்றோராகவும், மிகச் சிறந்த நற்செய்திப் பணியாளராகவும் மாறி விடுகிறார்.

இராகம்: மோகனம் ஆதிதாளம்

பல்லவி

பாலர் நேசரே மிகப்பரிவு கூர்ந்திந்தப்
பாலரை யேந்தி ஆசீர் வதியும் இயேசுவே

சரணங்கள்

1) பாலர் வந்திடத் தடைபண்ணொணா தென்றீர்
சால வந்தருள் தந்து தலைமேற் கை வைப்பீர் — பாலர்

2) வானராச்சியம் இவர் வசத்த தென்றீரே
ஞானஸ்நானத்தால் உமது நாமம் சூட்டுவீர் — பாலர்

3) சற்குணம் விசுவாசம், தாழ்மை கண்டோ நீர்
சிற்றடிச்சிறார் பேரிற்சிந்தை கூர்ந்தது — பாலர்

4) பகை, விரோதம், பொய், கோபம், பாவம் யாவுமே
அகலவே யென்றும் வந்து ஆளும் இயேசுவே — பாலர்

5) தேவ பாலரே நீருஞ் சிறிய பிள்ளையாய்
மேவினீரதால் உம்மை வேண்டினோமையா — பாலர்

இவ்வாறு தம் வாழ்நாள் முழுவதும் இயேசுபிரானையே பல்வேறு நிலைகளில் வைத்துப் பாடிக்களித்தவர் புலவர் எரேமியா. அவர் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவ்வூரிலேயே நெடுங்காலம் வாழ்ந்தவர். ஆனால் அவரது கிறிஸ்தவ கீர்த்தனை கள் நாடளாவி எங்கும் நின்று நிலவுகின்றன. புலவர் அவர்கள் 1897-ம் ஆண்டில் கர்த்தருக்குள் ஐக்கியமானார். அவர் கீர்த்தனை கள் காலங்கடந்து நின்று எம்மை மகிழ்விக்கின்றன.

# பேராசிரியர்
# அலன் ஆபிரகாம் அம்பலவாணர்

கணிதம், வானியல் ஆராய்ச்சி, தமிழாராய்ச்சி, விவசாயவிருத்தி, இசையாய்வு, சமூகசேவை, கவிதைப்புனைவு, இலக்கியத்திறனாய்வு இவ்வாறான பல்துறை நாட்டம் கொண்ட ஒருவர், மாபெரும் கிறிஸ்தவ அருட்கவிஞராக விளங்கினார் என்பது எமக்குப் பேராச்சரியந் தருவதாகும்! இவரது வானியல் ஆராய்ச்சிப் பெறுபேற்றின் சாதனைகளை ஏற்றுக் கொண்ட பிரித்தானிய வானியல் ஆராய்ச்சிக்கழகம் (Royal Astronomical Society) 1921 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இவருக்கு F. R. A. S சான்றிதழ் வழங்கிப் பெருமை பெற்றது. இவ்வாறு சிறப்பிக்கப் பெற்ற முதல் இலங்கையர் இவரே யாவர். அவ்வாண்டில் பிரித்தானிய வானியல் கழகம் சிறப்பித்த எழுநூற்று ஐம்பத்தொன்பது பேரில் முதலிடத்தைப் பெற்றவர் பேராசிரியர் அலன் ஆபிரகாம் அம்பலவாணர் அவர்களேயாவர். மேனாட்டு விஞ்ஞானிகள் எத்தனையோ விஞ்ஞான ஆய்வுக்கருவிகளின் துணை கொண்டு, கணித்துக் கூறச்சிரமப்பட்டதனைப் பேராசிரியர் அலன் ஆபிரகாம் சாதாரண விஞ்ஞானக் கருவிகளாலும், தமது பிரபஞ்சத்தை ஊடறுத்துப் பார்க்கவல்ல திருவிழிகளாலும் ஆய்ந்து, ஹேலிஸ் வால்வெள்ளி 1910-ம் ஆண்டு மே மாதம் 19 ஆம் நாள் காலை 9 மணிக்கும், 10 மணிக்கும் இடையில் பூமிக்கு மிக அண்மையில் தோன்றும் என்று விபரித்தார். அவ்வாறே நிகழ்ந்தது. இதனை விஞ்ஞானிகள் அனைவரும் நேரிலேயே பார்த்து அதிசயித்தனர். பேராசிரியரது ஆய்வின் திறத்தையெண்ணி அகம் மகிழ்ந்தனர். பிரித்தானிய வானியல் ஆராய்ச்சிக் கழகமும் பெருமையோடு அதனையேற்றுப் பேராசிரியரைத் தமது கழகத்தின் உறுப்பினராக்கிப் பெருமை சேர்த்தது.

இவ்வாறு விஞ்ஞானத்துறையில் ஈழத்தமிழருக்கு முன்னோடியாக மிளிர்ந்த அலன் ஆபிரகாம் அம்பலவாணர் யாழ்ப்பாணத்துக் காரைதீவு (இப்போது காரைநகர்) என்னும் ஊரில் உள்ள பயிரிக்கூடல் சக்களாவோடை என்னும் கிராமத்தில், சைவவேளாண் மரபில் 1865ஆம் ஆண்டு சுப்பிரமணியம் பார்வதி தம்பதியருக்கு மூத்த புதல்வராகப் பிறந்தவர். இவருக்கு, இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் இருந்தனர். விவசாயம், வர்த்தகம் ஆகியவற்றையே சீவனோபாயத்தொழிலாகக் கொண்ட சைவசகுடும்பத்தவர் இவர். ஆனால் இவரது பதினொராவது வயதிலேயே, வாந்திபேதி நோய் காரணமாகத் தமது பெற்றோரை இழந்தார். இதனால் இவரும், இவரது சகோதர, சகோதரிகளும் இவரது தந்தையின் சகோதரராகிய திரு. சரவணமுத்து என்பவரின் பராமரிப்பில் வளர்ந்தனர்.

அக்காலகட்டத்தில் காரைதீவில் தரமான பாடசாலைகள் எதுவும் இருக்கவில்லை. திண்ணைப்பள்ளிக்கூடங்கள் என்ற பெயரில் இயங்கும் 'கல்வி நிலையங்களே' இருந்தன. அம்பலவாணரும் அத்தகையதொரு திண்ணைப்பள்ளிக்கூடத்தில் தமது கல்வியை ஆரம்பித்தார். கல்வியில் இவரது அசாதாரணத் திறமையைக் கண்டு வியந்த இவரது ஆசிரியை திருமதி சீதை நாகமுத்து என்பவர் இவரது திறமை பிரகாசிக்க அவ்வூர்க் கார்த்திகேசு ஐயர் என்னும் பிராமணரிடம் கல்வியினைத் தொடரச்செய்தனர். அம்பலவாணரும் அவ்வாறு கற்றுவந்தனர்.

அக்காலத்தில் தெல்லிப்பழையில் அமெரிக்கன் மிஷனால் நடாத்தப்படும் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஒன்றிருந்தது. 1881ஆம் ஆண்டில் அம்பலவாணர் தெல்லிப்பழை பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெறத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அங்கு பயிலுங்காலத்தில் கிறிஸ்தவராகி அலன் ஆபிரகாம் அம்பலவாணர் எனும் நாமம் பெற்றார். 1883 ஆண்டு தெல்லிப்பழையில் ஆசிரிய பயிற்சி முடிந்தது. யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரசித்திபெற்ற பழைய மாணவர் ஒருவரின் உதவியினால் அலன் ஆபிரகாம் யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்தார். 1884 - 1888 வரையான காலத்தில் ஆங்கு கற்று அரங்கேறினார். அதனைத்தொடர்ந்து தெல்லிப்பழை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளராக நியமிக்கப்பெற்றார். இவரை விரிவுரையாளராகப்பெற்ற மாணவர்கள் இவரது கற்பித்தல் திறனையும், கவிபுனையும் ஆற்றலையும், இன்சுவைப் பேச்சுக்களையுங் கேட்டு இறும்பூதெய்தினர்.

எனினும் மிகக்குறுகிய காலத்துள், அலன் ஆபிரகாம், 1891ஆம் ஆண்டில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பெற்றார். அக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி கல்கத்தாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்து. அதனாற் கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டம் பெற விரும்பிய அலன் ஆபிரகாம், யாழ்ப்பாணக் கல்லூரியில் பேராசிரியராக இருந்துகொண்டே, தனிப்பட்ட பரீட்சார்த்தியாக, கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் முதலில் F. A. பட்டமும் அதனைத்தொடர்ந்து B. A. பட்டமும் பெற்றார். இதன்பின் யாழ்ப்பாணக் கல்லூரி அவரைக் கணிதப் பேராசிரியராக நியமித்தது. யாழ்ப்பாணக் கல்லூரியின் வரலாற்றில் அவர் ஒருவரே தமிழ் - கணித - வானியல் பேராசிரியராக விளங்கியவர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பாலமைந்துள்ள ஏழுதிவுகளைக் கொண்டது. தீவகம், நெடுந்திவு, புங்குடுதிவு, நயினாதிவு,



Mr. Allen Abraham

அனலைதீவு, எழுவைதீவு, லைடன்தீவு, காரைதீவு என்பனவே அத்தீவுகளாகும். இத்தீவகத்தைச் சேர்ந்த மக்கள் திரைகடலோடித் திரவியந்தேடுதலிலும், கல்வித்துறையிற் சாதனைகளை நிலைநாட்டுதலிலும், வர்த்தகம், கடற்றொழில் ஆகியவற்றில் வரலாறு படைப்பதிலும் வல்லவர்கள். அதற்கு அருமையானதொரு உதாரணமாக மிளிர்ந்தவர், உலகப்புகழ்பெற்ற பேராசிரியர் அலன் ஆபிரகாம் அம்பலவாணர் அவர்கள். விஞ்ஞானத்துறையில் ஈழத்தமிழர்களின் முதல் வழிகாட்டி அவரேயாவர்.

வானியல், கணிதம், தமிழிலக்கியம், இசை முதலான சகலகலா வல்லுநரான அலன் ஆபிரகாம் மிகச்சிறந்த கிறிஸ்தவருமாவர். ஏனைத்துறைகளில் எவ்வாறு சதா ஆய்வு செய்தலைப் பழக்கமாகக் கொண்டிருந்தாரோ, அவ்வாறே இறையியலையும் அவர் மனம் ஆய்ந்து கொண்டிருந்தது.

யாழ்ப்பாணக்கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த காலத்திலேயே அவர் திருமணமும் நிகழ்ந்தது. முத்தாச்சி சங்கரப்பிள்ளை என்னும் நற்குணவதியை வாழ்க்கைத்துணையாகப் பெற்றார். சுவாசுந்தரம், அருளையா, ஜேன் நல்லம்மா, றோஸ் இராசம்மா என்னும் நான்கு பிள்ளைச் செல்வங்களுக்குத் தந்தையானார். பேராசிரியரது நாற்பதுகளில் அவர் மனைவி மறைய, தையல்முத்து பொன்னையா எனும் மங்கை நல்லாளை மறுமணம்புரிந்தார். எனினும் அவருக்குப் பின்னர் பிள்ளைப்பேறு கிட்டவில்லை.

எமது திருச்சபைப் பாட்டுப்புத்தகத்தில், 1980இல் புதுக்கிய பதிப்பில் அலன் ஆபிரகாம் அவர்களது பத்துக்கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கீர்த்தனையும் நெஞ்சை நெகிழவைக்கும் தன்மையுடையது, சில கீர்த்தனைகள் மாணிக்கவாசகசுவாமிகளதோ, எச். ஏ. கிருஷ்ணபிள்ளையினதோ என்ற ஐயத்தை பயில்வார் மனதில் பயக்கவல்லன. அத்துணைப் பக்திநலம் சார்ந்தன. உயர்ந்த ஆத்மீகநிலைக்கு எம்மை இட்டுச்செல்லவல்லன. உதாரணத்திற்குப் பின்வரும் கீர்த்தனைகளைப் பார்ப்போமாக. கட்டுரைச் சுருக்கம் கருதிச் சரணங்கள் சிலவற்றையே இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

இராகம்: பைரவி ரூபகதாளம்

## இறைவழிபாடு - அருள் வேண்டல்

பல்லவி

வருவாயே சருவேசா, வந்திடாயே, கிருபை வாசா

அநுபல்லவி

நரரை மீட்கக் கருணை கொண்டையே
நம்பினேன் அடைக்கலம் உன்னண்டையே — வரு

சரணங்கள்

1. அஞ்சலென்றென்னை யாதரிப்பாய்
அன்பின் கரத்தாலணைப்பாய்
தஞ்சமெனக் கென்றும் நீ என்பாய்
தற்பரா, குண அற்புதா, நண்பாய் — வரு

2. அண்ணலே யென் பாவந் தீர்த்து
ஆதரி திருக் கடைக்கண் பார்த்து,
புண்ணிய மில்லே னென்னைச் சேர்த்து
புரிந்திடாய் அருள் சொரிந்திடாய் காத்து — வரு

2. மண்ணின் வாழ்வு திண்ண மென்று
மயங்கியே மனந் தியங்கினேன் நின்று
எண்ணில் பாவஞ் செய்தேனே இன்று
ஏற்றிடாய், எனைத் தேற்றிடாய் நன்று — வரு

தொடர்ந்து அவர் பாடிய திருத்தாண்டகம் ஒன்று நன்றியும் ஒப்படைத்தலும் பற்றி இவ்வாறு நவில்கிறது.

(இராகம்; அரிகாம்போதி)

''ஆதியந்த மில்லா அற்புதனே, எங்கும்
ஆருயிரே, அருட்கடலே, அன்பே, ஞானச்
சோதியே, தொண்டருளத்தமர்வோய், விண்ணோர்
சுத்தர் பரிசுத்த ரெனத்துதிக்குந் தேவே,
பூதலத்திலடியரை மீட்டிரட்சை செய்யும்
பொருட்டாக அவதரித்த புண்யமூர்த்தி
போதமறைப் பரம்பொருளே, பூரணா எம்
புகலிட நீ ஆகி என்றும் புரந்திடாயே!''

இறைவழிபாடு என்ற தலைப்பில் அமைந்துள்ள பக்திச்சுவை சொட்டும் பாசுரங்களிற் சில;

இராகம்: ஆரபி ஆதிதாளம்

நெஞ்சமே நீ அனுதினமும் நின்மலனைத் தோத்திரிப்பாய்
தஞ்சமவர் நாமமதைச் சாற்றியென்றும் போற்றிடுவாய்
பஞ்சமற அவர் செய்த பற்பல நன்மைகளையும்
கொஞ்சமெனும் மறவாமற் கொண்டுளத்தில் காத்திடுவாய்!

பாவவினை பொறுத்தருளி, பற்பல நோய்களை மாற்றி
சீவனைச் சாவால் விலக்கித், திவ்ய அருண் முடிசூட்டி
தாவில் நன்மையால் நிரப்பிச் சம்பூரணமீந்துனக்கு
மேவுமிளவயதளித்த விண்ணவனைத் தோத்திரிப்பாய்!

அண்டசராசரமே ஓ, அகிலாண்டகோடிகளே
தொண்டு செய்தூதர் கணமே, துதிசெய் சர்வசேனைகளே
மண்டலமார் மனுக்குலமே, மற்றுமுள்சிருட்டிகளே
எண்டிசையுந்தானாகும் இறையவனைத் தோத்திரிப்பீர்!''

ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மாமேதை அலன் ஆபிரகாம் அம்பலவாணரின் உள்ளத்திருந்து எழுந்து இன்றும் உயி ரோடு, எம்மையெலாம் உயிர்ப்பிக்கும் கவிதாவரிகளிற் சில இவை. விஞ்ஞானியாக, கணித மேதையாக, ஆராய்ச்சியாளனாக வாழ்ந்த ஒருவர் எவ்வாறு ஏசுபிரானின் இன்னருளால் இனிய தமிழ்க்கவிதை கள் யாத்தார் என்பதற்கு இவை இனிய சான்றுகளாகும்,

பேராசிரியரின் மனதிற்குகந்த ஒரு மாணவன் எஸ். மகேஸ்வர சர்மா என்கிற ஒரு பிராமணர். இவர் பேராசிரியரின் ஆய்வு முயற்சி களுக்குப் பெரிதும் உதவினார் எனத் தெரிய வருகிறது.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் பேராசிரியர் காலத்து இருந்த ஒரு பெரிய அரசியல் தலைவர். கொடைவள்ளல்; சைவசம யச் சான்றோர். சைவ ஆலயங்களின் புரவலர், தாபகர். அவர் ஒரு முறை காரைதீவு மக்களின் அழைப்பையேற்று ஆங்குச் சென்றார். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டம் அவரைப் பார்க்கவும், அவர் பேச்சைக் கேட்கவும் கூடி நின்றது. பிரயாணக் களைப்புக் காரண மாக சேர். பொன். இராமநாதன் அவர்களால் உடன் உரை நிகழ்த்த முடியவில்லை. சிறிது நேரம் களைப்பாற வேண்டியிருந்தது அவருக்கு! ஆனால் மக்கள் கூட்டமோ ஒரே சந்தடி எழுப்பி அமைதியின்மையை

உண்டாக்கியது: என் செய்வது......? உடனே எங்கள் அலன் ஆபிரகாம் அம்பலவாணர் எழுந்தார். தம் தேனினுமினிய குரலில் தேவாரங்கள் சிலவற்றைப் பண்ணோடு பாடினார். மக்கள் கூட்டம் அப்படியே மெய்மறந்திருந்தது. சேர். பொன். இராமநாதன் பின்னர் உரைநிகழ்த்துகையில் அலன் ஆபிரகாம் அவர்களது திறமையை மிகச்சிலாகித்துப் பேசினார்!

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரைத் தலைவராகக் கொண்டிருந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் செயற்றிறன் மிக்க உறுப்பினர் அலன் ஆபிரகாம். அவர் சிறந்த சமூக சேவையாளர். அந்தக் காலத்திலேயே மதுவிலக்குத் தொண்டராகப் பணியாற்றிப் பல மதுக்கடைகளை மூடுவித்தார் என்றால் அஃது வியப்பானதே!

காரைதீவிலுள்ள தமது இல்லத்திலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு, தமது மாட்டுவண்டியில் புறப்பட்டு வந்து 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியை அடைவார். அவ்வாறே கல்லூரி விடுத்ததும் பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்பட்டு 5.30 மணிக்குத் தமது இல்லத்தை அடைவார். கடமையே கண்ணாகக் கொண்டவர் அக்கணிதமேதை!

"உதயதாரகை" இதழின் ஆசிரியராகப் பேராசிரியர் அலன் ஆபிரகாம் 1897 முதல் 1909 முடியப் பணியாற்றியுள்ளார். அக்காலத்திலேதான் அவரது பிரசித்தி பெற்ற கட்டுரையான "வானாதிசயங்கள்!" போன்ற பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் "உதயதாரகை"யை அணி செய்துள்ளன. யாழ். தென்னிந்திய ஐக்கிய திருச்சபையின் செயலாளராக 1915 முதல் அவர் மறையும்வரை (1922) கடமையாற்றினார்.

அலன் ஆபிரகாம் அவர்கள் மிகவும் எளிமையான தோற்றமுள்ளவர். அவரது உடை வேட்டியும், மேலே அணியப்படும் ஒரு கோட்டுமே! அனைவருடனும் இனிமையாகப் பழகும் இயல்பும், எத்தகைய பயமுமின்றித் தம் மனதிற் சரியென்று தோன்றுதலை எடுத்துரைக்கும் வன்மையுமுள்ளவர்.

யாழ்ப்பாணக்கல்லூரி, யாழ். தென்னிந்திய ஐக்கிய திருச்சபை என்பவற்றின் பலதிறப்பட்ட தொண்டுகளிலும் அலன் ஆபிரகாம் அரிய பங்களிப்புகளை நல்கியுள்ளார்.

அவரது வயது ஐம்பதுகளில் நீரிழிவு, அல்சர் போன்ற நோய்களினாற் பாதிக்கப்பட்டபோதும் அவற்றை அவர் ஒரு பொருட்டாக எண்ணவே இல்லை. வழமைபோலத் தமது பணிகளை இடையீடின்றிக் கவனித்துவந்தார்.

1922 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆங்கு மூன்று வாரங்கள் சிகிச்சை பெற்றார். எனினும் அஃது பயன்படாது 1922 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்குக் கர்த்தருக்குள் பிரவேசித்தார்!

அவரது வாழ்வும், மரணமும் ஈழத்தமிழ்த் திருச்சபைகளுக்கு என்றும் சிறந்தவொரு நற்போதகமாக மிளிர்ந்து கொண்டுள்ளது!

# பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகர்

தமிழ்வளர்த்த பேரறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் செல்வப்புதல்வரே வண. பேராசிரியர் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகராவர். பேரறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களே சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பி. ஏ.பட்டதாரி. பின்னாளில் பி. எல். பட்டமும் பெற்றார். தமிழகத்தில் பல உயர் பதவிகளை வகித்தவர் தாமோதரனார். அப்பதவிகளுக்கு மேலாக அவராற்றிய தொண்டு ''செல்லுக்கிரையாய்ச் சிதைந்த பல ஏடுகளை அல்லலுற்றுத்தேடினாய், அச்சேற்றித்தந்து நின்றாய். நல்ல தமிழ் மகனே, நறுந்தமிழின் காவலனே, வல்லதாமோதரனே 'மறவோம் மறவோமே!'' என்று பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிறிஞர்களை மனங்கரைந்து, உருகிப்பாடவைத்தது. தாமோதரனாரது தாயார் யாழ்ப்பாணத்து ஏழாலையூரையும், தந்தையார் புத்தூரையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். சி. வை தா. அவர்கள் வட்டுக்கோட்டைச் செமினரியிற் சுற்றுக் கிறிஸ்தவராகியிருந்தபோதும் அவரது தமிழகப் பிரவேசமும், ஆறுமுகநாவலரின் நெருக்கமான நட்பும் மீண்டும் அவரை இறுக்கமான சைவாபிமானியாகவும், சைவராகவும் மாற்றிவிட்டிருந்தன. சி. வை. தா. அவர்கள் தமது முதல் மனைவி மறைந்த பின்னர் மறுமணஞ்செய்து கொண்டார். சி. வை. தா. அவர்களின் இரண்டாவது மனைவியார் நாகம்மாள் ஐந்து பிள்ளைகளைப் பெற்றார். மூவர் ஆண்கள், இருவர் பெண்கள். ஆண்மகாரில் இளையவரே அழகசுந்தரர். மூத்தவரான அமிர்தலிங்கம் தமது இருபதாவது வயதிலும் இரண்டாவது புதல்வரான சோமசுந்தரம் தமது பத்தாவது வயதிலும் காலன்கைப்பட்டனர், அழகசுந்தரதேசிகரே, சி. வை. தாமோதரனார் அவர்களின் செல்வப் புதல்வராக விளங்கினார். அதற்கேற்பக் குறும்புத்தனமும், கொள்கைப்பிடிப்பும், அபாரதுணிச்சலும், அஞ்சாமையும் அழகசுந்தரரை அணிசெய்தன.

கிறிஸ்தவ, வணக்கத்திற்குரிய குருமாரில், வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகரைப் போன்ற புரட்சித்துறவியை இன்றுவரை கண்டிலேம். அவரது இறையியற் கோட்பாடுகள் புரட்சிகரமானவை இன்றுங்கூட எவராலும் சீரணிக்க முடியாதவை. இக்கொள்கைகளால், அவர் பெற்றிருக்கவேண்டிய பெருமதிப்புக்கிட்டாத போதிலும் அதற்காக அவர் ஒரு போதுமே கவன்றதில்லை. 1873-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 8-ம் நாள் சென்னை, தண்டை

யார்ப் பேட்டையில் தமிழ் வளர்த்த தாமோதரனார் நாகம்மாள் தம்பதிகளின் நான்காவது மகனாக அவதரித்தவர் அழகசுந்தரதேசிகர். தமது பத்தொன்பதாம் வயது வரையில் வைதிக சைவசமய நெறியில் வளர்க்கப்பட்டவர். கருவிலே திருவுடையராகப் பிறந்த அழகசுந்தரர் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் தமது உறவினர் மத்தியில் 'கட்டுக்கடங்காத' செல்லப்பிள்ளையாகச் சுதந்திர உணர்வுகளுடன் உலாவினார்.

இறைவன் அருளாற்போலும், 1892-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் தேதி சென்னை மாநகரில் அமெரிக்கன் மிஷனரியான வண. பான் கேஸ்ற் என்பவருடைய பிரசங்கத்தை அழகசுந்தரர் கேட்க நேர்ந்தது. அப்பிரசங்கம் அவர் மனதில் நீங்கா இடம் பெற்றது. அவர் மனதிலே பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இதன் காரணமாக 1893-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம் தேதி (யாழ்ப்பாணம் வந்து), வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் வண. றைஸ் அவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவரானார். தென்றலும், புயலும், தீயும் கலந்து வீசிய வாழ்க்கை அழகசுந்தரதேசிகரது அற்புதமான வாழ்க்கையாகும்! அவர் தமது ஒன்பதாவது வயதிலேயே தாயை இழந்திருந்தார். தாயும், தந்தையுமாக விளங்கிய பேரறிஞர் சி. வை. தாமோதரனார் தமது ஒரே மகனின் மதமாற்றத்தினால் கடுஞ்சினங் கொண்டார். அவர்களிடையே நடந்த வாக்குவாதத்தினால் அழகசுந்தரர் தாமணிந்திருந்த உடையுடன் மட்டுமே வெளிச் சென்று, தமது நண்பனின் வீட்டில் தங்கியபோது, தாமணிந்துவந்த உடையினையும் களைந்து அதனையுந் தந்தையாரிடமே அனுப்பி வைத்தார். என்னே அவர் நெஞ்சுறுதி!

அழகசுந்தரரது தீரச் செயல்களினாற் கவரப்பட்ட, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைவராக விளங்கிய வண. மில்லர் என்பார் அவரைத் தமது கலாசாலையிற் கற்க வைத்ததுடன் சில மாதங்களுக்குள்ளாகவே, அக்கலாசாலையிற் பகுதிநேர ஆசிரியராகப் பணிபுரியவும் வாய்ப்பளித்தார். அதன் பயனாக அழகசுந்தரருக்கு மாத வேதனமாக ரூபா இருபதுபெறும் வாய்ப்புக்கிட்டியது. 1896-ம்ஆண்டில் அழகசுந்தரர் அக்கல்லூரியை விட்டு நீங்கினார். அப்பொழுது அவர் பட்டம் பெறவில்லை. நீண்ட காலங்கழித்துத் தமது நாற்பத்தோராம் வயதிலேயே பீ. ஏ. பட்டம் பெற்றார். அழகசுந்தரர் 'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்ற மகாகவி பாரதியாரின் பாடலுக்கு உதாரணமாக மிளிர்ந்தவர். சுதந்திரத்தை நேசித்தவர். அதற்காகப் போராடியவர். சமயத்துறையிலும் அதுவே அவரது போராட்டமாக விளங்கியது!

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆந்திராவில், நெல்லூரில், டாக்டராகப் பணிபுரிந்தவருமான சிதம்பரப்பிள்ளை என்பவரது இரண்டாவது மகள் மேரி இரத்தினம் சமாதானம் என்பவரை அழகசுந்தரர் தமது மாணவப்பருவத்திலிருந்தே காதலித்து வந்தார். அவரை விவாகஞ் செய்யத் தந்தையின் அனுமதி கோரினார். அது கிடைக்கவில்லை. அழகசுந்தரர் அப்பெண்ணை விவாகஞ் செய்யாது விடவுமில்லை. 1893-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ம் தேதி அவர்களது விவாகம் கிறிஸ்தவ சமயாசாரப்படி நடந்தது. அத்திருமணத்திற்கான செலவு ரூபா ஆறு மட்டுமே என அழகசுந்தரர் குறிப்பிட்டுள்ளார். கல்யாணப் பதிவுகாரருக்கு ரூபா மூன்றும், குதிரை வண்டிக்காரனுக்கு ரூபா ஒன்றும், கோயில் மணியடித்தவனுக்கு ரூபா ஒன்றும், பலகாரங்களுக்கு ரூபா ஒன்றுமாக மொத்தம் ஆறு ரூபா செலவில் அழகசுந்தரரது திருமணம்வெகுவிமரிசையாக நடைபெற்றது!

1898-ம் ஆண்டு பசுமலை சென்று ஆங்குள்ள தேவாலயத்தின் உதவிக்குருவாக நியமனம் பெற்றார். அடுத்த ஆண்டு பிரதம குருவாக அபிடேகம் பெற்றார். அவரது முதல் மகள் ஒரு வயது முடியும் போதே மரித்தார். இரண்டாவது மகள் கதறீன் கற்பகம் வளர்ந்து காதலித்து மணமுடித்து ஒரு பெண் பிள்ளைக்குத் தாயாகிய பின்னர் மரித்தார். 1905 ல் அழகசுந்தரருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அப்பிள்ளைக்கு உவில்லியம் மில்லர் சாந்தசீலன் என்ற பெயரினை, தமது நண்பரான வண. திருத்துவதாசன் அவர்களைக் கொண்டு 'ஞானஸ்நானம்' கொடுத்தபோது சூட்டுவித்தார். அந்நாளில் கிறிஸ்தவ பெற்றோர் தம் பிள்ளைக்கு வெள்ளைக்காரக்குருமாரைக் கொண்டே ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம். அதனை முறியடித்த பெருமை அழகசுந்தரதேசிகருக்குரியது. வெள்ளைக்காரக் குருமாருக்கு எரிச்சலாக இருந்தாலும் அழகசுந்தரர் மாட்டு அது செல்லாதென்றெண்ணி வாழாவிருந்தனர். அழகசுந்தரருக்கு இன்னொரு மகன் பொபி என்ற பெயரில் இருந்தார். அவர் 1910-ம் ஆண்டில் பிறந்தார். அவரது புதல்வர்களும் தாம் விரும்பியவாறே காதல் திருமணம் செய்ய அழகசுந்தரர் அட்டியின்றி அனுமதித்தார். தமிழ்ப்பேரறிஞர் சி வை. தா வும் அவரது செல்வப்புதல்வர் அழகசுந்தரரும் நேரில் சந்திப்பதே இல்லை. கடிதங்கள் மூலமே பேசிக்கொள்வர். ஆனால் ஒருவர் மீதொருவர் குன்றாத அன்புடையராய் விளங்கினர். 1910-ல் அழகசுந்தரர் பங்களூர் இறையியல் கல்லூரிப் பேராசிரியரானார். அப்பொழுது அவர் பெற்ற மாதவேதனம் ரூபா எண்பது மட்டுமே. இக்காலகட்டங்களில் அழகசுந்தரர் இல



Rev. Francis Kingsbury

ங்கை, இந்தியா, பர்மா, யப்பான் முதலிய தேசங்களுக்குச் சென்று பல மாநாடுகளிற் பங்குபற்றிப் பேருரைகள் நிகழ்த்தியுள்ளார். 1919-ல் பங்களூரில் இறையியல் கல்லூரிப் பேராசிரியராக இருக்கும் போது இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்றது. மொசப் பெத்தேமியாவில் போர் மூண்டது. கிறிஸ்தவப் போர் வீரர்கள் இப் போரில் மாண்டனர். இதனையறிந்து மனந்தாழாத அழகசுந்தரர் தாமும் போர் வீரர் உடையணிந்து, இந்திய பட்டாளத்துடன் அவர்களது வணக்கத்துக்குரிய குரவராக மொசப்பத்தெமியா சென்றார். 1920-ல் மீண்டும் பெங்களூர் வந்த அவர் 1921 பங்குனி மாதத்தில் மீண்டும் போர்க்களம் சென்றார். அவரது யுத்த சேவையைப் பாராட்டி "நீலக்கல்" பதித்த மோதிரமொன்று இராணுவத்தினரால் பரிசாக அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் மறையும் வரை அதனை அணிந்திருந்தார், 1923-ல் பங்களூர் இறையியல் கல்லூரிப் பேராசிரியர் பதவியிலிருந்து விலகினார்!

1924-ல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி தொகுப்புப் பணியின் தலையாசிரியராகப் பதவியேற்றார். 1926 ஆனிவரை அப்பதவியில் பணியாற்றிவிட்டு அதனையும் துறந்தார்.

அழகசுந்தரர் புரட்சி மனோபாவம் கொண்டவர். 1924-ம் ஆண்டு அவர் நாசரேத்தின் இயேசு" (Jesus of Nazareth) என்ற தலையங்கத்துடன் இயேசுபிரானின் வரலாறு ஒன்றினை எழுதினார். இந்நூலில் இயேசு பிரானின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியாகிய "உயிர்த்தெழுதல்" எழுதப்படவில்லை. நூலின் இறுதி அதிகாரம் இயேசுபிரான் மரணமடைதலும், அடக்கம் பண்ணப்படுதலும் என்பவற்றையே கூறுகின்றது. இந்நூல் மிஷனரிமாருக்கும், சுதேசகுரவர்களுக்கும் பெருந்திகைப்பை ஏற்படுத்தியது. இக் கொள்கை கிறிஸ்தவ இறையியற் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது. இதனாலேயே 1925-ம் ஆண்டு தென்னிந்திய ஐக்கிய திருச்சபையினர் சென்னை புரசைவாக்கம் தேவாலயத்தில் இவர்மீது ஒரு விசாரணையை நடாத்தினர் அவருடைய உத்தியோகம் போய்விடுமென்று அஞ்சிய நண்பர்கள் அவருடைய கொள்கையைக் கைவிடுமாறு இரந்து வேண்டினர். விசாரணையின் போது அழகசுந்தரர் நான்கு மணி நேரம் உரைநிகழ்த்திய பின்னர் பரிசுத்த வேதாகமத்தை தன்னிலும் பார்க்க அதிகமாகக் கற்றவர்கள் இங்கிருப்பின் என்னோடு விவாதிக்கலாம் என்று அறைகூவல் விடுத்தார். ஆனால் விசாரணைக்குழுவினர் அவருடைய கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை ஒரு "திரிபுவாதி" என்றே முடிவுகட்டினர்.

இதன் பயனாக 1927-ம் ஆண்டு பசுமலைக் கோவிலில் நிகழ்ந்த கூட்டமொன்றில் வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரரின் குருப்பட்டம் மீளப்பெறப்பட்டது. ஆனால் இங்கிலாந்திலுள்ள ஏகத்துவத் திருச்சபை (Unitarian Church) இவரைப் போதகராக ஏற்றுக்கொண்டது.

அழகசுந்தரதேசிகர் 1926-ம் ஆண்டு ஆடி மாதம் முதல் கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியராக நியமனம் பெற்றார்.

அன்புமார்க்கசபை, விவேகானந்தர் சபை போன்ற பல சபைகளில் முன்னின்றுழைத்தார். வானொலியில் அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இவர் மறைவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னரே கொழும்பு வானொலியில் 'இறப்பதற்கு இன்னும் ஒரு மணித்தியாலம்' என்ற அற்புதமான நாடகச் சொற்பொழிவை நடாத்திக் காட்டினார்.

தமது பதினொராவது வயதிலேயே, தந்தையார் ஆறுமுகநாவலரை விழுந்து வணங்குமாறு பணிக்க, அவ்வாறு செய்ய மறுத்து, நாவலர் மடிமீது ஏறியிருந்து தோடம்பழப்பரிசில் பெற்ற அழகசுந்தரர், மறையும்வரை எவருக்கும் அடிபணியாமலே வாழ்ந்தார்.

அழகசுந்தரர் முதலில் சைவசமயி, பின்னர் கிறிஸ்தவர். தொடர்ந்து ஆசிரியர், போதகர், இறையியல் கல்லூரிப் பேராசிரியர், யுத்தவீரர், தமிழ் அகராதித் தொகுப்பாசிரியர், நிகரற்ற பேச்சாளர், நூலாசிரியர், நாடகாசிரியர், கவிஞர், பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர், சமயச்சான்றோர் என்று பல நிலைகளிலும் தனித்துவம்பெற்று மிளிர்ந்த புரட்சித்துறவி! அவருக்கு சாதி மத, இன மொழி பேதங்கள் எதுவுமே கிடையாது. இந்தஉலகம்யாவும் ஏசுபிரான் என்ற பேராசானின் அன்பின் அடையாளங்கள் என்பது அவரது கருத்து. கிறிஸ்தவதிருமறையைப் படிக்கின்றபோதும், தேவார, திருவாசகங்களை இசைக்கின்றபோதும் அழகசுந்தரர் தம்மை மறந்து ஆனந்தப்பெருக்கில் திளைத்து ஆடுவார், பாடுவார், நடனஞ்செய்வார்! சிந்தனைவயப்படும்போது கால எல்லை, ஊரெல்லைகளைக் கடந்து பல காத தூரஞ்சென்று, அதிகபணஞ் செலவழித்துத் தாமிருக்கும் இடஞ் சேர்ந்த அனுபவங்களும் அவருக்குண்டு. அவருக்குப் பணத்தின் அருமை தெரியாது' என்பர் அவரோடு நெருங்கிப் பழகிய அவரது நண்பர்கள் பலர். பகுதிநேர ஆசிரியராக இருந்து ரூபா இருபது வேதனம் பெற்றபோதும், பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவிவகித்து ரூபா தொளாயிரம் வேதனம் பெற்றபோதும் 'இல்லையென்றிரப் போர்க்கில்லையென்றுரையாது' உதவிய ஈகையாளர் அவர். உடை, நடைதோற்றம் யாவினும் கம்பீரம் மிளிரக்காட்சியளிப்பார். ஆனால் இளகியமனத்தினர், பிறர் அன்புக்காணச்சகியார், தம்மையர்ப் பணித்துப் பிறரை மகிழ்விப்பது அவரது கூடப்பிறந்தகுணம். தமது ஐம்பத்தாறாவது வயதில் எடுத்துக்கொண்ட புகைப்படத்தையும்' தமது தந்தையாரின் அதே வயதுப்புகைப்படத்தையும் நானூறு ரூபா

செலவுசெய்து, அமெரிக்காவுக்கு அனுப்பிச்சட்டமிட்டுத் தமது கொழும்பு வீட்டில் வைத்துத்தினமும் கண்டுகளித்தவர். 1936-ல் பல்கலைக்ககழப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபோது, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'பேராசிரியராக வருக!' என்று அழைத்தபோதும் அவர் ஆங்குச் செல்லாது கொழும்பிலேயே தங்கிவிட்டார்.

எமது திருச்சபைப் பாட்டுப்புத்தகத்தில் வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகர் யாத்த இரு கீர்த்தனைகள் இன்றும் இடம்பெற்றுள்ளன. அவ்விரண்டு கீர்த்தனைகளும் தமிழ் யாப்பமைதி, வழுவாது, பண்டைய இலக்கண மரபுமுறைகளுக்கும், பாவினங்களுக்கும் எடுத்துக்காட்டாக மிளிர்கின்றன. அழகசுந்தரரது புலமைத்திறனுக்கும், ஆழ்ந்த இறைபக்திக்கும் இவை அச்சாரமாக விளங்குகின்றன. உதாரணத்திற்கு ஒவ்வொரு கீர்த்தனையிலிருந்தும் ஒவ்வொரு பாவினை வாசகர்கள்முன் படைக்கின்றேன். படித்து, இசைத்து அழகசுந்தரரது இன்பத்தமிழிலும், இறைபக்தியிலும் தோய்வோமாக.

## திருத்தாண்டகம்

(கீர்த்தனை இல. 50) (இராகம்: எதுகுலகாம்போதி)

1) அந்தோ! வந்தணுகினது மாலைவேளை:
அடியனொடு வைகுதி நீ, நீங்கேல் என்னை
அந்தியிருள் செறிந்தென்னைச் சூழாநின்ற
தாண்டவனே அடியனொடு, வைகுவாய் நீ;
சந்ததமும் நம்பின என்துணைவர் எல்லாம்
துணையலராய்ச், சுகமெல்லாந் தவிருங்காலை
அந்தரித்தார்க்குறுதுணையே, அப்பா, என்னை
ஆதரிக்க என்னோடு வைகு நீயே!

## திருநேரிசை

(கீர்த்தனை இல. 100)

1. மாண்பெலாம் உடைய பெம்மான் வதைபடு சிலுவைதன்னை
வீணன் யான் காணுங்காலை வியப்புறுகின்றதுள்ளம்
நீணிலந்தனில் யான்பெற்ற நேரில் ஊதியமும் நட்டம்
பேணிய கருவமெல்லாம் பித்தென இகழ்கின்றேனே!

2. கடவுளின் புதல்வன் இயேசு சிலுவையையன்றி மற்றோர்
உடைமையைப் பெரிதென்றெண்ணும் உன்மத்தமெனக்கு
வேண்டாம்;

உடையவன் சிந்து செந்நீர் உளந்தனில் எண்ணுந்தோறும்
புடவியில்மருட்டும் எல்லாப் பொருளையுந்துறப்பேன்யானே!

இவ்வாறு ஏசுபிரானின் தன்னிகரில்லாத தியாகத்தில் தம்முள்ளத்தைப் பறிகொடுத்து, அவர் வழியிலே வாழ்ந்த வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்டரி அழகசுந்தரதேசிகர் தமது அறுபத்தெட்டாவது அகவையில் 1941 - 04 - 12-ம் தேதி சனிக்கிழமை பி. ப. மூன்று மணிக்குக் கொழும்பு அரசினர் மருத்துவ மனையில் கர்த்தருக்குள், பேரின்ப ஐக்கியத்துக்குள் திளைத்து நிறைந்தார். அவர் வாழ்வு அற்புதமானது, அதிசயமானது. ஆண்டவரது வழிநடத்தலின் தனித்துவமான வீரத்தைப் பிரதிபலிப்பது என்பது மிகையாகாது!

# நொத்தாரிசு எஸ். கந்தையாபிள்ளை

(ஆசிரியவிருத்தம்)

"அன்னையின் வயிற்றில் அவதரித்திடுநாள்
அது முதல் அடியனேன் தனக்கு
இன்னமுதீந்தாய் இன்புறக்காத்தாய்
என் பிழை சகலமும் பொறுத்தாய்
பொன்னகர் நீங்கிப் புவியிடைப் போந்தாய்
புரையணுகாப்பரஞ் சோதி
என்னுளமிருந்தாய் இனி யெனக்கென்ன
என்றுமுன் அடைக்கலமருளே!"

"தன்பிழை நினைந்த தையலாள் தனது
தாழ்குழல் தடவிட நின்ற
நின்கழல் போதும் நீசனேனுய்ய
நிகரிலாவுயர் பரஞ்சோதி
என் பிழை எங்கோ பறந்ததுன்அடிக்கீழ்
ஏழையேன் ஏகிய நாளில்
அன்பனே அடியேன் அனுதின முன்றன்
அடைக்கலமடைக்கலமருளே!"

"நல்ல இயேசு நாதர் சுவாமி, நத்தார் தினமே" என்ற குழந்தைப் பாடலையும் பாடியவர். சிந்தைக்கினிய, செவிக்கினிய செழுந்தமிழில், தமிழிலக்கணயாப்பு விதிகளுக்கமைய, எழுசீர்க்கழில்நெடிலாசிரிய விருத்தப்பாக்கள் பத்தினை, மொத்தமாக எழுதிய கிறிஸ்தவ அருட்கவிஞர் நொத்தாரிசு எஸ். கந்தையாபிள்ளை. அவர் அளவெட்டியெனு மூரைச் சேர்ந்தவர். எமது திருச்சபைப் பாட்டுப்புத்தகத்தில் இப்பாடல்கள் பத்தும் இப்பொழுதும் 73, 83 ஆம் கீர்த்தனைப்பாக்களாக இடம் பெற்றுள்ளன. நொத்தாரிசு கந்தையாபிள்ளையின் தமிழ்ப்புலமையினையும், கவிதை படைக்கும் ஆற்றலினையும், பக்திச் சிறப்பினையும், இப்பாடல்கள் பிரசித்தப்படுத்துகின்றன. இப்பாடல்கள் புனையப்பட்டு அரை நூற்றாண்டுக்காலங்கடந்தும் இன்றும் புத்தம் புதியனவாய்மிளிர்வதற்குக் காரணம் கவிஞரின் தமிழிதயமும், ஏசுபிரானிடத்திருந்த பக்தி மேம்பாடுமே எனத்துணிந்து கூறலாம்! இக்கவிஞர் அளவெட்டியில் 1881ஆம் ஆண்டு அவதரித்

தவர். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அமெரிக்கன் மிஷன் சபைகளின் மதிக்கத்தக்க, பிரபலம் வாய்ந்த உறுப்பினராக விளங்கியவர். மிக இளம் வயதிலேயே தெல்லிப்பழை பயிற்சிக் கலாசாலை அதிபராகத் திகழ்ந்தவர். தமது இருபதாவது வயதுகளில் 1911 ஆம் ஆண்டில் அருள்திரு. வீரகத்திப் போதகரின் இடத்தினை இந்நிறுவனத்தில் பூரணப்படுத்தியவர். முப்பதாவது வயதில் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் பஞ்சாயத்து ஒன்றின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர். ஆயினும் அப்பஞ்சாயத்து எவ்வாறு இயங்கியது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இப்போது கிடைக்கவில்லை. அமெரிக்கன் மிஷனின் பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும், தலைவராகவும் கந்தையாபிள்ளை ஆற்றிய பணிகள் பல. அவற்றையிட்டுத் திருச்சபை பெருமைப்படுகின்றது. இருபத்தாறு வருடகாலம் அவர் நொத்தாரிசு உத்தியோகம் வகித்துள்ளார். 'நண்பர்களைப் பெறுவது எப்படி?' என்று ஒரு புத்தகத்தை டேல் கார்னிகே என்னும் பெயரினையுடைய ஒரு அமெரிக்க எழுத்தாளர் எழுதியுள்ளார். நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்வதே ஒரு தனிக்கலை. அக்கலை நன்கு கைவரப் பெற்றவர் நொத்தாரிசு கந்தையாபிள்ளை. அவருக்கு எண்ணிறந்த நண்பர்கள் இருந்தனர்.

அமெரிக்கன் மிஷன் சபைக்கூட்டங்கள் அக்காலத்தில் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடைபெறுவது வழக்கம். நொத்தாரிசு கந்தையாபிள்ளைக்கு ஆங்கிலம் நன்கு தெரியுமாயினும், சபைக்கூட்டங்கள் தமிழிலேயே நடாத்தப்பட வேண்டும் என்று தீவிரமாகத் தர்க்கிப்பார். தர்க்கிப்பதில் அவர் ஈடிணையற்றவர். கூட்டங்களை நேரத்துக்கு முடிக்க வேண்டுமாயின் நொத்தாரிசு கந்தையாபிள்ளையின் நியாயங்களை ஏற்றேயாக வேண்டும்!

தமிழிலக்கியத்தில் திளைத்தது அவரது இதயம். சைவ இலக்கியங்கள், தமிழ்க்காப்பியங்கள் யாவும் அவருக்கு மனப்பாடம். அக்காலத்திலேயே அவரது இல்லத்தில் அழகிய, பயன்மிக்க பனுவல்கள் பல நிறைந்த நூல்நிலையம் இருந்தது. அவர் வாழ்க்கை முழுவதும் கவிஞராக இல்லாவிடினும் அவரது இதய பரிபூரணத்திலிருந்து எண்ணிறந்த பக்திக் கீர்த்தனைகளும், பாடல்களும் பிரசவித்துள்ளன. தமிழ்ப்பாடல்களிலும், கீர்த்தனைகளிலும் அவர் தமது நெஞ்சைப் பறி கொடுத்தவர். வேறெந்த இன்னிசையும் அந்த இடத்தை நிரப்பி அவருக்கு மகிழ்வளிக்க முடிந்ததில்லை. தமிழ்க்கீதங்கள் ஆங்கில இசைக்கு ஏற்ப எழுதப்பட்டிருப்பதும், ஆராதனைகளில் பெரும்பாலும் ஆங்கில இசை ஞானமற்ற சபையார் அவற்றைத் தம் மனம்போனபடி பாடித்தீர்ப்பதும் கந்தையாபிள்ளைக்குச் சலிப்பை

ஏற்படுத்தியது. அதனால் அவர் தமிழிசையோடு ஒன்றிய கீர்த்தனைகள் ஆராதனைகளில் முக்கிய இடம் பெறவேண்டும் என்று கருதினார். அதற்கு முன்னுதாரணமாக அமையத்தக்கதாசத் தமிழ் நெஞ்சங்களையுருக்கும் பாக்களைத்தாமே ஆக்கியளித்தார். இப்பாக்கள் தமிழ்மரபும் யாப்பமைதியும் சிறந்து விளங்கியதுடன் ஆழ்ந்த திருமறைத் தத்துவங்களைத் தம்மகத்தே கொண்டனவாகவும் மிளிர்ந்தன. மேலெழுந்த வாக்கில் கந்தையாபிள்ளையின் பாக்களைப்படிப்போர் அவை சைவசமய குரவர்கள் சிலரது பாடல்களாக இருக்கலாம் என்று மருளுதலுமுண்டு. ஏனெனில் அப்பாக்களின் அமைப்பும், இசையும், யாப்பமைதியும் தனித்துவம் பெற்று தமிழிலக்கியப் பெரும்பரவைக்குள் புகுந்து விடுகின்றன.

இவ்வாறு ஈழத்தில் கிறித்தவ கீர்த்தனைகளைத் தமிழ் மரபோடு ஒன்றியாத்த தலையாய கவிஞர்களில் கந்தையாபிள்ளையும் ஒருவர். கந்தையாபிள்ளை கடமையே கண்ணானவர். தாராள சிந்தைபடைத்தவர். தமது குடும்பத்தவரையும், நண்பர்களையும், தம்மைப்போலவே இரட்சகரிடம் ஆற்றுப்படுத்தும் ஆளுமைமிக்கவர். கிறித்தவ சமயம் மேலைநாட்டிலிருந்து இங்கு வந்து, போந்த சமயம் என்றில்லாது, இந்த மண்ணில் மலர்ந்த சமயம் என்று மக்கள் கருதும் அளவுக்கு நாம் மக்களிடம் அவர்கள் விளங்கும்வகையில், இசையில் இரட்சகரை அறிமுகஞ்செய்து வைத்தல் வேண்டும் என்னும் அதீத வாஞ்சைமிக்கவர். தம்மை முற்றாகவே இயேசு பெருமானிடம் ஒப்படைத்தவர். பணிவு, அடக்கம், பரிவு முதலான அருங்குணங்கள் மிக்கவர்.

''பூரண மானுடனான ஐயன் பாதம்
பொன் மலரைப் போற்றி செய்து புவியும் வானும்
ஆரணமும் நிறைந்து நின்ற அவனெமக்காய்
அன்றுரைத்த படியவனி அடைந்த இராவிற்
சீரணி பெத்தலையூரிற் செறியிருட்டில்
சேர்தொழுவ மொன்றினிலே சிதைந்த புல்லில்
ஆருமற்றான் ஆமெனவே கிடக்கின்றானிவ்
வதிசயத்தை அடைந்தறிவம் அன்புள்ளீரே!''

என்று ஏசுபிரானைக் குழந்தையாகத் தரிசிக்க நம்மைக் கூவியழைக்கின்றார் கந்தையாபிள்ளை, 'தாயின் வயிற்றில் கருவாய் உருவான காலம்முதல் தம்மைப் புரக்கவே, ஏசுபிரான் பொன்னகர் துறந்து புவியிடைப்போந்தாரென்றும், தன்னுளமிருந்துதாங்குகின்றாரென்றும் கவிஞர் உணர்ச்சிப் பிரவாகம் ஊற்றெடுக்க உளம்

நெகிழ்ந்து உருகுகின்றார். 'மன்னிப்புக்கோரி நின்று மனதுருகிய
மகதலேனா மரியாள்' பணிந்த பாதங்களே எனக்கும் பாவப்பிணிய
கற்றும் பாதாம்புயங்களாகும்!' என்று பரவசமடைகிறார் கவிஞர்!
பூரணமான மனிதனாகவும், பூமியும், வானமும் போற்றும் வேத
முதலாகவும் விளங்குகின்ற ஐயனே, அவனி சேர்ந்து, ஆனடையும்
சிறுகுடிவில் ஆருமற்ற அனாதைபோலக் கிடக்கின்ற அதிசயத்தை என்
சொல்வேன் என்று வியக்கின்றார்! இவ்வாறு இரட்சகரின் ஒப்பற்ற
தயையிலும், தண்ணருளிலும், அவரைப்போற்றிப் பாடுதலிலும்
தம்மையர்ப்பணித்த நொத்தாரிசு கந்தையாபிள்ளை 1945 - 03 - 01
ஆம் தேதி தமது அறுபத்துநான்காம் வயதில் இவ்வுலக வாழ்வை
நீத்து இயேசுபிரான் திருவடிநிழலையடைந்தார். கவிஞர் கந்தையா
பிள்ளையின் இனிய தீஞ்சுவைப்பாடல்கள் எமது சபை ஆராதனை
களில் அடிக்கடி இடம்பெற வேண்டியதன் அவசியத்தை நாம் மனங்
கொள்வோமாக!

# பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

பாவலர் தெ.அ துரையப்பாபிள்ளை அவர்கள் தெல்லிப்பளை யிற் சைவவேளாண் மரபில், கச்சேரி முதலியாராக இருந்த அருளம்பலம் தம்பதிகளின் புதல்வராக 1872-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ம் தேதி பிறந்தார். தமது இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். இவரது தாயாரான திருமதி தங்கம்மா அவர்களே தாயும் தந்தையுமாகத் தனயனை மேலவனாக வரும் வகையில் வளர்த்தார். துரையப்பாபிள்ளை தமது ஆரம்பக்கல்வியைத் தெல்லிப்பளையில் உள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கற்றார். கல்வியில் முன்னிடம் பெற்று விளங்கிய இவர், ஆரம்பக்கல்வி குறைவறப் பெற்றபின் உயர்கல்விபெற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் சேர்ந்தார். அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி மட்டுமே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர்கல்வி வழங்கும் கல்வி நிறுவனமாக விளங்கியது.

இக்கல்லூரியிற் சேர்ந்த துரையப்பாபிள்ளை கிறிஸ்தவராக ஞானஸ்நானம் பெற்று Tailor என்னும் பெயருடன் மதம் மாறினார். கிறிஸ்தவரானார். யாழ்ப்பாணக்கல்லூரியில் அப்பொழுது ஆசிரியராகக் கடமையாற்றிய திரு J.R.ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் அபிமான மாணவராக விளங்கினார். ஆசிரியர் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை மீது துரையப்பாபிள்ளைக்கு பக்திபூர்வமான மரியாதை இருந்தது. இதனை அவர் பின்னாளில் தாம் எழுதிய ''கீதரசமஞ்சரி'' என்னும் கவிதை நூலை ஆசிரியர் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளைக்குச் சமர்ப்பணம் செய்ததன் மூலம் நிரூபித்திருக்கிறார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிற் கற்றுத் தமது பத்தொன்பதாம் வயதில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்தார். அதன் பின்னர் கல்லூரியினின்றும் நீங்கினார். சிலகாலம் அரசில் கணக்காளர் உத்தியோகம் பார்த்தார். பின்னர் அதனை விடுத்துப் பாணந்துறை நகரிலுள்ள பரி. யோவான் கல்லூரியில் ஆசிரியராக இரு வருடங்கள் கடமையாற்றினார். 1894-ல் இந்தியா சென்று பம்பாய் நகரையடுத்துள்ள கோலாப்பூர் உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்தார். அக்காலத்திலே இந்தியா எங்கும் கொடிய வாந்திபேதி நோய் பரவியமையாற் பல்லாயிரக் கணக்கான மக்கள் மடிந்தனர். இதனைக் கேள்வியுற்ற பாவலரின் அன்னையார் தம்மருமை மகனை உத்தியோகத்தினின்றும் நீங்கி யாழ்ப்பாணம் வருமாறு பரிந்து கேட்டுக் கொண்டார். துரையப்பா

பிள்ளையும் தாயாரின் வேண்டுகோளுக்கமையத் தாம்வகித்து வந்த ஆசிரிய உத்தியோகத்தினைத் துறந்து 1896 ல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார் யாழ்ப்பாணம் வந்ததும் தெல்லிப்ப ளையில் தாம் ஆரம்பக் கல்வி பெற்ற அமெரிக்கன் மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரியராகப் பதவியேற்றார். 1899-ல் அவர் ஆங்கில தராதரப் பரீட்சைக்குத் தோற்றி முதற் பிரிவிற் சித்தியடைந்தார். தெல்லிப் பளையில் உள்ள அமெரிக்கன் மிஷன் உயர் நிலைப்பள்ளியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். இக் காலசட்டங்களில் அவர் தீவிரமான புரட்டஸ்தாந்து மதக் கிறிஸ்தவராகவே இருந்தார். பல கிறிஸ்தவ கீர்த்தனைகளை எழுதியுள்ளார். அமெரிக்கன் மிஷனால் வெளியிடப்பட்டு வந்த ',உதயதாரகை'' பத்திரிகையின் ஆசிரியராக வும் சில காலம் கடமையாற்றியுள்ளார். இவரது உள்ளத்தில் தமிழ்த் தாகத்தையும் ஆங்கில அறிவையும் கிளர்ந்தெழச் செய்தவர். யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராக மிளிர்ந்த தமிழ்ப் பேரறிஞர் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களே' ஆர்னல்ட் அவர்கள் மூலமே துரையப்பாபிள்ளை பரந்துவிரிந்த உலகையும் தமிழ்ச் சமு தாயத்தையும் யதார்த்தரீதியிற் பார்க்கும் பெரும் பேற்றினைப் பெற்றார். அதனாற் பாவலர் துரையப்பாப்பிள்ளையின் மனதில் செயற்கருஞ் செயல்களைப் புரிந்து சாதனை படைக்க வேண்டு மென்ற எண்ணம் உருவாகி மெல்ல மெல்ல வளர்ந்து வரவாயிற்று.

தமிழும், ஆங்கிலமும், கவிபுனையுமாற்றலும், எழுத்தாற்றலும் மிக்கவராக விளங்கிய ஆசிரியர் துரையப்பாபிள்ளையைப் படித்த நண்பர்கள் பலர் சூழ்ந்து கொண்டனர். அவர்களிற் பலர் வைதிக சைவர்களாகவும், சிலர் வைதிக கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர் இத்தகையரில் வித்துவான் ச. சிவானந்தையர் பிரம்மஸ்ரீ இ முத் துக்குமாரசாமிக்குருக்கள், மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணே சையர் உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர் வண்ணார்பண்ணை ஆ. முத் துத்தம்பிப்பிள்ளை அவர்கள், ஆசுகவி க. வேலுப்பிள்ளை முதலான தீவிர சைவர்களும் யாழ்ப்பாணக் கல்லூரிப் பேராசிரியர் அலன் ஆபிர காம், அவவெட்டி நொத்தாரிசு கந்தையாபிள்ளை, யாழ்ப்பாணம் உவெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த வண. ஜே. த. அப்பாபிள்ளை, யாழ். பரி.யோவான் கல்லூரி அதிபர் T. H. குறோசெற் முதலான வைதிக கிறிஸ்தவர்களும் அடங்குவர்.

பாவலருக்கிருந்த தமிழ்த்தாகமும், சைவசமய நண்பர்கள் படிப் படியாக அவர் மீது பதித்து வந்த சைவசமயப் போதமும் அவரது கிறிஸ்தவ நம்பிக்கையைத் தளர வைத்தன. அத்துடன் தெல்லிப்

பழையில் தாம் ஆசிரியராகப் பதவி வகித்து வந்த அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப்பள்ளியின் முகாமையாளர்களான மிஷனரிகளு டன் பல தடவைகளில் அவர் முரண்பட்டு நின்றார். இதன் காரண மாக அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் தாம் வகித்துவந்த ஆசிரியர் பதவியினின்றும் நீங்கினார்.

வித்துவான் ச. சிவானந்தையர், பிரம்மஸ்ரீ இ. முத்துக்குமார சாமிக்குருக்கள் இருவருமே, பாவலரைக் கிறிஸ்தவ சமயத்திலிருந்து தடம்பிறழச் செய்தவர்களில் முதன்மையானவர்கள் என்று அறியக் கிடக்கிறது. அவ்விருவரும் ஆறுமுகநாவலரை வணக்கத்துக்குரியவ ராக்கி, பின்னாளில் கிறிஸ்தவ மதத்தைத் துறந்து வந்த சி. வை. தாமோதரம்பிள்ளை, கறோல் விசுவநாதபிள்ளை ஆகியோரைச் சான்று காட்டி, துரையப்பாபிள்ளையை கிறிஸ்தவ மதத்தினின்றும் நீங்கத் தூண்டினர், அத்துடன் ஆறுமுகநாவலர் போன்று சைவ சமயப் பாடசாலைகளை ஆரம்பிக்குமாறும் ஆலோசனை வழங்கினர்.

இவற்றால் கவரப்பட்ட துரையப்பாபிள்ளை அவர்கள் கிறிஸ் தவ மதத்தைத்துறந்ததுடன், தெல்லிப்பழையில் 1910-ம் ஆண்டில் ஒரு சைவசமயப் பாடசாலையைத் தோற்றுவித்தார். பாவலரதும், அவரது சைவசமய நண்பர்களதும் அயராத முயற்சியினால் பத்து வருடகாலத்துள் அப்பாடசாலை பெரிய அளவில் விருத்தியடைந் தது. அதுவே தற்போது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி என அழைக்கப்படுகிறது.

பாவலர் துரையப்பாபிள்ளை 1909-ல் தெல்லிப்பழையைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை என்பாரின் மகளான தையல்நாயகி என் னும் பெண்ணைத் திருமணம் செய்தார். அவருக்கு இரு புதல்வர் களும், ஒரு புதல்வியும் இருந்தனர். அவரது மூத்த புதல்வரே மகா ஜனக் கல்லூரியின் அதிபராக நீண்ட காலம் பதவி வகித்து அண்மை யில் அமரத்துவம் அடைந்த தெ து. ஜயரத்தினம் ஆவர்.

பாவலர் துரையப்பாபிள்ளை யாழ்ப்பாண சுவதேசக்கும்மி, எங் கள் தேசநிலை, கீதரமஞ்சரி, சிவமணிமாலை, தனிப்பாடல்கள் முத லான செய்யுள் நூல்களையும், சகலகுணசம்பன்னன் என்ற நாடக நூலையும் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதி வெளியிட்டுள்ளார். அவரது கவிதா நடையும், உரை நடையும் அவர் வாழ்ந்த காலகட் டத்தின் தமிழ்மொழி வழக்கினைப் பிரதிபலிப்பனவாக அமைந் துள்ளன.

பல்வேறு கல்வி, இலக்கிய, சமூகப்பணிகளில் பாவலர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். தமிழுக்கு முதலிடம் எங்கும் எப் போதும் தரப்பட வேண்டும் என்பது பாவலரின் தாரகமந்திரமாக விளங்கியுள்ளது. தெல்லிப்பழையில் பல பொதுப்பணி மன்றங்களில் அவர் அங்கம் வகித்ததுடன், தெல்லிப்பழை புகையிரதநிலையம் அமையவும் பெரிதும் உழைத்திருக்கிறார்.

பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் கிறித்தவமதஞ் சார்ந்த பாடல்கள் இரண்டினை மேலே தருகின்றோம்.

## கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தல்

இராகம்: சங்கராபரணம் ஆதிதாளம்

### பல்லவி

நானே யென்னை நவமாயுனக்கு
நல்கினே னென்னை ஏற்றுக்கொள்ளுவாய்!

### அநுபல்லவி

தேனே நிகர் தேவே நின்னருளைத்
தேங்குற எனக்கு தேசுற அருள்வாய்! — நானே

### சரணங்கள்

1) துங்க மிகுமுன்றன் தங்கத் திருவருள்
தங்கியே நிற்கிரியை பங்கமின்றிச் செய்து
பொங்கு மதிதுய்ய இங்கிதம் நானுறப்
பூரண நீயன்றி ஆரருள் செய்குவர், — நானே

2) பின்னுமோர் வற்சரம் மின்னல் போற்றோன்றியே
இன்னலின்பத்துடன் இன்னே மறைந்தது:
இன்னும் புதியதோராண்டு பிறந்தது
மாபரனே, கிருபா கரனேயிதோ; — நானே

3) எண்ணஞ் சொல்செயலிற் பண்ணிய பாவங்கள்
எண்ணில யாயினுந் தண்ணளி யாயுன்றன்
புண்ணியத்தாலவை மன்னித்தெனக் கிந்தப்
போதுறு மாண்டாசீர் வாதமாய் முடிய, — நானே



Mr. T. Thuraiappahpillai

என்று ஒரு புதிய ஆண்டினை வரவேற்று தம்மைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துநிற்கும் பாவலர் கடந்த வருடமுழுதும் தம்மைக் காத்து இரட்சித்த கர்த்தருக்குப் பின்வருமாறு பாவால் நன்றி பகர்கின்றார்.

## வருடாந்தத்துதி

இராகம்: கமாஸ்

ஆதிதாளம்

பல்லவி

ஈசனைத் துதித்திடுவோம் — எல்லோருமாக
ஈசனைத் துதித்திடுவோம்.

அனுபல்லவி

நேசமுடனெமை நிதம் பரிபாலித்த
நின்மலனைத் துதிப்போம் — இவ்வேளையில் — ஈசனை

சரணங்கள்

1) சென்ற வருடமுழுதும் - அதியன்பாகச்
சென்ற வருடமுழுவதும்
துன்றிய நன்மைகள் சொரிந்தெமைக் காத்தோனை
நன்றியுடன் துதிப்போம் - இவ்வேளையில்... — ஈசனை

2) தேகமனோ சுகத்தை - அருள் பரனைத்
தேக மனோ சுகத்தை
ஈகைசெயன்பின் இனியசர்வேசனை
இதய பூருவமாக - இவ்வேளையில்... — ஈசனை

3) ஆத்தும நன்மைகளை - அனுதினமும்
ஆத்தும நன்மைகளை
பூர்த்தியுடன் நிதமும் புரிந்திடுமமலனைப்
போற்றி நாம் மிகத்துதிப்போம்-இவ்வேளையில்... — ஈசனை

பாவலர் துரையப்பாபிள்ளை பிற்காலத்தில் ''இந்துசாதனம்'' ஆங்கிலப் பதிப்புக்கும் மூன்று ஆண்டுகள் ஆசிரியராக இருந்துள்ளார். எனினும் அவரிடமிருந்து பரிணமித்த சகல திறன்களுக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அவர் பெற்றுக்கொண்ட கல்வியும், அனுபவங்களுமே முழுமையான ஆதர்சங்களாக அமைந்தனவெனின் மிகையாகாது. அதனை மேற்கண்ட இரு கீர்த்தனைகளும் ஐயமற நிரூபிக்கின்றன.

# வித்தகர் ஜே. வி. செல்லையா

ஈழத்துக் கிறிஸ்தவ அருட்கவிஞர்களில் ஒருவரான அமரர் ஜே. வி. செல்லையா நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கியவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவராகவும், ஆசிரியராகவும், துணை அதிபராகவும், பதில் அதிபராகவும் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் (1889-1947) அமைந்து அதன் புகழையும், தம் புகழையும் உலகளாவச் செய்த பேரறிஞர். யாழ்ப்பாணக் கல்லூரியின் முதலாவது சுதேசப்பதில் அதிபராகப் பதவி வகித்தவரும் அவரே. அவர் ஒரு எம். ஏ. பட்டதாரி. ஆங்கில, தமிழ் இலக்கியங்களில் துறைபோயவர். லத்தீன் மொழியில் மகாபண்டிதர். மிகச் சிறந்த ஆசிரியர். மக்கள் மனங்கவரும் பேச்சாளர். ஈடிணையற்ற எழுத்தாளர். இலங்கையரசின் கல்விச்சபை உறுப்பினராகவும், பரீட்சைச்சபை உறுப்பினராகவும், அரசினால் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பல்லாண்டு காலம் பணியாற்றியவர். ஈழத்தின் முதல் தமிழ்ப்பத்திரிகை எனக்கருதப்படும் ''உதயதாரகை''யின் ஆங்கிலப்பகுதி ஆசிரியராகப் பல்லாண்டுகள் கடமையாற்றி இலக்கியம், அரசியல், கல்வி, விஞ்ஞானம் மற்றும் பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படைத்தவர்.

தோற்றப்பொலிவும், ஆற்றல் திறனும் அதீதமாகப் பெற்றவர். எந்த ஒரு விடயத்தை எடுத்துக்கொண்டு பேசினாலும், எழுதினாலும் தலைசிறந்த ஒரு நியாய வாதியின் தோற்றப்பாடு அவரிடத்தே தோன்றும். இத்தனை திறமைகளும் ஒருங்கமையப் பெற்றிருப்பினும் அவர் மிகச்சிறந்த ஒரு பக்திமான், வைதிக கிறிஸ்தவர். அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆலயங்கள் தோறும் திருமறையின் மேன்மையையும், இயேசுபிரானின் இரட்சிப்புப் பணியைப் பற்றியும் கேட்போர் உளமுருகப் பிரசங்கித்து வந்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரித் தர்மகர்த்தர் சபை உறுப்பினராகவும் செயலாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். அதன் தலைவராகவும் ஒரு ஆண்டு பணிபுரிந்துள்ளார். யாழ்ப்பாணக்கல்லூரியின் வெளியீடான மஞ்சரி (Miscellany)யின் ஆசிரியராகவும் பல்லாண்டு காலம் கடமையாற்றி மாணவருலகிற்கும், கல்வியுலகிற்கும், அருமருந்தன்ன பல ஆக்கங்களை அளித்துள்ளார்.

கல்விப்பணி, இலக்கியப்பணி, கடவுட்பணி இவற்றுக்கே தம்மை அர்ப்பணித்தவர் பெருங்கல்விமானான இக்கவிஞர். தமது மாணவப் பருவத்திலிருந்து, அதாவது அவரது பதினான்கு வயதிலிருந்து, அவர் கர்த்தருக்குள் ஐக்கியமாகும்வரை (1947) யாழ்ப்பாணக்கல்லூரியுடன் ஒன்றி வாழ்ந்தவர். இந்த ஐந்து தசாப்தங்களிலும் அவர் ஆற்றிய அரும்பணிகள் அளப்பில.

அவர் பல நூல்களை எழுதியுள்ளார்: அவற்றுள் பிரபலமானவை ''ஆங்கிலக்கல்வி வளர்ச்சியில் ஒரு நூற்றாண்டு!'' என்னுந்தலைப்பில் ஆங்கிலத்தில் அவர் எழுதிய நூல் 1922-ல் பிரசுரமானது. (A Century of English Education.) அதன் இரண்டாவது பதிப்பு 1984-ல் யாழ்ப்பாணக் கல்லூரி வெளியீடாக பிரசுரமாகியுள்ளது. இந்நூலில் இலங்கையில் - குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆங்கிலக்கல்வியின் வளர்ச்சிக்கு வட்டுக்கோட்டை செமினரியும், யாழ்ப்பாணக் கல்லூரியும், அமெரிக்கன் மிஷனரிமாரும் செய்த சேவைகள் மிகவும் விளக்கமாக, துல்லியமான பல ஆதாரங்களுடன் தரப்பட்டுள்ளன.

பேராசிரியரும், பெருங்கவிஞருமான ஜே. வி. செல்லையா அவர்கள் ஆக்கிய புகழ்பூத்த நூல்களில் ஒன்று ''பத்துப்பாட்டு'' என்னும் சங்க இலக்கிய நூலின் ஆங்கிலமொழி பெயர்ப்பாகும். இதனை அவர் 1946-ம் ஆண்டிற் சாதித்தார். சாதாரண ஒரு தமிழ்க் கவிதையினையோ, சிறுகதையினையோ தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பதில் பேராசிரியர்கள் படும் அவலம் நாமறியாததல்ல. பலரின் மொழிபெயர்ப்பு அவர்களையே பெயர்த்துவிடுவதாகவும் அமைந்துவிடுவதுண்டு! நிலைமை இவ்வாறிருப்பப் பேராசிரியர் ஜே. வி. செல்லையா மிகக்கடினமான நடையிலமைந்த ''பத்துப்பாட்டு'' சங்கஇலக்கியத்தைச் சரளமான ஆங்கில நடையில் மொழிபெயர்த்துச் சாதனை படைத்துள்ளார். இதுபற்றி அவர் அந்நூலிற்கு எழுதிய முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''மகாவி பாரதியார் தமது ஒரு கவிதையில் குறிப்பிடுவதுபோல பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நாமறிவதுமட்டுமன்று, நமது திறமான புலமையினையும் வெளிநாட்டார் தெரியச்செய்தல் வேண்டும் 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல்வேண்டும்!' நாம் மிகச்சிறந்த பண்பாட்டுக்கருவூலங்களின் மரபில் மலர்ந்தவர்கள். அதனைப்பாதுகாக்க வேண்டியவர்கள். எனவே எமது பழந்தமிழிலக்கிய மேம்பாடுகளைப் பிறநாட்டாரும் அறிதல்வேண்டும்!

இலங்கையின் முன்னாள் பிரித்தானிய தேசாதிபதிகளில் ஒருவரும், பிரபல பாளிமொழிவிற்பன்னருமாகிய சாமர்ஸ் பிரபு அவர்கள், சில ஆண்டுகளுக்குமுன் என்னை இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சந்தித்தபோது:-

''தமிழ்மொழி மிகப்பழமை வாய்ந்த இலக்கிய வளம் நிறைந்த மொழியென்றும், வளர்ச்சியுற்ற ஐரோப்பிய மொழிகளுக்குச் சற்றும் குறைந்ததல்லவென்றும் அறிகிறேன். அப்பெருமை பெற்ற தமிழிலக்கிய நூல் ஏதாவது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதா? என்று கேட்டார். அதற்கு நான் டாக்டர் போப் அவர்கள் ஆங்கிலத்தில் ''திருக்குறளை'' மொழிபெயர்த்துள்ளார். வேறு தமிழிலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக எனக்குத் தெரியவில்லை என்றேன்: 'ஏன், நீங்கள் இத்தகைய மொழிபெயர்ப்புக்களில் ஈடுபடக்கூடாது?' என்று என்னை அவர் தூண்டி விட்டார்! அதன் விளைவே ''பத்துப்பாட்டு'' நூலினை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் செய்தது!''

இவ்வாறு பேராசிரியர் ஜே. வி. செல்லையா அவர்கள் அரிதின் முயன்று மொழிபெயர்த்த ''பத்துப்பாட்டு'' சங்க இலக்கியநூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்ற முதலாவது பழந்தமிழிலக்கியம் எனும் பெருமையைப் பெறுகின்றது. ஒரு பல்கலைக்கழகமோ, அறிஞர்கள் பலர் ஒன்றுகூடி விளங்கும் தமிழ்ச்சங்கம் ஒன்றோ செய்ய வேண்டிய பாரிய இலக்கியப்பணியினை ஜே. வி. செல்லையா தனியொருவராகவே சாதித்திருக்கிறார். தமிழிலேயே மகாவித்துவான்களின் துணையின்றிப்படித்து விளங்குதற்குக் கடினமான இவ்விலக்கியக்கருவூலத்தை, நச்சினார்க்கினியர் போன்றோரது உரை மூலமே முடிந்தவரை தெரிந்து கொள்ள முடியும்! இத்தகையதொரு பழந்தமிழிலக்கியத்தை ஆங்கிலத்தில் அனைவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் மொழிபெயர்ப்பதற்கு எத்துணைப் புலமை வேண்டும்? இதனைச் செய்து முடிப்பதற்காக அவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களது பதிப்புநூல்களை ஆராய்ந்தார். சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகளார்) பி. ரி. சீனிவாச அய்யங்கார் ஆகியோரது சங்க இலக்கிய நூற்பதிப்புக்களையும் நுணுக்கமாக ஆய்வுசெய்தார். தமது பணி முழுமையானதா என்பதனை ஈழத்துப் பேரறிஞரும், யாழ்நூல் தந்த வித்தகருமான சுவாமி விபுலானந்தரைக் கொண்டும் பரிசீலித்தார்.

பேராசிரியர் ஜே. வி. செல்லையா எழுதிய ''பத்துப்பாட்டு'' ஆங்கிலமொழிபெயர்ப்புக்கு அரசியலும், அறவியலும் தேர்ந்த, துறை



Mr. J. V. Chelliah

போகிய இரு பெரியார்கள் முன்னுரை வழங்கியுள்ளனர். அவர்களில் ஒருவர், அந்நாளில் சென்னை மாகாண (தமிழ்நாடு) அமைச்சராக இருந்தவரும், பின்னர் மகாராஷ்டிர மாநில ஆளுநராகப் பதவி வகித்தவருமான டாக்டர். பி. சுப்பராயன் அவர்களாவர். அவர் தமது முன்னுரையில் பேராசிரியர் ஜே. வி. பற்றிக் குறிப்பிடும்போது தமிழ்நாடு இச்சாதனை குறித்துப் பெருமைப்படுமென்பதற்கு ஐயமில்லை. நானும் நூலாசிரியரோடு சேர்ந்து, மேலும் பல எழுத்தாளர்களும், அறிஞர்களும், பழந்தமிழிலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, தமிழறியா வேற்றுமொழியாளர்கள் தமிழின் பெருமையை அறிந்துகொள்ள வகைசெய்தல் வேண்டும் என்று அவாவுகின்றேன். பேராசிரியர் ஜே வி க்கு நான்தான் முன்னுரை எழுதி அறிமுகப்படுத்தவேண்டும் என்றில்லை. அவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்! என்கின்றார்.

முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலாநந்தர் தமது முன்னுரையில் யான் ''பிரபுத்த பாரத'' பத்திரிகையின் ஆசிரியராக மாயாவதியில் (அல்மோறா மாவட்டம்) இருந்தபோது அப்பத்திரிகையில் ''பத்துப்பாட்டு'' பற்றி ஒரு கட்டுரை வரைந்திருந்தேன். இந்நூலினைத் தமிழறிஞர் எவராவது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று என்னுளம் நினைந்தது. நான் மாயாவதி மலைப்பிரதேசத்தைவிட்டு வந்தபோது, எனது அந்த எண்ணம், எனது நாட்டவர் ஒருவராலேயே நிறைவுசெய்யப்பட்டிருப்பது கண்டு இறும்பூதெய்தினேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழறிஞர்கள் இந்நூலை ஒருசேர அங்கீகரித்திருந்தனர். எனினும் பல்கலைக்கழக நிதிக்கட்டுப்பாட்டு விதிகளால் இந்நூலைப் பிரசுரிக்க முடியாது போயிற்று. எனக்கு அவகாசம் கிடைத்த மூன்று மாத காலத்தில் இம்மொழிபெயர்ப்பினை நன்காராய்ந்து படித்து, பேராசிரியர் ஜே. வி.யின் இலக்கிய ஆற்றலையும், மொழிபெயர்க்கும் திறனையும் கண்டு வியந்தேன். கரந்தைத் தமிழ்ச்சங்கத்தை (தஞ்சாவூர்) இந்நூலைப் பிரசுரிக்குமாறு யான் முயன்றும், யுந்தகாலமாக இருந்ததால், கடதாசித்தட்டுப்பாட்டினால் அது கைகூடவில்லை. எனவே இந்நூலை இலங்கையில் ''ஜெனரல் பப்ளிசர்ஸ் லிமிட்டெட், கொழும்பு'' மூலம் பிரசுரிக்க ஆலோசனை கூறியுள்ளேன்...! இந்நூலாசிரியர் வட்டுக்கோட்டை செமினரி, யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றின் பேராசிரியர், துணை அதிபர். பதிலதிபர் பதவி வகிப்பவர் இலங்கையரசின் கல்விச்சபை, பரீட்சைச்சபை உறுப்பினர். ஆங்கில இலக்கியத்திலும், லத்தீன்மொழியிலும் பேரறிவு படைத்தவர். தமது முதிர்வயதில் இவ்வரிய சாதனையைப் புரிந்தமைக்குத் தமிழுலகம் அவருக்கு நன்றிக்கடப்பாடுடையது...!'' என்று போற்றுகின்றார்.

இந்நூலைத் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1962-ம் ஆண்டில் வெளியிட்டது. முதற்பதிப்பு 1946-ம் ஆண்டில், முன்னமே வெளிவந்திருந்தது. தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம் இந்நூலை வெளியிட அனுமதித்தமைக்காக பேராசிரி யர் ஜே. வி.யின் குடும்பத்தினருக்கு விசேடமாக நன்றி தெரிவித் துள்ளது.

தமிழிலும், ஆங்கிலம். லத்தீன் மொழிகளிலும் பேராசானாக வும், புலமையாளராகவும் விளங்கிய பேராசிரியர் ஜே. வி. செல்லையா மிகச்சிறந்த கிறித்தவ பக்திக்கவிஞராகவும் பரிணமித்துள்ளார். அவர் பல கீர்த்தனைகளை யாத்திருக்கிறார்.

பின்வரும் கீர்த்தனை அவரது ஆழ்ந்த புலமைக்கும், பக்திக்கும் எடுத்துக்காட்டாகத் தமிழ்ச்சுவை சொட்ட இதயமுருக்கும் வகையில் மிளிருகின்றது. அதனை ஈண்டு முழுமையாகத் தருகின்றோம்.

இராகம்; சங்கராபரணம் — ரூபகதாளம்

) ''அன்பே என்னை விடாதென்றும் ஆசித்தணைப்பவனே
நின்பேர் மார்பினிலே தொய்ந்த நேயன் உறங்கிடுவேன்
இன்பாமாழியில் நீ எனக்கீந்த இச்சீவன் மூழ்கி
என்றே பூரித்திட அதை இன்றுனக்கொப்புவிப்பேன்!

2) சோதியே, சுடரே எனைச் சுற்றித் தொடர்பவனே
ஆதி, நீ கொடுத்த இந்த அற்ப ஒளி மங்குதே, உன்
சோதியார்ந் தென்னுளம் மிகச் சுவாலித் தெரிந்திடவே
நாதா, என் ஒளியை மீண்டும் நானுனக்கொப்புவிப்பேன்!

3) இன்பே, துன்பத்திலும் தேடி எங்கும் வருபவனே,
என்றே என்னுளத்தை எதிர்த்தெப்படி மூடிடுவேன்?
விண்ணில் மாரியூடாய் மிக மின்னுமக் காலையிலே
இன்பார், கண்ணீரற்ற வாழ்வு என்றுமெனக்கே உண்டு!

4) குருசே, என்தலையை மேலே கொண்டே உயர்த்துவோனே
உரிய நாதா! உன்னை விட்டே ஓட முடியாதே,
பெருமை கீர்த்தியெல்லாம் மண்ணில் பேதை புதைத்திடுவேன்
அரிய செம்மலர்போல் நித்ய ஆன்மம் மலர்ந்திடுமே!''

இவ்வாறு இறையன்பிலும், இலக்கிய இன்பத்திலும் தி பேராசிரியர் ஜே. வி. செல்லையா அவர்கள் எழுபத்திரண்டு ஆ... கள் இப்பூவுலகில் வாழ்ந்தார். அதில் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் அவர் சாதனைகள் பல புரிந்த காலமாகும். 1947-ம் ஆண்டு அவர் இயேசுபிரானின் திருப்பாத கமலங்களில் தம்மையர்ப்பணித்துத் தம் பூதவுடலை நீத்து ஆண்டவருக்குள் ஐக்கியமாகினார்.

# முகாந்திரம் ஏ. பி. குமாரகுலசிங்கி

இந்த நூற்றாண்டின் ஆரம்பக்கட்டத்தில் அமெரிக்கன் மிஷனின் பிரபலமான தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் முகாந்திரம் ஏ. பி. குமாரகுலசிங்கி. அமெரிக்கன் மிஷனின் பிரதான உறுப்பினராகவும், உறுப்பினராகவும், அதன் முக்கிய குழுக்களின் உறுப்பினராகவும் இருந்து அரும்பணிகள் பல ஆற்றியவர். ஆங்கிலமே அரசகரும மொழியாக இருந்த அக்காலகட்டத்தில் அவர் இலங்கையின் பல பாகங்களிலும் முக்கிய பதவிகளில் கடமையாற்றியுள்ளார். அவரது சேவைத்திறனை மெச்சிய அரசு அவருக்கு முகாந்திரம் பட்டமளித்துக் கௌரவித்தது. அவர் தெல்லிப்பழைத் திருச்சபையைச் சேர்ந்தவர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நிறைந்த புலமையுள்ளவர் முகாந்திரம் குமாரகுலசிங்கி. உத்தியோகரீதியில் ஆங்கிலத்தையே அக்காலகட்டத்தில் கையாள நேரிட்டபோதும், அவர் தீராத தமிழ்க்காதலராகத் திகழ்ந்துள்ளார். திருச்சபையின் நடைமுறைகளில் குமாரகுலசிங்கி கொடுக்கும் விளக்கங்கள் அப்போது மிகவிலையேறப்பெற்றவையாக மதிக்கப்பெற்றன, எவரது மனதையும் நோகச்செய்யாது, தமது கருத்துக்களை அனைவரும் ஏற்கசெய்வதில் அவர் சமர்த்தராக விளங்கினார். அவர் தெளிந்த சிந்தனையாளர், சுயநலநோக்கு அறவே அற்றவர். அவர் திருச்சபையின் நிர்வாக அமைப்பில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். 1936 ஆம் ஆண்டு அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்ற அவர் தமிழ்ப்பணியையும், இறைபணியையும் முன்வைத்து வாழ்ந்தவர்.

அரசசேவையில் இருக்கும்போதே அவர் அரிய இரு தமிழ் நூல்களைப் பிரசுரித்துள்ளார். தமிழ்மொழிக் கையேடு, தமிழ் இலக்கணக் கையேடு என்பன அந்நூல்களாவன. இவை அக்காலத்து உயர்பதவியிலிருந்தவர்களுக்கும், உயர் வகுப்புகளில் கல்வி கற்றுக்கொண்டிருந்தவர்களுக்கும் தமிழையும். தமிழிலக்கணத்தையும் அறிமுகப்படுத்தும் அரிய சாதனங்களாக விளங்கின.

தமிழ்க்கிறித்தவர்கள் ஆங்கில அறிவு பெறுவதில் காட்டும் ஆர்வத்திலும் பார்க்கத் தந்தாய்மொழியான தமிழிலும் புலமை பெற்று விளங்கவேண்டுமென அவர் அவாவினார். அதன் பேறாகத் திருச்சபை ஆராதனைகளும், கூட்டங்களும் தமிழுக்கு முதன்மையிடந் தரவேண்டுமெனக்கருதினார். வெறுஞ்சிந்தனையுடன் நின்றுவிடாது அக்கருத்துக்களைத் தாமே செயற்படுத்திக்காட்டினார்.

அமெரிக்கன் மிஷனின் உத்தியோகபூர்வமான பத்திரிகையான ''உதயதாரகை''யில் அரிய பல கீர்த்தனைகளை எழுதினார். அவை அக்காலத்துப் பலராலும் பாராட்டுப்பெற்றன. தமது கீர்த்தனைகள் அடங்கிய இரு தொகுதி நூல்களையும் அவர் வெளியிட்டார். ''ஜெப மாலை'', ''பொற்பாத துத்தியம்'' என்பன அந்நூல்களின் பெயர்களாகும். முகாந்திரம் குமாரகுலசிங்கியினது தந்தையும், சகோதரருங்கூட அருமையான கிறிஸ்தவக் கீர்த்தனைகளைப் புனைந்துள்ளனர். அவை எமது பாட்டுப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணக் கிறித்தவ திருச்சபைகள் தமிழ்க்கீர்த்தனைகளில் தமது ஆராதனையை நடாத்துதல் வேண்டும் என்று பல்காலும் வலியுறுத்தியவர் குமாரகுலசிங்கி. இன்று அவரது இவ்வேணவா நிறைவேறியிருப்பது அன்னாரின் புனிதமான உள்ளத்திற்குச் சாந்தியளிப்பதாகவுள்ளது. கிறிஸ்தவ கீர்த்தனைக்குழு உறுப்பினராக அவர் மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். அதன் பயனாகக் கர்த்தரை மகிமைப்படுத்தும் வகையில் தமிழ்க்கீர்த்தனைகள் தொகுக்கப் பெற்று எமது பாட்டுப்புத்தகத்தில் இடம்பெற வழிபிறந்தது.

முகாந்திரம் குமாரகுலசிங்கி தமக்குள்ள பரந்த உத்தியோகபூர்வமான அறிவையும், தமிழ், ஆங்கிலப் புலமையினையும் கிறிஸ்தவ திருச்சபை செழுமையுறப் பயன்படுத்தி வெற்றிகண்டவர். ஒவ்வொரு மனிதனும் தனது தாய்மொழியில் இறைவனைத் துதிப்பதில் அடையும் பேரின்பம், வேற்றுமொழியிலோ அல்லது அதன் சாயலில் உருவாக்கப்பட்ட படைப்பின்மூலமோ பெறமுடியாதது என்று அவர் திடமாக நம்பினார். அந்த இலட்சியத்திற்காகவே அவர் தமது வாழ்நாள் முழுவதும் உழைத்துள்ளார். முகாந்திரம் குமாரகுலசிங்கி ஆக்கிய கீர்த்தனைகள் எமது பழைய பாட்டுப்புத்தகத்தில் எட்டும், புதிய பாட்டுப்புத்தகத்தில் ஆறுமாக இடம்பெற்றுள்ளன. அவரது தந்தையார் இயற்றிய கீர்த்தனைகள் இரண்டும் எமது பாட்டுப்புத்தகத்தில் உள்ளன. நினைத்தவுடன் எவரும் கீர்த்தனைகளையோ மற்றும் பாடல்களையோ எழுதிவிடமுடியாது. அல்லது வெறும் இலக்கண அறிவினைமட்டும் வைத்துக்கொண்டு கல்லடுக்குவது போன்று சொல்லடுக்குவதனாலுங்கூட உள்ளத்தை உருக்கும் கவிதையோ, பாடலோ பிறந்துவிடமுடியாது. எனவே கவிஞனுக்கு பரந்த தமிழிலக்கிய அறிவும், உணர்ச்சிமயமான எழுச்சியும் உள்ளத்திலிருந்து கொப்பளித்தல் வேண்டும். அதுவும் புதியதொரு தலைமுறைக்காக, புதியதொரு சமயச்சூழ்நிலையை ஆழப்பதித்து அழகுபடுத்துவதற்காக எழுதப்படும் பாடல்கள், அதீத கற்பனையும், கடவுள் பக்தியும், பரந்த இலக்கியப்பரவையில் மூழ்கி

யெழுந்த புத்துணர்வும், புத்தெழுச்சியும் படைத்த ஒருவராலேயே படைக்கப்படமுடியும். அதற்கு உதாரணமாக முகாந்திரம் குமார குலசிங்கியின் பாடல்கள் மிளிர்கின்றன. அவற்றிலே தமிழ் மண்ணின் மணமும், தமிழிலக்கியத்தின் சாயலும், தமிழுலக்கணப்பேரணியினழகும் பிறங்கி நின்று பெருமை செய்கின்றன. பழந்தமிழ்ப் புலவர்களோடு ஒப்பவைத்து நோக்கும் உயரிய இலக்கிய நடையில் அவரது கீர்த்தனைகள் அமைந்துள்ளன. வழி, வழி வந்த தமிழிலக்கிய மரபுகள் அவரது கீர்த்தனைகளில் ஒளி விடுதலை நாம் உணர்ந்து சுவைப்போமாக;

## தேவாரம்

''தேனினுமினிய தெள்ளமுதேயென்
செல்வமே வெல்லைமா நகரில்
ஊனினை எடுத்தே உதித்தநல் ஒளியே
ஒப்பிலா உயர்தயை வடிவே
மானது பொறித்த வலையினிற் சிக்கி
வதங்கி நின்றலைவது போல
யானுனை விட்டிங் கிகவலைப் பட்டே
இடைகின்றேனெனைப் புரந்தருளே!''

தந்தை நீயலையோ தமியனுமுன்றன்
சரணமே தொழுஞ் சுதன் அலனோ
எந்தை நீ என்றன் பிழைபொறுத்தன்பாய்
இரங்கலுன் கடனலவோ யான்
பந்த மீதிட்ட மெழுகு போலுள்ளம்
பதை பதைத்துழலுகின்றேனுன்
சிந்தை நைந்துருகித் திருப்பதந்தருவாய்
செல்வமே இயேசு நாயகனே!''

இத்தேவாரங்களில் தந்தையுடன் ஒரு மகன் மனந்திறந்து, உள்ள முருகப் பேசுகின்ற உயிர்ப்பொலியை நாந்தரிசிக்கின்றோம். இவ்வாறானபேறு முகாந்திரம் குமாரகுலசிங்கி பெற்றதன்மையினாலேயே அவர் இவ்வாறு உள்ளமுருகப்பாடுகிறார்.

## கலித்துறை

'' நாளும் பவத்தில் உழன்றவனென்றிந்த நானிலத்தில்
தாழும் படிக்கெனை வைத்திலை, யாதுமோர்தாழ்ச்சியின்றி
வாழும் படிக்கிங்கு வைத்தனை, யானுனை வாழ்த்தியெந்த
நாளுந்துதிக்கவருள் புரிவாயென் நவமணியே!''

என்று கவிஞர் ஆனந்த சாகரத்தில் அழுந்தி எழுகின்றார். ஆண்டவனைத் தொழுகின்றார். பேரிலக்கிய அமைதியுடன் பக்தி மணமும் இப்பாடலில் பரிமளிக்கின்றதல்லவா? இறைவனோடு ஏற்படுகின்ற இணக்கத்தில் எமது பாவங்கள் கழுவப்பட்டுப் பரிசுத்த நிலையைப் பெறுகிறோம். 'இவன் இப்படி இருந்தான் என்ற நிலைபோய்' மிக வுயர்ந்த ஆத்மீக நிலைக்கு அந்த இணக்கம் எம்மை இட்டுச் செல்கின்றது. அந்த அனுபவமே கவிஞரின் இப்பாடலில் ஒளி வீசுகின்றது.

## திருத்தாண்டகம்

''இன்று வருமோ அழைப்பு நாளைக்கே வருமோ
என்று வருமோ, சிலநாட் சென்று வருமோயாம்
ஒன்றுமறியோமுலகமாயவலைப்பட்டே
உழலுகின்றோம், சுழலுகின்றோம், ஒரு சுகமும்காணோம்
வென்றுலக மாயைதனை வெறுத்தே யாம்தள்ள
வேண்டுகின்றோம் நின்கிருபை வேண்டுகின்றோம் நாதா,
உன்றனரும் உசிதநிறை ஒலிவமலைத் தீஞ்சொல்
ஊட்டியருள் திருக்கருணை ஊற்றியருள் தேவே!''

வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தும் இத்திருத்தாண்டகப் பாடல், படிக்கும்போது சுவாமி விபுலாநந்தரின் 'கங்கையில் விடுத்த ஓலை'க் கவிதைகளை நினைவூட்டுகிறது. அதே போழ்து கிறிஸ்தவ திருமறையின் வரம்புமீறாது நின்று ஏசுபிரானின் ஒலிவமலைப் பேச்சையும், உள்ஒளியையும் எம்முள்ளத்தே ஏற்றிவைக்கின்றது.

## திருப்புகழ்

''அளவே கடந்து னடியே பிரிந்த
ததனால் வருந்து — துயராலே
அகநாள் நெகிழ்ந்து சிரமே குனிந்துன்
அடிநேர் பணிந்து — மிகவாக
உள, நா உகந்து பவமே இகழ்ந்துன்
உறவாலடைந்து — புவிவாழ
உனையே இரந்த அருளே குறைந்த
ஒரு பாவி என்னில் — உருகாயோ?
ஒளிசேர் செறிந்து பவமே தொலைந்திங்
உலகோர் சிறந்து — நிலையாக
உருவாகி வந்து குருசேறி நொந்த
உயர் தேவமைந்த; — உனைநாடும்

எளியேனிழிந்து தெளிவே இழந்திவ்
இகமீது வந்து — பதறாதே
இதமாக உன்றனருளாசி தந்திங்
கெனையாள இன்று — வருவாயே!''

இத்திருப்புகழ் எமது பழைய பாட்டுப்புத்தகத்தில் 19ஆம் பாடலாக அமைந்துள்ளது. இசையிலும், இனிமையிலும் அருணகிரிநாதரின் திருப்புகழோ என்ற ஐயத்தை விளைக்கின்றது. பொருளில் கிறிஸ்தவ திருமறையைத் தழுவி ஏசுநாயகனை இனிதே அழைக்கின்றது. முகாந்திரம் குமாரகுலசிங்கியின் பாடல்கள் அனைத்தும் தமிழ் மணமும், தமிழ் மண்ணின் மணமும், சிலுவைச் செந்தமிழுஞ் சேர்ந்து தித்திக்கின்றன. கீர்த்தனைகள் என்ற பெயரில் சமகாலத்து மலினமான திரைப்பாடல்களை அடியொற்றி எழுதுபவர்கள் மலிந்து விட்ட இக்காலகட்டத்தில், மிக ஆழமான, தமிழிலக்கணஞ் செறிந்த, செந்தமிழ் பொங்கித் ததும்பும் திருமறைப்பாடல்களை குமாரகுலசிங்கி தந்துள்ளார். தேவாரம், விருத்தம், கலித்துறை, திருநேரிசை, திருத்தாண்டகம், திருப்புகழ் என அவை நந்தமிழ் மண்ணின் நறுமணம் பிலிற்றுகின்றன. இத்தனித்தன்மைதான் முகாந்திரம் குமாரகுலசிங்கியை கிறிஸ்தவ கவிஞர்கள் வரிசையில் மிக உயரமான இடத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. இவ்வாறு அகமும், புறமும் ஒளிமயமாக்கும் பாடல்களை ஆக்க குமாரகுலசிங்கி எத்தகைய தெய்வீக இன்பத்தில் திளைத்திருத்தல் வேண்டும்?

அமரத்துவமடைந்த எமது பேராயர் கலாநிதி சபாபதி குலேந்திரன், முகாந்திரம் குமாரகுலசிங்கி பற்றி இவ்வாறு கூறுவார்;-

"Mr. Kumarakulasinghe was not merely a Tamil Scholar. But was one who wanted to bring his knowledge of the language to the service of the Christian from time to time he published Poems of a high quality in the Morning Star. Besides these he put out out two little volumes of Poems entitled "Jabamalai" and "Potpatha Thuthiam." They contain exceedingly beautiful verses. Eight of his Compositions have been admitted into our hymn Book. Both his father and

his brother had written Tamil verses. Two of his father's Lyrics are in our Hymn Book. Ability in the direction therefore was deep - seated..........................................................

"in whatever capacity one knew Mr. Kumarakulasinghe he always gave the impression of a courageous kind and sincere man. I am glad of the Privilege of having known him and enjoyed his friendship for many years."

இந்நூற்றாண்டின் திருமறைத்தத்துவாசிரியர்களில் பிரபலமானவரான எமது பேராயரின் புகழ்மாலையே, முகாந்திரம் குமாரகுலசிங்கியின் கவிமாலையின் தரத்தை எடுத்துக்காட்டிப் போற்றப்போதுமானதாகும்!

# பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வார்பிள்ளை

முத்தமிழ்ப்புலவர், பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வார்பிள்ளை யாழ்ப்பாணத்து வடமராட்சியைச் சேர்ந்த கட்டைவேலி என்னுங் கிராமத்தில், 1891-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் தேதி சைவ வேளாண் குடும்பத்தில் பிறந்தவர். தமது ஆரம்பக்கல்வியை அவ்வூரிலுள்ள மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் பெற்றார். தமது பதின்மூன்றாவது வயதிலேயே கவிபாடும் ஆற்றல் கைவரப்பெற்று வரகவியாக மிளிர்ந்தார் ஆழ்வார்பிள்ளை! அவர்மீது அன்பு சொரிந்து, அரவணைத்துக் கல்வியூட்டிய பபபக்திமிக்க ஒரு கிறிஸ்தவ ஆசிரியரின் முன்மாதிரியைப் பின்பற்றித் தாமும் ஞானஸ்நானம் பெற்று "ஜோர்ஸ்" எனும் கிறிஸ்தவ நாமந்தரித்தார். சைவ, வைணவ, பௌத்த, இஸ்லாமிய நூல்களை ஐயந்திரிபறக்கற்றார்.

1910-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக்கலா சாலையிற் சேர்ந்தார். ஆசிரிய பயிற்சி முடிந்ததும் அக்கலாசாலையிலேயே சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் இவர் தமது ஆங்கிலமொழியறிவை மேம்படுத்திக் கொண்டார்.

1915-ல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித்தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அதே வேளையில் மேலைத்தேசத்திலிருந்து யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கு வருகைதரும் மிஷனரிமாருக்குத் தமிழ் கற்பிக்கும் அரிய பணியையும் மேற்கொண்டார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்திய பண்டித பரீட்சைக்குத் தோற்றிமுதற்பிரிவில் தேர்ச்சி பெற்றார். தமது இருபத்திரண்டாம் வயதில் யாழ்ப்பாணக்குடா நாட்டின் பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் ஒன்றான பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார். கரவெட்டி வாசியான ஜோன் முருகுப்பிள்ளை இராமுப்பிள்ளை என்பவரின் மூத்த புதல்வியான, ஆசிரியை இலக்குமி அம்மையாரைத் தமது இருபத்தைந்தாம் வயதில் திருமணம் செய்து இல்லறம் எனும் நல்லறத்தில் புகுந்தார். பண்டிதருடைய ஆர்வம் தொடர்ந்தும் கற்பதிலே நீடித்தது கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சைக்குத் தோற்றி அதிலும் முதற் பிரிவில் தேர்ச்சி பெற்றார். இக்காலகட்டத்தில் பண்டிதர் தொடர்ந்து கற்பதுடன் நாடகங்கள் எழுதுவதிலும், மொழிபெயர்ப்புகளைச் செய்வதிலும், சமய, இலக்கியச் சொற்பொழிவுகளாற்றுவதிலும் தீவிரமாக ஈடுபடலானார்.

ஆழ்வார்பிள்ளை - இலக்குமி அம்மையார் இல்லறத்தின் பேறாக முதற்பிறந்த இரு குழந்தைகளும், முறையே அவர்கள் பிறந்த மூன்றாம் நாள்களிலேயே மரித்துப்போயினர். மூன்றாவதாக ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையும் இரத்தம் கக்கி, நாடித் துடிப்பிழந்து, மூச்சுத்திணறிய நிலையிலிருக்கக் கண்ட பெற்றோர் விசுவாசத்தோடு செபஞ்செய்து கொண்டிருந்தனர். அப்பிள்ளை உயிர்பிழைத்தால் ஆண்டவரின் ஊழியத்திற்கே அர்பணிப்பதெனத் தீர்மானித்தனர். எவரும் எதிர்பாராத முறையில் குழந்தை சுகம் பெற்றது. பெற்றோரின் அர்ப்பணிப்போடும், வேண்டுதலோடும் வளர்க்கப்பட்ட அக்குழந்தையே இன்று மெதடிஸ்த சபையில் ஊழியம் செய்யும் வண. எம். ஏ. இரத்தினராஜா ஆவார். நான்காவதாகப் பிறந்த பெறந்த பெண்குழந்தைக்குப் பெற்றோர் தாம் பெற்ற சகல பாக்கியங்களையும் உணர்ந்து' பாக்கியலட்சுமி எனப் பெயரிட்டனர்!

பண்டிதரவர்கள் ஆசிரியராக இருந்த காலத்திலேயே வழக்கறிஞராக வரவிரும்பினார். Proctor and Notary பரீட்சைகருத்தோற்றி அவற்றிலும் முதற்பிரிவுகளில் தேர்ச்சிபெற்றார், சிறிதுகாலம் அத்தொழில்களில் ஈடுபட்ட பின்னர் மீண்டும் ஆசிரியத்தொழிலிலேயே விருப்பமீதூர, அரசாங்கப் பாடசாலையான கண்டி மத்திய கல்லூரிக்குத் தலைமையாசிரியராகச் சென்றார்.

பண்டிதரவர்களின் பன்முகப்பட்ட கல்வித்தகைமைகளை அறிந்த இலங்கை அரச கல்வித்திணைக்களம் அவரைக் கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரியாக நியமித்தது. இக்காலத்தில் பல சிறந்த கல்விச் சேவைகளையாற்றிய பண்டிதர், சிங்கள மொழியிலும் சிறப்பான தேர்ச்சி பெற்றார். அதன் பயனாக ''சிங்கள ஆசான்'' என்னும் அரிய நூலை எழுதினார். இந்நூல் மக்களது அமோக வரவேற்பைப் பெற்றுப் பல பதிப்புகளாக வெளிவந்தது.

தமிழ்ப்பற்றும், இனப்பற்றும் மிக்க பண்டிதர், இனவெறி பிடித்த ஒரு சிங்கள மேலதிகாரியின் ஆதிக்கவெறியைக் கண்டித்துத் தமது பதவியினின்றும் விலகினார். மீண்டும் தமது சொந்த ஊரான யாழ்ப்பாணத்துக்கு வந்து சமயப்பணியிலும், தமிழ்ப்பணியிலும் தம்மை அர்ப்பணித்தார்.

ஆசிரியராக, அதிபராக, மொழிபெயர்ப்பாளராக, கல்வியதிகாரியாகப் பல பதவிகள் வகித்த பண்டிதர், தலைசிறந்த கவிஞரும், எழுத்தாளருமாவார். சத்தியவேத அம்மானை, நசரேயப்பாமாலை,

நசரேயப்பத்து, நசரேய இரட்டை மணிமாலை, நசரேய அந்தாதி, நசரேயமும்மணிக்கோவை, நசரேயபுராணம் கிறிஸ்தவ பஞ்சாமிர்தம் என்பன அவர் இயற்றிய கிறிஸ்தவ இலக்கிய நூல்களாகும். பழந்தமிழ்ப்புலவர்களின் மரபு பிறழாக்கவிநடையிலேயே பண்டிதரவர்கள் இவற்றையாத்துள்ளார். இவற்றுட் சில அச்சுவாகனமேறி வெளிப்போந்தும், சில இதுகாறும் பிரசுரமாகாதுமுள்ளன. இவையாவற்றையும் நூல்வடிவிற்றொகுத்துப் பயன்படுத்துவது எம்மனோர் அருங்கடனாகும்!

இஸ்லாமிய நீதிநெறி, இஸ்லாமிய கதாமாலை, இஸ்லாமிய வினா-விடை, நாயகபுராணம் என்பன இவரால் எழுதப்பட்ட இஸ்லாமிய மதச்சார்பு நூல்களாகும். இவற்றின் மூலம் பண்டிதர் பெற்றிருந்த இஸ்லாமிய மத அறிவு புலப்படுகின்றது. இவற்றை இஸ்லாமிய மக்கள் பெரிதும் வரவேற்றனர். ''உணவும் குணமும்'' எனும் சுகாதார நூலையும், கணித நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இந்துசமயப் பாடல்கள் பலவும், தனிப்பாடல்கள் பலவும், விநோதப்பாடல்கள் பலவும் பண்டிதரால் யாக்கப்பெற்றுள்ளன.

வித்துவத்தன்மையைப் புலப்படுத்துவனவாய சித்திரக்கவி, அக்கரச்சதகம், எழுத்துவருத்தினம், சுழிகுளம், நான்காரைச் சக்கரம், கரந்துறைபாட்டு, தேர்வெண்பா, மாத்திரைச்சருக்கம், மாத்திரை வருத்தனம் போன்றவை பண்டிதராலும், அவரனைய மிகச் சிலராலுமே பாடக்கூடியவை. அத்தகைய பாடல்களைப் பண்டிதர் அநாயாசமாகப் பொழிந்துள்ளார்! தமிழ் உரை நடையிலும், கவிதை யாத்தலிலும் இலக்கணவழுக்களின்மையும், மரபுபிறழாத்தன்மையும் ஒருசேரப் பெற்றிருத்தல் அவசியம் என்பது பண்டிதரின் முடிந்த முடிபாகும். இதற்கமையாது எழுதப்படும் கட்டுரை, கவிதைகளை அவர் சிறிதும் மதிப்பதில்லை. அவற்றைக்கண்டு பெருஞ்சினமுற்றிருக்கின்றார். மொழியின் தனித்தன்மையை இத்தகைய 'ஆக்கங்கள்' நலிவு செய்கின்றன என்று சாடியுள்ளார்!

''வெண்பா எழுத விரும்பி அதை வீணே
மண் பாவாய் மாற்றி மளமளெனப் - புண்பாவாய்
ஆக்கி முடிப்பா ரடி சிரறம்பிறமே
தாய்க் கேணிக் கொச்சை மக்கள்தாம்!''

என்று பாவினாலேயே காய்கின்றார் பண்டிதரவர்கள். இஃது அவர்கள் அன்னைத்தமிழ்மொழி மீது கொண்டுள்ள அசையாத பற்றுறுதியைக் கோடிட்டுக்காட்டுகின்றது! இதனை அடிநாதமாகக்

கொண்டே தமிழன் குரல், தமிழ்த்தாயின் ஓலம், கலிகாலக்கோ
என்ற நூல்களையும் அவர் படைத்தார்.

ஏசுபிரானைத் தமது இரட்சகராக, இதயத்தலைவராக ஏற்றுக் கொண்ட இந்த முத்தமிழ்வித்தகர் ஆழ்வார்பிள்ளை, பெம்மானி மலைப்பிரசங்கத்தைத் தமக்கேயுரித்தான தீந்தமிழில் படிப்போ மனமுருக இவ்வாறு பாடுகிறார்:

''பரஞான சித்தியெலாம் பலிதமுறும் வழியைமலைச்
சிரமேறியுபதேசஞ் செய்த பெருந்தேசிகனே
வரதா யானுனை மறவேன் மாணிக்கவாசகனே
கரமேறு நின்கோலம் கண்குளிரக்காட்டாயே!''

இயேசு பெருமான் சிலுவையிலே சிந்திய செங்குருதியைத் ''தேனருவி'' என்று சிறப்பித்துப் பாடுகின்ற புலவர், ஆண்டவர் மனுக்குலத்தின் மீட்சிக்காகச் சிலுவையேறிச் சொரிந்த இரத்தமும், அடைந்த அளப் பரிய பாடுகளும் எம்மீது கொண்ட அன்பின் அடையாளங்களே என ஐயமற வருணிக்கின்றார்.

''வானுலகின் மகிமையெலாம் மறந்தடியேன் வறியான்போல்
ஆனடையுங் குடிலதிலே அவதாரங்கொண்டவனே,
ஊனுருகி, உடல்கருகி உலகுய்யு மாறுதிரத்
'தேனருவி' நீ சொரிந்த திருக்காட்சி காட்டாயோ!''

ஆண்டவர் சிலுவையேறிப் பெற்ற கொற்றத்திருக்காட்சியைக் கண் குளிரக்காண அவாவுகிறார் கவிஞர்.

அம்மானை பாடுதல் தமிழ்ப்பெண்கள் மரபு, திருவாசகத்தில் மாணிக்கவாசகரும் அம்மானை பாடியுள்ளார். முத்தமிழ்ப்புலவர் ஆழ்வார்பிள்ளையும் அம்மானை பாடியிருக்கிறார். அது சிலுவை யேறி உயிர்த்தியாகஞ்செய்த ஏசுபிரானின் உயிர்த்தெழுதலைக் குறிக் கின்றது.

''பூமியொடு வானமுமே போயொழிந்திட்டாலும்
சந்திர சூரியர்கள் தங்கள் நிலை மாறிடினும்
விண்மீன்கள் யாவும் விழுந்துவிட நேரிடினும்
வாக்குத்தவறாத மகிமையுள்ள ஆண்டவனார்
மாமிசத்தில் வந்த மகத்துவத்தின் தேவபிதா
ஆயிரஞ்சாட்சிகள் முன் அரிய திருநாவால்
உரைத்ததுபோல உயிரோடெழும்பாரோ...?''

என்று வெற்றிமுரசு கொட்டுகின்றார். எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகத்தில் கவிஞர் யாத்த இரு கீர்த்தனைகள் இப்பொழுதும் இடம்பெற்றுள்ளன. அவையும் பழந்தமிழ்ப்பக்திஇலக்கியத்தின் பாற்பட்டவையே!

பண்: இந்தளம்

''அன்பாலெனையாட்கொண்டரவணைத்தாயதனாலே
நின்பாலடைந்தடியேன் பவ நெறியாலெனை விலக்கி
முன்பாயிருந்தழுதே திருமுக நோக்கிக் கைதொழுதேன்
என்பாலென திதயத்திருந் தெந்தா யென்றும் பேணே!''

என்று வேண்டுகோள் விடுத்து நிற்கும் கவிஞர் மேலும்

இராகம்: அரிகாம்போதி

''நம்பினரை யன்றுமின்றுங்கைவிடாத
நல்லோனே வாக்கதனின்முழுவிடாது
தம்பிரானெனப் பக்தர்கூட்டம் போற்றும்
சருவபரிபூரணனே ஆயிரம்நாக்
கும்பியுனைப் போற்றிடினுமடங்காதெல்லைக்
கோடுகடந்தருள் வெளியிற்குலவுந்தேவே
வெம்பி விழுந்தழியாதுன் திருமுகத்து
விலாசத்தா லெனைத்தேற்று சரணம் நீயே!''

திருத்தாண்டகம் பாடி ஆண்டவரிடம் சரணடைகின்றார். இஃது முதிர்ந்த பக்திநிலையின்மூலம் அனைவரையும் ஆண்டவரின் திருத்தரிசனத்திற்கு விடுக்கப்படும் மங்கல அழைப்பாகும்! மணியொலியாகும்!!

யாழ்ப்பாணக் கிறிஸ்தவ தமிழ்ச்சங்கம், கிறிஸ்தவ அருட்கவிஞர் ஆழ்வார்பிள்ளை, வாழுங்காலத்திலேயே அவரைப்பாராட்டி, விழாவெடுத்து ''முத்தமிழ்ப்புலவர்'' பட்டமளித்துக் கௌரவித்தது. அப்புலவர் பெருமகன் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி தமது 77-வது வயதில் இறைவனால் அழைக்கப்பட்டுவிட்டார். 1981-ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற உலகக் கிறிஸ்தவ தமிழ்ப்பேரவையின் முதல் மாநாடும் அருட்கவிஞர் ஆழ்வார்பிள்ளையைப் பாராட்டித் ''தமிழ்மாமணி'' என்ற பட்டம் வழங்கியும், பொன்னாடை வழங்கியும் பூரித்தது. ஆனால் இவற்றை நேரில் பெற்றுக்கொள்ள அருட்கவிஞர் ஆழ்வார்பிள்ளை இந்நிலவுலகில் இலர். நித்தியராகிய ஏசுபிரானின் திருச்சமுகத்தில் இப்பாராட்டுக்களைப் பெற்று அவரான்மா பரவசமடைந்திருக்குமென்பது பேருண்மையாகும். ஊனுமுளமுமுருக்கும் திவ்விய கீர்த்தனைகளைத் தந்த, செழுந்தமிழ்க்கிறிஸ்தவக் கவிஞர்களின் பக்திப்பாமழையில் நனைந்து யாமும் பரவசமடைவோமாக!

# அறிஞர் ஏ. எம். கே. குமாரசுவாமி

1. ''அநாதி அன்பன் தேவே நீ
அரு மகவை யீந்தையே,
தனாதிபதி தயவின்
தந்தையானாய் விந்தையே !

2. ''அளவிறந்த நின் அன்பை
அவதரிக்கச் செய்தாயோ
பழவினைகள் போக்கிடப்
பார்த்திபன் பலியாகவோ !''

3. ''மானிடர் சார்பில் மனுவாய்
மாளும் சுதன் நமோ, நமோ
தாளிணை யுன்னா தாருக்கும்
தான் பிணையானோனே நமோ !''

எமது தென்னிந்திய ஐக்கியத் திருச்சபையின், யாழ்ப்பாணத் திருமண்டிலத்தில் தற்போது பாவனையிலுள்ள பாட்டுப்புத்தகத்தில் இடம்பெறும் கீதம் (Hymns) ஒன்றில் அமைந்துள்ள மூன்று பாடல்கள் இவை. இத்தகைய பதினெட்டுக் கீதங்களையும், இரு கீர்த்தனைகளையும் இப்புத்தகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கீதங்களையும், கீர்த்தனைகளையும் புனைந்த கிறித்தவ கவிஞர் தாம் ஏ. எம். கே. குமாரசுவாமி.

ஏ. எம். கே. குமாரசுவாமி இந்த நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்து மறைந்த பெருங்கல்விமான்களில் ஒருவர். இவர் தமது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் பெற்றார். பி. எஸ். ஸி. (லண்டன்) பட்டதாரியான இவர், அருள்திரு. ஏ. ஜீ. பிறேசர் என்பவரின் வேண்டுகோளுக்கமைய டிரினிற்றி கல்லூரி ஆசிரியரானார். ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகள் இவர் மிகத்திறமையான ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். கொழும்பில் அவர் வாழ்ந்து வந்தகாலை அங்கிலிக்கன் சபைப் பேராயரின் வேண்டுசோளையேற்று அச்சபையின் செயலாளராகவும் பணிபுரிந்தார் ஏ. எம். கே. குமாரசுவாமி நாட்டின் பல்வேறு இடங்களிலும், பல்வேறுவிதமான உயர் பதவிகளை வகித்திருக்கிறார். இத்தனைக்கும் காரணம், சுயநல மற்ற, இனியபாங்கிலமைந்த, தர்க்கரீதியான, பெறுமதிமிக்க அவ

ரது சுதந்திரமான கருத்துக்களே என்று திருச்சபைப் பேராயர்கள் பலரும் சான்று பகன்றுள்ளனர். பரி. யோவான் கல்லூரித் துணை அதிபர், கல்வி அதிகாரி, பல்கலைக்கழகக் கல்லூரி பதிவாளர் முதலிய உயர் பதவிகள் அவரால் பெருமைபெற்றுள்ளன. உவெஸ்லிக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றுடனும் நெருங்கிய தொடர்புடையவராக மிளிர்ந்துள்ளார்.

ஏ. எம். கே. குமாரசுவாமியின் மதிநுட்பத்தை விளக்கும் பல சம்பவங்கள் உள்ளன. கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் செயலாளராக அவர் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில், ஒரு முறை அப்பொழுது மகாதேசாதிபதியாக இருந்த சேர். ஹேர்பட்ஸ் ரான்லி முன்னிலையில் பெருங்கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்குப் பேராயர் கார்ப்பென்ரர் கார்னியர் தலைமை தாங்கினார். மகாதேசாதிபதி ஏற்கனவே சமுகமளித்திருந்தும், பேராயர் ஆங்கு சமுகமளிக்கச் சிறிது நேரமெடுத்தது. இதனை அவதானித்த ஏ.எம். கே. கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்த பிரமுகர்கள் ஒவ்வொருவர் பக்கத்திலும் சென்றமர்ந்து உரையாடியபடி மிக நாசூக்காக மேடை மீதிருந்த மேசை மணிக்கூட்டின் நிமிடக்கம்பியைப்பத்து நிமிடங்கள் பின்னுக்கு இழுத்துவிட்டார். பேராயர் பத்து நிமிடம் பிந்திவந்தவர், நேரங்காட்டியைப் பார்த்துச் சிரித்துவிட்டுக் கூட்டத்தை ஆரம்பித்தார். மகாதேசாதிபதி பின்னர் ஏ. எம் கேயைப்பார்த்து 'ஒரு செயலாளராகக் கடமையாற்றுதற்கு மிகச்சிறந்த ஒருவர் நீர்' என்று குறிப்பிட்டார்.

இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில், சேர். ஜியோப்றி லெயிற்டன் என்பவர் தலைமையிலமைந்த ''யுத்தகாலச்சபை''யிலும் ஏ. எம். கே. குமாரசுவாமி செயலாளராகக் கடமையாற்றி அரிய பல சாதனைகளைச் செய்தார். அவர் பலமுறை மேலைநாடுகளுக்குச் சென்று வந்த பரந்த அனுபவமுடையவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் மிகச் சிறந்த பேச்சாளர். தூய்மையான உள்ளம் படைத்தவர்: எப்பொறுப்பையும் மிகக்கவனத்தோடு, ஏற்று நிறைவேற்றுதலில் வல்லுநர். தமிழ், ஆங்கிலம், கிரேக்கம், ஜெர்மனியம், லத்தீன் மொழிகளில் பாண்டித்தியம் உடையவர். ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் கணிதம், பௌதிக விஞ்ஞானம் என்பன இவரது திறமை



Mr. J. S. Alvapillai



யான கற்பித்தலுக்குக் கட்டியங்கூறிய பாடங்களாகும். மொழி பெயர்ப்புத்துறையிலும் அவர் மகாநிபுணர். மிகக்கடினமான ஜேர் மன் மொழியிலமைந்த கிறிஸ்தவ கீதத்தை, ஆங்கிலத்தில் பெயர்த்து, அதன் அழகு குன்றாமல் அப்படியே தமிழிலும் மொழி பெயர்த்த வர் ஏ. எம். கே. குமாரசுவாமி. தமிழிலும், ஆங்கிலத்திலும் கவி தைகள் புனைவது அவருக்கு மிகவும் விருப்பமானதொரு பொழுது போக்கு! ''உதயதாரகை'' பத்திரிகையின் அபிமான வாசகரும், ஆர்வ முள்ள எழுத்தாளருமாக விளங்கினார். ஒரு சமயம் மிகமுக்கியமான தொரு விடயத்தைப் பற்றிய கட்டுரையொன்றினை எழுதித்தருமாறு ''உதயதாரகை'' ஆசிரியர் கேட்டபோது ஏ. எம். கே. அக்கட்டுரை யினை மிகச்சிறப்பாக, 'ஆசிரியர் ஒரு பாடவேளை கற்பித்தல் முடிந்து' வருமுன்னமே எழுதிக்கொடுத்தார். இஃது ஏ. எம். கேயின் மொழியறிவின் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. தமிழில் அவர் எழுதிய கீதங்களும், கீர்த்தனைகளும் மிக ஆழமான இறையியற் கருத்துக்களுடையவை. யாழ்ப்பாணத் திருச்சபை விழா வில் தமிழ்க்கீர்த்தனைகளை இயற்றும் போட்டியில் இருதடவைகள் அவர் பரிசில்கள் பெற்றுள்ளார். அவரது பெருந்தொகையான பாடல்கள் எமது பாட்டுப்புத்தகத்தில் இடம் பெற்றிருப்பதே அவ ரது புலமையினை எமக்குக் கோடிட்டுக் காட்டுவதாக அமைகின்றது.

தர்க்கரீதியாகவும், சரளமாகவும் பேசி எவரையும் தன்வயமாக்கு வதில் ஏ. எம். கே அதிசூரர். இறையியலில் அவர் ஒருவித்தியாச மான வழியைப்பின்பற்றியவர். அதனை 'அங்கிலோ-கதலிக்' அணுகு முறை என்றே குறிப்பிடலாம். பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி (அழகசுந்தர தேசிகர்) யினால் அதிகம் நேசிக்கப்பெற்ற ஒருவர் ஏ, எம். கே குமாரசுவாமி. இவர் பல்கலைக்கழகக்கல்லூரிப் பதிவாளராக இருந்த பொழுது அழகசுந்தரதேசிகர் தமிழ்ப்பேராசிரியராக இருந்தார். அழகசுந்தரதேசிகர் நடாத்தும் இறையியல் வகுப்புகளுக்கு ஒழுங்கா கச் சென்று வந்தவர். ஆனாலும் அழகசுந்தரதேசிகரால் அவரைத் தமது கொள்கைகளை ஏற்றுக்கொள்ளச் செய்துவிட முடியவில்லை. ஏ. எம். கே தொடர்ந்தும் 'அங்கிலோ-கதலிக்' இறையியல் நாட்ட முடையவராகவே இருந்தார். இது குறித்து பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி தமது நண்பர் ஒருவரிடம் ''இந்த மனிதனே, நான் சந்தித்த மனி தர்களில் என்னை அதிகம் விரக்தியுறச் செய்தவர்'' என்று குறிப் பிட்டாராம்.

ஏ, எம். கே. குமாரசுவாமி தமது இறுதிக்காலத்தில் சமய, சமூ கப்படிப்பு மன்றத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். அவர் இயற்றிய தமிழ்க்கீர்த்தனைகளில் வரும் பாடல்கள் சில வருமாறு:

1) ''தீனதயாளா திருமனுவேலா
தீயரை மீட்க வந்தாய்
வான வியாபி மானிடர்பாசம்
வானைத்துறக்கச் செய்தோ!
ஈனர் இஃதாலருள் பெற்றோம்
ஈசனுவகையுமடைந்தோம்
ஊனுடலாவி உன்னதுவாக
உன்னத பேறு பெற்றோம்!''

2) கள்ளனென்றாலும் வெள்ளனென்றாலும்
கனிவுடன் மனமுவந்தே
பிள்ளை நானென்றே பீடனமகற்ற
பெருந்தகைகுருசுறைந்தாய்
தேசுடனிலங்கும் நின்முகமே
மாசுறவாட இச்சணமே
வீசுமுன் அன்பு மேதினிகாண
ஆசி அருண் மாரியாய்...!

இப்பாடல்களில் ஏசுபெருமானின் திருவவதாரமும், எமக்காக அவர் தம்மை குருசுக்குக் கொடுத்து எம்மை மீட்டதும் கவிஞர் நெஞ்சில் நிழலாடுவதுடன், எம் நெஞ்சையும் நெகிழ்விக்கின்றது.

பன்மொழிப்புலமையும், மேதாவிலாசமும்மிக்க ஏ. எம். கே. தமிழில் தமது கிர்த்தனைகளில் மேலுந்தொடருகின்றார்.

இராகம்: உசேனி) பல்லவி (ரூபகதாளம்)

தேவாவி தெண்டனிட்டேன் - நின் அருளில்
மூவா முதலான முன்னவனைத்தொழ - தேவாவி

அனுபல்லவி

பாவப் பரிகாரப் பாங்கு சிறந்த நல்
ஜீவ மெய் ஊற்றாகும் சின்மயன் சேவடி - தேவாவி

சரணங்கள்

1. அன்பு, சமாதானம், ஆறுதல், தேற்றுதல்
இன்பமாம் இவ்வரம் ஈந்தெமை யாட்கொண்டு
துன்பம் துயர் காத்துத் தூயா நின் பாதையில்
நின் புகழ் மேம்பட நீழல் அருளுவை! - தேவாவி

2. காரிருணீங்கிடக் காருண்ய மோங்கிட
தாரணி தற்பரன் தாபன மாகிட
வாரிதி வானொடு வல்ல சராசரம்
சீருடன் தெய்வீக இராச்சியம் நீ மேவச்செய்! - தேவாவி

*1890-ல் பிறந்த அறிஞர் ஏ. எம். கே. 1960-ல் மறைந்தார்.*

ஏசுபிரானின் இன்னருளில் திளைக்க விரும்புவார் அனைவருமே கவிஞர் ஏ. எம். கே யின் ஏனைய பாடல்களையும் எமது பாட்டுப் புத்தகத்திலிருந்து தேர்ந்து, எடுத்துத்தியானித்துத் தெய்வீக இன்பம் பெறுவார்களாக!

# 'விடிவெள்ளி' க. பே. முத்தையா

யாழ்ப்பாணத்து, வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்கரைக் கிராமமான உடுத்துறையில் 1914-08-31 ஆம் நாள், திரு. திருமதி கந்தையா, பொன்னாச்சிதம்பதிகளின் அருந்தவப்புதல்வராகத் தோன்றியவர் கவிஞர் விடிவெள்ளி க. பே. முத்தையா அவர்கள். ஆசிரிய பயிற்சிப்பள்ளியில் கிறிஸ்தவ சமயத்தைப்பற்றிக் கேள்விசெய்து வந்த அவர், சில காலத்துள் மனமாற்றம் பெற்று இயேசு பெருமானைத் தம்மீட்பராக ஏற்றுக் கொண்டார். அன்றைய காலகட்டத்தில் அவர் வாழ்ந்த சூழலிலிருந்த தடைகளையெல்லாந்தாண்டி ஆசிரிய பயிற்சி பெற்றுச்சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றார். தமது வாழ்க்கைத் துணையையும் ஒரு ஆசிரியையாகவே (திருமதி மேரி ஜெயமணி) தெரிந்து கொண்டார். படிப்பும், பதவியும் பெற்றதும் பலர் விரும்புவதுபோல இவர் நகர்ப்புறநாகரிகம் நோக்கி ஓடிவரவிரும்பவில்லை. முதலில் தமது ஊரிலேயே உள்ள வேம்போடுகேணி, உடுத்துறை அங்கிலிக்கன் மிஷன் பாடசாலைகளில் 1936-47 வரை தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார். சமூகமும், திருச்சபையும் இவரது மெய்யான தேவபக்தியையும் திறமையினையுந் தெரிந்து கொண்ட பின்னரே யாழ்ப்பாண நகருக்கு இவரையழைத்தது. 1948-54 ஆம் ஆண்டு வரை யாழ். பரியோவான் கல்லூரித்தமிழ்ப் பாடசாலைத் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். இக்காலமே இவரது வாழ்வின் பொற்காலம் எனலாம். இயல்பாகவே கம்பீரமான தோற்றமும், கலகலப்பான பேச்சும், இன்முகத்தோடு எவரையும் வசீகரிக்கும் வகையில் பழகும் பாங்கும், யாழ் நகரில் இவருக்குப் பன்னூற்றுக்கணக்கான தனித்துவம் மிக்க நண்பர்களைத் தேடித்தந்தது. இலக்கியத்துறையிலும், சமயத்துறையிலும், சமூகத்துறையிலும் முன்னின்றுழைக்க ஆர்வமளித்தது. யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசவெளியீடான ''சமூகத் தொண்டன்'' மாத இதழுக்கு ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப்பல ஆண்டுகள் அரும்பணியாற்றினார். பல புதிய, இளம் எழுத்தாளர்களை இனங்கண்டு தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தினார். பல அற்புதமான பேச்சாளர்களைத் தாமே முன்னின்று அரங்கேற்றுவித்தார்.

'அடையா நெடுங்கதவு, உடையது கவிஞர் முத்தையா அவர்களது இல்லம்! எப்பொழுது சென்றாலும் எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள், நற்செய்தித் தொண்டர்கள், அரசியல் ஆர்வலர்கள் ஆங்கு நிறைந்திருப்பர். அனைவரையும் அன்புடன் வரவேற்று



Mr. K. P. Mutthaiah

உபசரிப்பது கவிஞர் முத்தையா அவர்களுக்கேயுரிய தனிக்கலை யாகும்! அதுபோலவே தாம் மேற்கொண்டிருந்த ஆசிரியப்பணியின் மேன்மையினைவலியுறுத்தும் தொழிற்சங்கத்துறையிலும் அயரா துழைத்தார். ஆசிரியர், இலக்கிய ஆர்வலர், பத்திரிகையாளர், நற் செய்தித்திருத்தொண்டர், தொழிற்சங்கவாதி ஆகிய எல்லாத்துறை களிலும் பார்க்க ஈழத்துத்தமிழ்ச் சமுதாயம் அவரைத் திறமைசான்ற ஒரு கிறிஸ்தவ தமிழ்க்கவிஞராகவே இனங்கண்டு கௌரவித்தது. குறிப்பாக அவர் யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ சமுதாயத்துடன் இரண்டறக்கலந்து, அதிலிருந்து தம்மைப் பிரித்து எவரும் இனங் காணமுடியாதவராக மிளிர்ந்தார். சமய, சமூக, கல்விச் சேவை களில் இங்ஙனம் உன்னத நிலைபெற்ற அவர், கிறிஸ்தவ தமிழ்க் கவிதைத்துறைக்கு ஆற்றிய அரிய பங்களிப்பினையே நாம் இங்கு காணுதல் சாலப் பொருத்தமுடையதாகும்.

யாழ். மாவட்டத்துக் கிறிஸ்தவ ஆலயங்களில் ஞாயிறு காலை நடைபெறும் ஆராதனைகளில் அனைவரும் விரும்பிப்பாடும் பாடல் ஒன்றுளது.

''உலகமெல்லாம் ஒரு குடும்பம் ஆகுவோம்
உள்ளமெல் னும் பெத்தலையில் ஏகுவோம்
அலகில் மரி அன்னைதரும் பாலனை
அடிடணிந்து பரம கீதம் பாடுவோம்!''

என்னுந் தொடக்கத்தினையுடையது அக்கீர்த்தனை. இக்கீர்த்தனை யொன்றே கவிஞர் க. பே. முத்தையாவின் கிறிஸ்தவ கீர்த்தனை களுக்கும், கவித்துவத்திற்கும் அனைத்துலக ரீதியில் கட்டியங்கூற வல்லது. எந்தச்சிறிய விடயத்தையும் கூர்ந்து நோக்கும் மதிநுட்ப மும், பிரச்சனைகளுக்கு எத்தகைய நோவுமில்லாது தீர்வுகாணும் பக்குவமும் வல்லவர் கவிஞர் க. பே. மு. அவர்கள். அவர் சிறந்த வோர் நகைச்சுவைப்பேச்சாளர். சிலேடைநயம்மிளிரப் பேசி அவை யோர் கவனத்தை ஈர்த்துப்பாராட்டுப் பெறுவதில் வெகுசமர்த்தர்.

இஃதெல்லாவற்றுக்கும் காரணம் இறைவன் ஏசுபெருமானின் மீது அவர் கொண்டிருந்த ஆராத காதலேயாகும்! எப்பொழுதும், எவருக்கும் என்ன உதவி வேண்டுமோ என்று அறிந்து, அதனை அளித்திடத்தம்மை அர்ப்பணித்த பெருந்தகை கவிஞர் க. பே. மு. அவர்கள்!

கிறிஸ்தவர்கள் என்றால் ஏனைச்சமயத்தாரோடு முரண்டு நிற் பவர் என்ற தவறான கருத்தைப் புறந்தள்ளியவர் அவர். வைதிக

சைவசமய விற்பன்னர்களான மகாவித்துவான் கணேசையரவர்களை யும், சிவயோகசுவாமிகளையும், தமது தடம்பிறழாத நிலையில் நின்று, தமிழ்ப்பாடல்களால் அமரர் க. பே. மு. அஞ்சலி செய் திருக்கின்றார். இதனால் அவருக்கு சைவசமய பக்தர்களிடையேயும் அபரிமிதமான செல்வாக்கு இருந்தது எவராலும் மறக்கமுடியாத வோருண்மையாகும்!

சொற்பொழிவா, பட்டிமன்றமா, கவியரங்கமா, எதுவாயினும் ஆங்கு கவிஞர் க. பே. மு. இருந்தேயாக வேண்டும் என்ற காலம் ஒன்று இருந்தது அவர் தமது உடல், உளவலிமைகளுக்கு மேலாக சமயத்திற்கும், சமூகத்திற்கும் பணிசெய்யவிழைந்தார், விரைந்தார். அதனாற்போலும் தமது ஐம்பதாவது அகவையிலே கவிஞர், அன்ன வரும் அயர மின்னலென மறைய நேர்ந்தது.

''தமிழறிவு'' என்ற நூல்-உடுத்துறைத் திருச்சபையின் விசித்திர சரித்திரம். ''பாலர் நேசன்'' பத்திரிகை ஆகியவற்றின் ஆசிரியராக விள ங்கிய கவிஞர் க. பே. மு. அவர்கள் கிறிஸ்தவம், தமிழ்மரபு, நாக ரிகம், பெரியோர்கள், பத்திரிகைகள் ஆகிய பலதுறைகள் பற்றியும் பாடல்கள் யாத்துள்ளார். எனினும் அவர் பெயரை நீடுவாழ வைப் பது அவர் யாத்த கிறிஸ்தவ சமயக் கீர்த்தனைகளே. கவிஞருக்கு ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்த போதிலும், ஆங்கில நாகரிகத்தை அப்படியே அடியொற்றித் தமிழ்த்தேசியத் தன்மையினை இழந்து விடுவார் மீது சற்றுக்காரமான சாடுதலைத் தமக்கேயுரித்தான சரள மான நகைச்சுவைப் பாடல்கள் மூலம் புலப்படுத்தியுள்ளார்.

அதனாற்போலுமே அவர், திருச்சபை கீதங்கள் என்னும் ஞானப் பாட்டுகளின் வழி வலகி, தமிழ் அமைதிசார்ந்த கீர்த்தனைகளேயே பெரிதும் ஆக்கியுள்ளார். தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப் பாணப் பேராயத்து உத்தியோகபூர்வமான பாட்டுப்புத்தகத்தில் கவிஞர் க. பே முத்தையா அவர்கள் இயற்றிய பதினைந்து கீர்த் தனைகள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் முழுவதும் எல்லாத் தமிழ்த்திருச்சபைகளிலும் பிரபலமானவை என்பதில் ஐயமேயில்லை. வேறு எந்தக்கீர்த்தனையாசிரியருக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு கவிஞர் க. பே. மு வுக்கு ஏற்பட இக்கீர்த்தனைகள் சான்றுபகர் கின்றன' அதற்குக் காரணிகளானவை யாவை? மிகவும் முக்கிய மானது இக்கீர்த்தனைகள் கவிஞரின் உளம் நனைந்து புனையப் பட்டமையாகும். அத்துடன் விதேசியத்தன்மையைப் புறக்கணித்து, சொந்த நாட்டியல்புகளையேற்று எளிய, இனிய தமிழில் அவை புனையப்பட்டிருத்தலாகும்! சமயநெறியால் வேறுபடினும், கலாசா

ரத்துறைகளில் ஒன்றுபட்டுநிற்கின்ற தமிழ்ச் சமுதாயம் அவாவுகின்ற கூட்டுப்பிரார்த்தனை, திருப்புகழ், விருத்தப் முதலாய துறைகளில் அவர் கீர்த்தனைகள் மேம்பட்டுநிற்கின்றன. இதனால் பாடுவோரின் உள்ளத்தை உருக்கிக்கண்களில் நீர்மல்கவைத்து இயேசு பெருமானின் இன்ப அன்பினைச் சபையாருக்குச் சுரந்துநல்குகின்றன. உள்ளத்தை உருக்கும் அவர் பாடல்களுக்கு இன்னொரு உதாரணம்;

''ஆதியினில் வார்த்தையென ஆகிவரும் அன்பே
ஆனமறை தீர்க்கருரை ஆனபெரும் அன்பே
வேதமதில் ஆதியந்த மாயுறையும் அன்பே
மேசியா என்றடியார் வீழ்ந்து தொழும் அன்பே!''

என்று தொடங்கி—

''காவுகுருசேறியுயிர் ஈந்த பெரும் அன்பே
காலையுயிரோடெழுந்து காட்சிதரும் அன்பே
ஈவுதர வானுலகம் ஏறிய என் அன்பே
இவ்வுலகமீட்பரெனும் ஏசுபெருமானே!''

—என்று நிறைவுபெறுகின்றது! தமிழுணர்ந்தாரின் நெஞ்சத்தில் இவ்வாறு பக்தியுணர்வலைகளை மோதவிடும் பாங்கு கவிஞர் க. பே. மு.வுக்கேயுரிய தனிச்சிறப்பாகும்! அவர் பாடிய விருத்தம் இவ்வாறு ஏசுபெருமானின் உயிர்த்தெழுதல் பற்றி முரசறைகிறது.

''வானிரவி மேவி வரு காலையினிலோரினிய
வாச மலர் முகமலர்தல் போல்
மன்னு பரலோகமுயர் எந்தை பரனாவியுற
வந்து நனி மேவு பொழுதில்
கானமையு மோர் குகையிலே துயிலுமன்புருவின்
கண்ணனைய தண்ணருளினோன்
கர்த்தர் பரிசுத்தநசரேயகுரு ராசனதி
காலையிலுயிர்த்தெழுந்தார்
மானனைய மகதலாமேரியிது கண்டுருகி
மற்றவர்க்குற்றுரைத்தாள்
மட்டிலாஓகையொடு சிட்டர் குழு நாடெலாம்
மாறாது கூறி நின்ற
தேனனைய செய்தியிது தேசமெல்லாம் பரவச்
செப்புவோம் நாடி நின்றே
செம்மைநல்வாழ்வுதர இம்மையிலுயிர்த்தருளும்
தேவாதி தேவனருளே!''

இவ்வாறு தமிழ் மரபுகனியும் பாடல்களால் திருச்சபையைக் கனிய வைத்த கவிஞர் க. பே. மு. அவர்கள் பெருமை இனிமையானது.

1955—64 ஆம் ஆண்டுகளில் நல்லூர் சாதனா பாடசாலைத் தலைமையாசிரியராக இவர் கடமையாற்றினார்.

''உடுத்துறைத் திருச்சபையின் விசித்திர சரிதம்'', தமிழ் அறிவு, கட்டுரைக்கதிர், தமிழ்-சூழற்] பயிற்சிகள், சிலுவையும் செந்தமிழும் முதலான பல தமிழ் நூல்களையாக்கிக் கல்வியுலகு களிப்புறச் செய்தார். இலங்கைத் தமிழ்ப்புத்தக வெளியீட்டுக்கழகம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், இலங்கைக் கம்பன்கழகம், யாழ்ப்பாணத் தமிழாசிரிய சங்கம், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் என்னும் அமைப்புகளில் பொறுப்பான பதவிகளை வகித்து அரிய பல சமூகத்தொண்டுகளையாற்றினார். கவிஞருக்கு ஜெபராணி, ஜெபராசா, ஜெபதேவி, ஜெபமலர், ஜெபஆனந்தன் ஆகிய ஐந்து பிள்ளைச் செல்வங்கள் உள்ளனர். இறுதிமூச்சு உள்ளவரை இயேசு பணியும், இன்தமிழ்ப்பணியும் ஆற்றிவந்த கவிஞர் 1964-05-26 ஆம் நாள், தமது ஐம்பதாவது அகவையிலே மறுமைக்குள் பிரவேசித்தார்.

அயரா உழைப்பும், அன்பின் அரவணைப்பும், பிறர் துயர் களைவதே பெரும்பணியெனவும் கருதி வாழ்ந்த கவிஞரின் ஓய்வு, ஒழிதலற்ற உழைப்பே அவரை விரைவிலேயே விண்ணுக்கு விருந்தாக்கியது என்பதே பொருந்தும்.

கவிஞர் க. பே. முத்தையா அவர்களின் பூதவுடல் மறைந்தாலும், அவர் புனைந்த அழியாத இன்கவிக்கீர்த்தனைகள் என்றும் அவரை எம்மிடையே வாழவைப்பனவாக மிளிர்கின்றன.

''பாவ நாவில் பாட்டுவைத்தாய்
தேவ, தேவா உன் திருவருளை
சீவனிலாத சிறியேன் துதியால்
மேவியுரைக்க விரும்புகின்றேனே!''

என்று - கவிஞர் க. பே. முத்தையா கிறிஸ்து பெருமானை உளமுருகி வேண்டுகின்றார்! யாமும் அவ்வாறே வேண்டுதல் செய்வோமாக!

# சின்னண்ணன்
# வண. ஈ. த. இயேசுசகாயம்

இலங்கை முழுவதிலுமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்திற்கு நன்கு பரிச்சயமான, புனிதமான இடம், யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம் எனும் சிற்றூரில் அமைந்துள்ள கிறிஸ்தவ சேவா ஆச்சிரமமாகும். இது 1939-ல் உதயமானது. அதன் தாபகராகிய வண. எஸ். செல்வரத்தினம் அடிகளார் உலகப்புகழ்பெற்ற கிறிஸ்தவப்பெரியாராவர். அவரது வலதுகரமாக, மருதனார்மடம் கிறிஸ்தவசேவா ஆச்சிரமத்தையும், கிழக்கு மாகாணம் கிரான் எனுமூரிலமைந்துள்ள ஜோதி நிலையத்தையும் தளராது வழிநடாத்தி வந்தவர்தாம் சின்னண்ணன் என்று எல்லோராலும் வாஞ்சையோடு அழைக்கப்படுகின்ற வண. ஈ. த. இயேசுசகாயம் அவர்களாவர். கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் மூலம் கிறிஸ்து பெருமானின் நற்செய்தியையும், சமூகப்பணிகளையும் அயராது ஆற்றிவந்த (பெரியண்ணன்) வண. எஸ். செல்வரத்தினம் அவர்களும், (சின்னண்ணன்) வண. ஈ. த. இயேசு சகாயம் அவர்களும் இன்று எம்மத்தியில் இல்லை. அவர்கள் பூதவுடல் நீத்து இயேசு பிரானுடன் ஐக்கியமாகிவிட்டாலும், அவர்களாற்றிய பணியும், கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் ஆற்றிவரும் பணியும் எம்மனங்களில் நீங்கா இடம்பெற்று நிறைந்துள்ளன.

இறையருட்கவிஞர் ஈ. த. இயேசுசகாயம் யாழ்ப்பாணத்திலுள்ள நவாலியூரில் ஒரு சாதாரண கிறிஸ்தவ குடும்பத்தில் 1918-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ம் தேதி பிறந்தார். சிறு குழந்தையாக இருந்த போதே, தமக்கேற்பட்ட சத்திரசிகிச்சைக்குரிய நோயைத் தமது பெற்றோரினதும், போதகரினதும் செபத்தினால் எவ்வித சிகிச்சையும் இன்றியே குணமாக்கிக் கொண்டவர். பிறந்த சில நாள்களிலேயே இயேசுபிரான் அவருக்கு அதிக சகாயஞ் செய்தமையால் அவரது ஞானஸ்நானத்தின்போது இயேசுசகாயம் எனப்பெயரிட்டழைத்தனர், போதகரும், பெற்றோரும்!

இயேசுசகாயம் தமது இருபதாம் வயதிலே சென்னை மாநகரிலுள்ள மெதடிஸ்த இறையியல் கலாசாலையில் சேர்ந்தார். அவரை ஒரு கிறிஸ்தவ மதகுரவராக்க வேண்டும் என்று அவரது பெற்றோர் நெடுங்காலமாக எண்ணியிருந்தனர். இயேசுசகாயம் சென்னை இறையியல் கலாசாலையில் பலவித அனுபவங்களைப் பெற்றார். பிராமண குலத்தில் பிறந்து கிறிஸ்தவராகிய இராமசேஷன் ஐயர் என்

பவர் சின்னண்ணனுக்குச் சென்னையில் திருமறை கற்பித்தமை அவருக்குப் பேரானந்தமாக இருந்தது. அவரது போதனை இயேசுசகாயத்திற்கு மிகப்பிடித்தமாக இருந்தது. எனினும் அக்காலகட்டத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள் அவர் மனதினைச் சஞ்சலப்படுத்தின. பதின்மூன்று வயதுடைய அவரது ஒரேயொரு சகோதரியின் மரணம், ''கிறிஸ்து பெருமான் வாழ்க்கை'' என்னும் பாடம் நடாத்தி வந்த ஒரு மிஷனரிக்குருவானவர், 'ரிக்சோக்காரன்' ஒருவன் ஐந்து நிமிடம் பிந்தி வந்தமைக்காக அவனைத் தமது சப்பாத்துக்காலால் நையப்புடைத்தமை அவரது மன அமைதியைக் குழப்பின. ''எனினும் வண. இராமசேஷன் ஐயரின் அன்பும், ஆளுமையும் தம்மைத் தாங்கி நின்றன'' என்று அவரே பிறிதொரு சந்தர்ப்பத்தில் தாம் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மெதடிஸ்த இறையியற் கலாசாலையில் இரு வருடங்கள் கற்றுத்தேறிய இயேசுசகாயம், தமது தாய்ச்சபையாகிய தென்னிந்திய திருச்சபையின் ஓர் ஊழியராகவேண்டி, அத்தியட்சருக்கு விண்ணப்பித்திருந்தார். அதனையேற்ற அத்தியட்சர் ஒரு சிறுசபையில் நான்கு வருட ஊழியத்திற்கு அனுமதியளித்தார். இதனால் சின்னண்ணன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சென்னையிலிருந்து தமது நண்பர் ஒருவருடன் 'இந்தோ — சிலோன் எக்ஸ்பிரசில்' நாடு திரும்பினார். நள்ளிரவு 'எக்ஸ்பிரஸ்' ஒரு புகையிரத நிலையத்தில் தரித்து நின்றது. அவ்விடத்தில் புகையிரதம் அரைமணி நேரம் நிற்கும் என்றும் கூறப்பட்டது. இதனால் சின்னண்ணனும், அவரது நண்பரும் 'காப்பி' குடிக்கக்கடையொன்றுக்குச் சென்றனர். அவர்கள் காப்பி குடித்துக் கொண்டிருக்கும்போதே புகையிரதம் படு வேகமாகப் புறப்பட்டுச் செல்லத் தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த இருவரும் வேகமாக ஓடிச்சென்றனர். அவர்கள் இருந்த பெட்டி முன்னே போய்விட்டது. பூட்டப்பட்டிருந்த ஒரு சாமான் பெட்டியின் கைப்பிடியில் எட்டிப்பிடித்துக் கொண்ட சின்னண்ணன் மற்றக்கையால் தமது நண்பரையும் தூக்கிப்பிடித்துக் கொண்டார். கால்வைப்பதற்கு மட்டும் ஒரு சிறு இடம் கிடைத்தது. வண்டி மிக வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அவரது நண்பர் மிகச்சோர்ந்து போனார். சின்னண்ணன் உரத்தூச்சத்தமிட்டுச் செபித்துக் கொண்டேயிருந்தார். அவரது உடற்பலம் குறைந்து கொண்டிருந்தது. அழுது கொண்டே செபித்தார். கையைவிட்டுக் கீழே குதிக்கலாமோ என்று கூட எண்ணினார். 'அது மிகப்பயங்கரம்' என்று கருதி மீண்டும் செபித்தார்.

''அற்புதர் இயேசுவே, இந்தப் பயங்கரமான ஆபத்திலிருந்து நாம் அற்புதமாகக்காக்கப்பட்டால், இன்றைக்கே என் சரீரம் இந்தப் புகைவண்டியின் விபத்தினால் முற்றாகச் சின்னாபின்னமாக்கப்பட்டு அழிந்துவிட்டதென்றெண்ணிக்கொண்டு, என் சொந்த மகிழ்ச்சிக்குரியவைகளை நாடாமல், உம்முடைய அற்புதசகாயத்தின் சாட்சியாக உழைப்பேன். பாவியாகிய எனக்கு இரங்கும்!'' என்று ஓலமிட்டுச் செபித்தார். என்னே, அதிசயம் வண்டி மெதுவாக நின்றது சின்னண்ணனும், அவரது நண்பரும் கீழே இறங்கி மெதுவா நடந்துசென்று தாம் முன்னர் வந்த பெட்டியில் ஏறிக்கொண்டனர் வண்டியில் இருந்தவர்கள் இரண்டு பக்கங்களாலும் எட்டிப்பார்த்து ''இந்த வண்டி இவ்விடத்தில் ஏன் நிற்கின்றது?'' எனப்பேசிக்கொண்டனர். இயேசுசகாயமும்நண்பரும் ''இயேசு பெருமானே எம்மைக் காப்பாற்றினார்'' என்று சத்தமிட்டுச்சொல்லினர்.

இந்த வேண்டுதலுக்கமைய இயேசுசகாயம் விடுவந்துசேர்ந்ததும் 'சபை ஊழியத்திற்குச் செல்வதில்லை' என்று தீர்மானித்து அத்தியட்சருக்கும்; பெற்றோருக்கும் அதனைத் தெரிவித்தார். ஆனால் அவர்களின் வற்புறுத்தலின்பேரில் மூளாய் திருச்சபையில் ஊழியராகச் சென்றார். ஒரே ஒரு வருடம் மட்டுமே அங்கிருந்தார். ஓரிரவு குருமனையில் தங்கியிருந்த அவருக்குத் தூக்கம்வரவில்லை. நேரம் இரவு 11 மணியிருக்கும். நிலா வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது. சின்னண்ணன் தமது 'சைக்கிள்' வண்டியை எடுத்துக்கொண்டு மருதனார்மடம் கிறித்தவசேவா ஆச்சிரமம் நோக்கிச்சென்றார். அங்கு அவர் சென்றபோது 'இரண்டுபேர் மல்யுத்தம் புரிவதுபோற்காணப்பட்டதாம்! அதாவது பெரியண்ணன் செல்வரத்தினம் போதகரும், புத்திசுவாதீனமற்ற ஒரு வாலிபனும் அங்கிருந்தனர். அந்த வாலிபனோ தனது மரணத்தைப்பற்றியே ஓயாமற் பேசிக்கொண்டு, நித்திரை கொள்ளாமல் வெளியே ஓட எத்தனித்தார். பெரியண்ணன், அவனை அரவணைத்துப் புத்திமதி சொல்லிச் செபிக்கமுனைந்தார். அவர் சின்னண்ணனைக் கண்டதும் 'இந்த நேரத்தில் ஏன் இவ்விடம் வந்தாய்?' என்றார், சின்னண்ணனோ, 'நான் சும்மா வந்தேன்' என்றார்.

''சரி, சற்றுநேரம் இவனைப் பார்த்துக்கொள். நான் சிறிது சித்திரைசெய்யவேண்டும்!'' என்றார்.

''அப்படியே செய்கிறேன்!'' என்று சொல்லிய சின்னண்ணன், அன்றுமுதல் ஆச்சிரமத்திலேயே தங்கிவிட்டார். ஆச்சிரம ஊழியரானார். 1944-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி அத்தியட்சர்

பக்கிங்ஹாம் வால்ஸ் அவர்களால் இயேசுசகாயம் கிறிஸ்தவ சேவா
ஆச்சிரம ஊழியராக திருநிலைப்படுத்தப்பட்டார். சின்னண்ணன்
இயேசுசகாயத்திற்கு அற்புதமான குரல்வளமிருந்தது. கர்நாடக சங்
கீதம் அவருக்கு இயல்பாகவே வந்தது. அதனால் அவர் சபைகள்
தோறும் கதாப்பிரசங்கங்கள் பல செய்து அனைவரதும் பாராட்
டையும் பெற்றார். அவரது கதாப்பிரசங்கங்களுக்கு தேதி குறித்து
ஆச்சிரமத்துக்குப் பல அழைப்புக்கள் வந்துகுவிந்தன.

எமது திருச்சபைப் பாட்டுப்புத்தகத்தில் வண. ஈ. த. இயேசு
சகாயம் (சின்னண்ணன்) யாத்த ஒன்பது கீர்த்தனைகள் (1980
திருத்திய பதிப்பில்) இடம்பெற்றுள்ளன. உள்ளத்தை உருக்கும் வல்
லமை அக்கீர்த்தனைகளில் உறைந்துள்ளது இந்த ஒன்பது கீர்த்
தனைகள் மட்டுமல்ல, பல நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளை
அவர் யாத்துள்ளார். அவற்றையெல்லாம் தேடிச்சேர்த்துத் தனி
யானதொரு கீர்த்தனை நூலாகவே வெளியிடவேண்டும். அவரது
உளமுருக்கும் பாடல்களில் ஒன்று தென்னிந்திய ஐக்கிய திருச்சபை
ஆலயங்களில் மட்டுமன்று, ஏனைய சபைகளின் ஆலயங்களிலும் மிக
விருப்புடன் பாடப்படும் பாடல், இது !

ஏகதாளம்

இராகம்: மோகனம்

பல்லவி

உன்னைப்போல யாரே உலகிலே
என்னை நேசித்தாரோ - இயேசையா

அநுபல்லவி

அன்னையைப்போல அமுதூட்டி வளர்த்தாயே -
- இயேசையா - உன்

சரணங்கள்


1) தொங்கு சிலுவைக்காட்சி கண்டென் நெஞ்சம் - துடிக்குதையோ
பஞ்சமா பாவி, என் தஞ்சம் உன் ஐந்துகாயமல்லோ - உன்

2) பாவ ஆழியிலே அமிழ்ந்து மூழ்கும் வேளையிலே
தாவியென்னை மீட்ட என் அன்பே, வாழ்வில் மறப்பேனா,
- உன்

மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் இக்கட்டுரை ஆசிரி
யர் பல வாரங்கள் தங்கியிருந்துள்ளார். பெரியண்ணனுடனும், சின்
னண்ணனுடனும் மிகவும் பயபக்தியுடன், மனம்விட்டுப் பழகியுள்



**Mr. I. T. Yesusahayam**



ளார்: ஒவ்வொருநாள் அதிகாலையிலும் நான்கு மணிக்கு பெரியண்ணன் செல்வரத்தினம் போதகர் துயில்நீத்தெழுந்து, ஆச்சிரம வளவைச்சுற்றிப் பல தடவைகள் பாடிக்கொண்டு வலம்வருவார்! பெரும்பாலும் அவர் பாடும் பாடல் 'உன்னைப்போல யாரே...!' என்ற இந்தப்பாடல்தான். அத்துடன் நில்லாது தாம் நிகழ்த்தும் உளமுருக்கவல்ல பிரசங்கங்களுக்கு முன்னும், பின்னும் இப்பாடலைப் பெரியண்ணன் பாடுவார்.

இதனை எழுதியவர் சின்னண்ணன் இயேசுசகாயம் என்பதனைத் தெரிந்து கொள்வது மகிழ்ச்சி தருகிறது. இதனைப் போன்றே சுவிசேஷ எழுப்புதற் கூட்டங்களில் பாடப்படும் எழுச்சிமிக்க கீர்த்தனைகளான

*(கீர்த்தனை இல. 159)*

இராகம்: தோடி ஆதிதாளம்

பல்லவி

1. "வாழ்த்துவோம், வாழ்த்துவோமே - எங்கள்
வானபரன் சுதனை வாழ்த்துவோம், வாழ்த்துவோமே"

(கீர்த்தனை இல. 158)

இராகம்; கமாஸ் ஆதிதாளம்

பல்லவி

வாக்களித்த வரதா — எம்
போக்குவரத்தில் கா, வா — அனுதினம்

சரணங்கள்

1) ஊக்கமுடன் உன் ஊழியம் செய்ய
ஆவி அருள்வாயே — வெகு
பாக்கியமென நின் வாக்கை உரைக்கத்
தீர்க்கமருள்வாயே! — வாக்

2) வருந்திப்பாரம் சுமக்கும் பாவி
வருக என்றழைப்பாய் — ஓடி
விரும்பி வந்துன்னடியிற் சேர்ந்தால்
இளைப்பை ஆற்றிடுவாய்! — வாக்

3) நெஞ்சம் நொந்து சோரும்போது
சிந்தையில் வருவாய் — மிகச்
சிந்தை நைந்து கதறும்போது
அஞ்சேல் என்றருள்வாய்! — வாக்

4) வானம் பூமி ஒழிந்துபோம் உன்
வார்த்தை ஒழியாதே — உலகில்
இராச்சியம் யாவும் அழிந்துபோம் உன்
இராச்சியம் அழியாதே...! — வாக்

5) மன்பதைக்கு மரணம் தீர்க்கும்
நியாயப் பிரமாணம் — அழியும்
இன்பமூட்டி ஆருயிரீந்த
அன்பழியாதே...! — வாக்

6) யுகமுடிவு வரையு மெம்மோ
டிருப்பேன் என்றாயே — அன்பே
ஈற்றில் நித்ய வாழ்வில் சேர்த்து
உவகை அளிப்பாயே...! — வாக்

(கீர்த்தனை இல. 161)

இராகம்: தேசிகதோடி ஆதிதாளம்

2. ஆனந்தம் கொள்வோம் அகமகிழ்வுடனே
ஞானவரந்தரும் ஆவியின் அனுபவமே

தொடக்கங்களையுடைய பாடல்களும் இறவாவரம் பெற்றவை யாக நின்று என்றும் மிளிர்வனவாகும். திருவெம் பாவைப்பாடலில் வரும் ''சித்தமழகியார் பாடாரோ நம் சிவனை'' என்பதற்கொப்ப இயேசுசகாயத்தின் அழகிய உள் ளம் எப்பொழுதும் இயேசுபெருமானையே பாடிக் கொண்டிருந்தது.

அவரோடு உரையாடுவது தனியான ஆனந்தம் தரும். வரிக்கு வரி, சொல்லுக்குச்சொல் பொங்கிவழியும் நகைச்சுவை பொலிய உரையாடுவார். ஒரு தடவை ஏதோ ஒரு தவறான காரியத்தைச் செய்தமைக்காக, அதனைச் செய்த வாலிபனைத் தண்டிக்காது, தம்மையே தண்டித்துக்கொண்டு, ஒருநாள் முழுதும் எவருடனும் பேசாது, தண்ணீர்கூட அருந்தாது மௌனவிரதமிருந்தார் பெரியண் ணன். இதனைப் பொறுக்கமுடியாத சின்னண்ணன், பெரியண் ணனின் விரதத்தைக் கைவிடுமாறு பலமுறை குறிப்பினாலுணர்த்தி

னார்; பெரியண்ணன் அசைந்து கொடுக்கவில்லை. திரும்பிவந்த சின்னண்ணன் அப்போது ஆச்சிரமத்தில் தங்கியிருந்த இக்கட்டுரையாளரைப் பார்த்துச்சிரித்துக் கொண்டே கூறியது.

> ''பரிசுத்தவான்களுடன் இப்பூவுலகில் வாழ்வது
> மெத்தக்கஷ்டம்!''

சின்னண்ணன் இயேசுசகாயம் தமது நாளாந்த வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளி நேரமும் ஆனந்தமயமாக இருந்தார். ஏனெனில் இரட்சாபெருமானாகிய ஏசுபெருமானின் அருள்வெள்ளம் இயேசுசகாயத்தின் உள்ளத்தில் கங்குகரையின்றிப் பொங்கிக்கிடந்தது. அவரைக் கண்டவுனேயே எல்லாரும் அவரது நண்பர்களாகவும், சீடர்களாகவும் மாறிவிடுவர். தெரிந்தவர், தெரியாதவர் என்ற வேறுபாடே சின்னண்ணனுக்குத் தெரியாது!

சொல்லிலும் செயலிலும் ஒன்றாக வாழ்ந்த இறையருட் கவிஞர் இயேசுசகாயம்!

இராகம்: நவரோஜ் ஆதிதாளம்

பல்லவி

இன்னும் இன்னும் தூய்மை செய் — என்
அண்ணலே, அரசே — இயேசையா, அண்ணலே அரசே

அனுபல்லவி

ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் — இரட்சகா

சரணம்

தாழ்விலெனை வந்தெடுத்தாயரசே,
வாழ்வில் சாந்தி கொடுத்தாய் குருசே
நாளில் பாடி மகிழ்வேன் முரசே,
தாளில் பணிந்து தொழுவேன் சிரசே!

என்று எல்லையில்லா இறையருளின்பத்தில் மூழ்கித் திக்குமுக்காடித் திளைப்பவர் சின்னண்ணன். அவரது உயிருள்ள கீர்த்தனைகள் இயேசுபெருமானின் அருளின்பத்தைக் காலவெல்லை கடந்து தமிழ் நெஞ்சங்களில் என்றும் பரப்பவல்லன என்பதில் நாம் களிபேருவகையடையலாம். 1970-களில் சின்னண்ணன் பூதவுடல் மறைந்தாலும், அவரது இறையருட் கவிதைகள் என்றும் அவரை எம்மத்தியில் வாழவைக்கின்றன.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# கவிஞர் தோமஸ் ஹட்சன் பரமசாமி

கவிஞர் தோமஸ் ஹட்சன் பரமசாமி கல்விப் பாரம்பரியம்மிக்க நற்குடியிற் தோன்றியவர். உடுப்பிட்டியைச் சேர்ந்த கெருடாவில் கிராமத்தில் செல்வாக்குமிக்க சுப்பிரமணியம் ஆறுமுக உடையாரின் இரண்டாவது புதல்வராக 1864-ல் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை உள்ளூர்ப் பாடசாலையொன்றிலும், உயர் கல்வியை வட்டுக்கோட்டை ஆங்கில உயர்நிலைப் பள்ளியிலும் பெற்றார். அவரது சிறப்பியல்புகளை நன்கு கவனித்த, பிரபலமான அமெரிக்கன் மிஷனரியான டாக்டர் E.P கேஷ்டிங் தமது ஆளுமையின் மூலம் அவரைக் கவர்ந்தார். பாரம்பரியப், புகழ்பூத்த இந்தக் குடும்பத்தில் பிறந்தவரான பரமசாமி வட்டுக்கோட்டையில் கல்வி பயிலும்போது டாக்டர் E: P: கேஷ்டிங்கிடம் வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் ஞானஸ்நானம் பெற்று, தோமஸ் ஹட்சன் பரமசாமி என்னும் நாமம் பெற்றார். கல்வியில் தேறியதும் வட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியிலேயே நான்கு வருட காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1899-ல் அவர் கல்கத்தாப் பல்கலைக்கழக B. A. பட்டதாரியானார். பின் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் குழாத்தில் சேர்ந்துகொண்டார். கல்லூரியில் அவர் வந்தின், தமிழ்மொழிப் பாடங்களின் ஆசிரியராக விளங்கினார். இப்பாடங்களைக் கற்பிப்பதில் அவர் ஈடிணையற்றவராக விளங்கினார். அவரது பாதங்களினருகே இருந்து இப்பாடங்களைக் கற்ற பன்னூற்றுக் கணக்கான பழைய மாணவர்கள் தமது வாழ்நாளெல்லாம் அவரைத் தமது கல்விக் கண்களைத் திறந்த கருணைக்கடலாகவே கருதி வந்தனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், அதன்பணிப்பாளர் சபையும் திரு ஹட்சன் பரமசாமி மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அவர் மூலம் கிறிஸ்தவ சமயத்துறையிலும், கல்வித்துறையிலும் மகத்தான சாதனைகளைப் புரியலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது. உண்மையில் அஃது சாத்தியமான ஒரு நம்பிக்கையேயாகும். யாழ்ப்பாணக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு திரு. ஹட்சன் பரமசாமி முப்பத்துமூன்று வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றினார். கல்லூரிக்கு நிதி சேர்ப்பதற்காக மலாயா நாட்டிற்குச் சென்று பெருநிதி சேர்த்து வந்து உதவினார். மலாயா நாட்டிலுள்ள அவரது பழைய மாணவர்கள் நிதி சேர்த்தலிற் காட்டிய ஆர்வமும், அவர்பாற் செலுத்திய அன்பும் பிரமிக்கத்தக்கதெனலாம்!

எல்லோரும் அவரைக் 'கல்விக்கடல் ஹட்சன் பரமசாமி' என்றே அழைத்தனர். லத்தீன் மொழியிலும், தமிழ்மொழியிலும் அவருக்கு இருந்த பாண்டித்தியம் அளவிடற்கரியது. தென்னிந்திய ஐக்கிய திருச் சபையின் யாழ்ப்பாண ஆதீனச் செயலாளராக ஐந்து வருடங்கள் அரும்பணியாற்றியுள்ளார், உப தலைவராக மூன்று வருடங்கள் உழைத்துள்ளார். 1913-ல் மதுரை மாநகரில் நடந்த தென்னிந்திய ஐக்கிய திருச்சபையின் வருடாந்த மாநாட்டிற்கு யாழ்ப்பாணப் பிரதி நிதியாகச் (டெலிகேட்) சென்றிருந்தார்.

அவரது பன்முகப்பட்ட திறமைகளை இலங்கை மட்டுமல்ல. தமிழ் நாடும் நன்கறிந்திருந்தது. அதனை உறுதிப்படுத்துவது போல சென்னைப் பல்கலைக் கழகம் தொகுத்து வெளியிட்ட தமிழ் அகராதி ஆசிரியர் குழுவில், திரு. ஹட்சன் பரமசாமி அவர்களையும் சேர்த்துக் கொண்டது.

கல்விப்பணி, சமயப்பணி என்பவற்றுடன் சமூகப் பணியிலும் சளைக்காது முன்னின்று தொண்டாற்றியவர் திரு. ஹட்சன் பரம சாமி, குறிப்பாக அந் நாட்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 'தலை விரித்தாடிய' மது அரக்கனின் கோரத்தாண்டவத்தை முறியடிப்பதில் அவர் தீவிரமாகச் செயற்பட்டவர்.

அவர் சண்டிலிப்பாயூரை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். சண்டிலிப்பாய் தேவாலயத்தின், செயலாளராகவும், பொருளாளரா கவும் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார்,

1907-டிசம்பரில் அவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராகப் பதவியேற்றுச் சென்றார். அவரது பிரிவு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பேரிழப்பெனலாம். எனினும் அக்காலகட்டத்தில் வட்டுக்கோட்டைச் செமினரியும், வட்டுகோட்டை ஆங்கில உயர் நிலைப்பள்ளியும், யாழ்ப்பாணக் கல்லூரியும் 'பெற்றெடுத்த செல்வங்களே', இந்துக் கல்லூரிகளின் அதிபர்களாகவும் அணி செய்தனர். இதனால் யாழ்ப் பாணக் கல்லூரி மேலும் பெருமை பெற்றது.

1950 ல் வெளியிடப்பட்ட எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகத் தில் கவிஞர் தோமஸ் ஹட்சன் பரமசாமி யாத்த மூன்று கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. இம்மூன்று கீர்த்தனைகள் மாத்திரமல்ல' கவிஞர் பல கீர்த்தனைகளையும் யாத்திருக்கலாம். ஆனால் அவை அத்தனையையும் முழுமையாகப் பெறும் நிலையில் நாமில்லாதது துரதிட்டமே! 1991-ல் புதுப்பித்து வெளியிடப்பட்ட எமது திருச் சபைப் பாட்டுப் புத்தகத்தில் கவிஞர் யாத்த ஒரு கீர்த்தனையே இடம் பெற்றுள்ளது, அஃதொன்றே அவரது புலமைத் திறனைப் புலப் படுத்தவல்லது, அதனை ஈண்டு முழுமையாகத் தருகின்றோம்.



**Mr. Thomas Hudson Paramasamy**

இராகம்: அரிகாம்போதி

## திருத்தாண்டகம்

(1) "ஐயா இப்பூவுலகைச் சதமென்றெண்ணி
அருமறையின் போதகத்தையசட்டை செய்தேன்
பொய்யாமிவ் வாழ்வில் மனம்போகச்செய்தேன்
பொல்லாத பாவங்கள் புரியலானேன்,
துய்யர்நான் மனம்நொந்தேன் பொறுதிகேட்டேன்
துயரனைத்தும் நீங்க அருள் செய்குவாயே;
மெய்யாயுள்பதம் விழ்ந்தேன் யேசியாவே:
மீட்சிதந்துனடியேனை மேற்கொள்வாயே!

(2) நீயேயென் துணையல்லால் வேறாருண்டு,
நீணிலத்தில் மானிடர்க்காயுதித்தாயன்றோ,
தூயேசு நாதாஎன்பவத்தால்வந்த
தோஷமெலாம் நீக்கியருள் செய்யாயாகில்
தீயெனிடேறு நெறி யாதுங்காணேன்
திருச்சமூகம் தந்தடியேனுய்யுமாறே
ஈயேனி னிரட்சணியம் ஏழையேனுக்
கெல்லனிலறயே, தண்ணளி கூர்ந்திரங்காயின்றே!"

மிகவுயர்ந்த கவிமரபில் இப்பாடல்கள் யாக்கப்பட்டுள்ளன. திருவாசகத்தில் வருகின்ற பாடல்களை ஒத்து மிளிர்கின்றன. இவ்வண்ணம் பத்திநயமும், பரவசமும் நல்குகின்ற பாடல்களைத் திட்டுதற்கு எத்துணை உளத்தூய்மையும், உயர்ந்த இறையருளும் பெற்றிருத்தல் வேண்டுமென்பதனை யாம் உய்த்துணரல் வேண்டும். இசைக்க இசைக்க இதயத்தை உருக்கி, உரோமாஞ்சலியெய்தி, மெய்மறந்து தெய்வத் திருவருளில் திளைக்கச் செய்ய வல்லன இப்பாடல்கள். இவற்றை எமது சபையார் எப்பொழுதும் மனத்திருத்திச் ஜெபவேளைகளில் இசைத்தல் சாலப் பொருத்தமானது.

'மிகச் சிறந்த பேரறிஞர்கள், கவிஞர்கள், விஞ்ஞானிகள், மேதைகளில் பலரும் நீண்ட காலம் உயிர் வாழ்வதில்லை- இஃது இயற்கையின் விதியோ, இறைவனின் திருவிளையாடலோ நாமறியோம். கவிஞர் ஹட்சன் பரமசாமியும் தமது ஐம்பதுகளில் மறைந்து விட்டார். 1864-ல் பிறந்த கவிஞர் 1916 செப்டம்பர் மாதம் 16-ம் நாள் மறைந்தார். அவர் மறையும் போது அவருக்கு வயது ஐம்பத்திரண்டே. இத்துணைக் குறுகிய காலத்தில், மிகப்பின்தங்கிய காலகட்டத்தில் அவர் மகத்தான சாதனைகள் பலவற்றை நிலை நாட்டியுள்ளார்,

அவர் மறைவின் பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி "ஒட்லி" மண்டபத்தில் அவரது திருவுருவப் படம் திறந்து வைக்கப் பட்டது. அவ் வைபவத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட னர். யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. ஜோன். பிக்னல் B. A, B. D., கௌரவ சேர். அம்பலவாணர் கனகசபை. கௌரவ கே, பாலசிங்கம் ஆகியோர் உட்படப் பலர் அங்கு உரை நிகழ்த்தினர். கவிஞரது திருவுருவப் படத்தை அவரது புதல்வரான சட்டத்தரணி திரு. ஹட்சன் தம்பிராசா அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

கௌரவ திரு. பாலசிங்கம் தமது உரையின்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"Mr. Hudson was a very good Tamil scholar, Whenever there was a College function, whenever there was some teacher retiring or some incomming visitor, there was Mr. Hudson and his muse at the Services of the College Born in high place, brought up in comfort he dedicated his whole life to the teaching of the yonger generation — a very noble service"

கௌரவ திரு. பாலசிங்கம் அவர்கள் இவ்விழாவில் நிகழ்த்திய உரை தீர்க்கதரிசனமானது எனலாம். கவிஞர் தோமஸ் ஹட்சன் பரமசாமியின் அருமைத் திருமகளார் அரியம் பரமசாமி பல தசாப்த காலமாக உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபராகப் பதவி வகித்து பல்லாயிரக்கணக்கான பெண்களைக் கல்வித் துறையின் உயர்நிலைக் குக் கொண்டுவரத் தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். உடுவில் மகளிர் கல்லூரியை மகோன்னதமான நிலைக்கு உயர்த்திய சுதேச அதிபர் செல்வி. அரியம் பரமசாமி என்பதனை முழு உலக மும் நன்கறியும்.

ஏசுபெருமான் எப்பொழுதும் "பிரசங்கி, சுகப்படுத்து" என்ற வார்த்தைகளைத் தமது போதனைகளின் போது பல தடவைகள் எடுத்தாண்டுள்ளார். கல்விமான்களும், கவிஞர்களும் தமது ஆக்கங் களுக்கூடாக இவற்றையே செய்கின்றனர், கவிஞர் தோமஸ் ஹட்சன் பரமசாமியும் தமது கல்விப் பணி மூலமும், கவிதைப்பணி மூலமும் இதனைத் திறம்படச் செய்துள்ளார். அவரது அருள்மயமான கவி தைகளில் தோய்ந்து ஏசுநாயகனாகிய ஏகநாதனின் இருப்பாத கமலங் களை என்றும்எம் இதயங்களில் இருத்தித் துதிப்போமாக!

# வண. டி. பி. நைல்ஸ் அடிகளார்

இறைபணியாற்றும் குரவர்கள் இருவகைப்படுவர், ஒரு சாரார் இறையருளில் தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற்றுய்ய வேண்டுமெனத் தளராது பணி செய்தலையே நோக்கமாகக் கொண்டவர்கள். மறுசாரார் தெய்வீகப் பணியுடன் தீந்தமிழ்ப்பணி புரிதலின் மூலமும் தெய்வீக தரிசனத்தைப் பக்தர்களுக்குப் பாலிக்கவல்லவர்கள். வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் இவ்வகையினரே. நாற்பத்தைந்து வருடங்கள் குரவராகப் பணி செய்த உத்தமர் அவர். இயேசு பெருமானின் தெய்வீகத் திருவருளை அருந்தமிழ் கீர்த்தனைகளால் அணிசெய்து அகமகிழ்ந்தவர். கவிதையோ. கீர்த்தனையோ, பாடலோ எதுவாயினும் உணர்ச்சியின் உச்சநிலையிலேயே உருவாகிறது. சிறந்த பக்திமான்கள் பலரிருப்பினும் பாமாலை தொடுத்துப் பரமனை அஞ்சலிக்கும் பாக்கியம் மிகச் சிலருக்கே இறைவனாற் கொடுக்கப்படுகின்றது. வண. டி. பி. நைல்ஸ் அடிகளாரை இயேசு பெருமான் இவ்வகையில் தளராது ஊக்குவித்திருக்கின்றார். வண. டி, பி. நைல்ஸ் அடிகளார் பல கீர்த்தனைகளை யாத்துள்ளார். அவையத்தனையும் இப்பொழுது முழுமையாகக் கிடைத்தில. அடிகளார் பத்தொன்பதாம் நூற்றாண்டு மனிதராவர். 1836-ம் ஆண்டிலே தோன்றிய அவர் 1915-ம் ஆண்டிலே கர்த்தருக்குள் ஐக்கியமானார். அவரது இறைபணியும், தமிழ்ப்பணியும் கடந்த நூற்றாண்டிலே தான் பெரும்பாலும் நிகழ்ந்துள்ளன. நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னரே இவ்வாறு கிறிஸ்தவ கீர்த்தனைகளை யாத்துப் பல கிறிஸ்தவ கவிஞர்கள் தோன்றுதற்கு வண. நைல்ஸ் அடிகளார் வளமார்ந்த பங்களிப்பினை நல்கியுள்ளார்.

1991-ம் ஆண்டு புதுக்கிப் பதிப்பித்த எமது திருச்சபைப் பாட்டுப் புத்தகத்திலே வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் யாத்த மூன்று கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. அக்கீர்த்தனைகள் கற்றாரையும், கல்லாதாரையும் கர்த்தரிடத்திலே ஆற்றுப்படுத்தவல்ல அருட்டன்மை வாய்ந்தன. பண்டிதர்களும், வித்துவான்களுமே தமிழை நுகரவும், தமிழ்ச் செய்யுள்களை யாக்கவும் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்ட காலகட்டத்திலே வாழ்ந்த வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் இறைபணியில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டே அவரருளைக் கீர்த்தனைகள் வாயிலாகவும் தெரிவிக்கும் திறன் வாய்க்கப் பெற்றுப் புரட்சி செய்துள்ளார். மொழி மக்களுக்குக் கருத்துணர்த்தும் சாதனமென்பதனை மறந்த சிலர் "கடுந்தமிழ்ப்

பாக்கள்'' மூலம் பக்களை மேலும் அறியாமையில் ஆழ்த்தி வந்தமை கவலைக்குரியதே. ஆனால் வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் தமிழை ஆயுதமாக்கி ஆண்டவரது திருவருட்டிறனை மக்களுக்குணர்த்தியமை மாபெரும் சாதனை என்றே சொல்லுதல் வேண்டும்!

தமிழிலக்கியத்திலே அகம், புறமென இரு பெருந்துறைகள் உள. அகத்துறை இலக்கியத்திலே காதல், கற்பு, இல்வாழ்வு, இன்பம் என்பன வெகுவாகச் சிலாகித்துப் பேசப்படுகின்றன. சமயவுணர்வும் அகத்துறை சார்ந்ததே. இறைவனுக்கும், எமக்குமிடையேயுள்ள பத்தியுணர்வைப் படம்பிடித்துக் காட்ட இலக்கியத்தைப்போல வேறெதுவும் உதவாது. இவ்வுண்மையை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிப்போந்த ''திருக்கோவையார்'' அழகாகச் சித்தரிக்கின்றது. கிறிஸ்தவ கீர்த்தனைகளை யாத்த கவிஞர் பெருமக்களும் இப்பணியிலேயே ஒல்லும்வகை உழைத்துள்ளனர்.

வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் யாத்த கீர்த்தனைகளிலே இன்னும் எமது அத்தியட்சாதீனச் சபையாராதனைகளில் யாவராலும் விரும்பிப் பாடப்படும் கீர்த்தனையொன்றினை எண்டுத் தருகின்றோம். அஃதொன்றே அடிகளாரின் பக்தி மணம் பரிமளிக்கும் பாடல்களுக்கு உகந்த ஒரு உதாரணமாகும்! கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி அது இவ்வாறு விபரிக்கின்றது.

இராகம்: கரஹரப்பிரியா ஆதிதாளம்

பல்லவி

தேவா, இரங்கும் என்னிலே — நேச
தேவா, இரங்கும் என்னிலே

அனுபல்லவி

பாவியேன் செய்த குற்றம், தீவிரம் நீங்கிப்போக
ஆவியால் என் நெஞ்சை நீர் ஏவியன்பாய்க்காத்திடும்
— தேவா

சரணங்கள்

1. மங்கா மறையின் ஆதியே! — மாசு
தங்கா நிறைவின் சோதியே! — என்மேல்
தொங்கும் சினத்தைமாற்றி, பொங்கும் கோபத்தால் என்னைச்
சங்காரஞ் செய்யாமல், என் பங்கம் முற்றாய் நீக்கும்!
— தேவா

2. நீதா நும்நீதி காவிக்க — ஞான
போதா என் உள்ளம் ஆவிக்க — என்றன்
தீதான குதுகளை, நாதா, நான் அறிக்கையிட்டு
வாதாடி நும்மருளை ஆதாரமாக்கிக் கொள்வேன்!

— தேவா

3. அப்போதென் நெஞ்சு பூரித்து — தேறி
எப்போது மன்பிறசிவிக்கும், — கெட்ட
தப்பான செய்கையை நான் அப்பாலே நீக்கி, உம்மை
அப்பா, பிதாவேயென்று ஒப்பாகப் போற்றிக் கொள்வேன்

— தேவா

4. எல்லோரும் விட்டுப் பாவத்தை — மிக்க
நல்லோராய் என்றும் சீவிக்க — சர்வ
வல்லவரே, நும்வழியைப் புல்லருக்குப் போதிப்பேனே
கல்லாரும் அப்போதும்மை நல்லாகப் போற்றுவார்கள்!

— தேவா

இக்கீர்த்தனை வரிகளில் மிக்க நெகிழ்ந்துடன் ஒரு மகன், தனது பாசம்மிக்க தந்தையிடம் பரிந்து பேசுகின்ற, வேண்டுகின்ற பரிவுணர்வுகளைத் தரிசிக்கின்றோம். வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் இத்தகைய உணர்வலைகளையெழுப்பும் கீர்த்தனைகள் பலவற்றையும், பிரசங்கங்களையும் செய்திருப்பாரென்பதில் ஐயமில்லை. ஏனெனில் அவரது குருத்துவப் பணிக்காலம் ஏறக்குறைய அரை நூற்றாண்டை அண்மித்திருந்தமை இதனை நிரூபிக்கின்றது.

கிறிஸ்தவ மதபோதகர், பிரபல கீர்த்தனாசிரியர், சிறந்த சமூக சேவையாளர், மதுவிலக்குத் தொண்டர், பிரபலமான கல்விமான் என்ற நிலையிலேதான் வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் தாம் வாழ்ந்த காலத்தில் அனைத்து மக்களாலும் மதிக்கப் பெற்றார், கிறிஸ்தவ மக்கள் மாத்திரமன்று சைவசமயத்தவரும், ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களும் அவரைச் சான்றோனாகவே கண்டனர். இதனை அவர் மறைந்தபொழுது மக்கள்காட்டிய பேரனுதாபத்திலிருந்து கண்டு கொள்ளலாம். சைவ மக்களது உத்தியோகபூர்வமான பத்திரிகையாக விளங்கிய "Hindu Organ" ஆங்கில இதழில் அதன் ஆசிரியராக விளங்கிய திரு. ஏ. சபாபதி பின்வருமாறு எழுதினார்:

Daniel Poor Niles : Born 1836- Died 1915. He died in the 45th year of his ministry. Mr. A. Sabapathy the then editor of the "Hindu Organ" paid him the following tribute

"The Protestant Tamil Community in Particular and Tamils of Ceylon in general have lost a great and a good man an erudite scholar a deep thinker, a sage adviser and a gentleman of unblemished charactor and spotless integrity......He was always considered an ideal native minister learned, Pious, sagacious dignified, and withal tolerant towards other faiths as much as his as a minister of Christ Would. He was blessed with a good ancestry and was the second son of Mr. Nathaniel Niles, and the father of Mr. W. D. Niles Advocate. Jaffna."

பல தசாப்தங்களுக்கு முன்னரே கிறித்தவ மத போதகர் ஒருவர் ஏனைய மதத்தவரின் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவராக விளங்கினார் என்பதனை இக் குறிப்பு ஐயந்திரிபற நிருபிக்கின்றது. அன்றுமாத்திரமன்று இன்றும் கிறிஸ்தவ மத போதகர்களாக விளங்குவோர் இறைபணியும், தமிழ்ப்பணியும், சமூகப்பணியும் புரிதல் வேண்டும் என்பதற்கும் வண. டி. பி. நைல்ஸ் அடிகளார் முன்னுதாரணராக விளங்குகின்றார்.

இறவாவரம் பெற்ற அவரது இறையருட் கீர்த்தனைகள் எம்மையும் அவரது பக்தி நயத்தில் பக்குவப்படுத்தி இயேசுபிரான் மீது மேலும் எம்மை ஆற்றுப்படுத்துவனவாகுக.

வரலாறு என்றும் மறைவதில்லை. மாற்றங்கள், புரட்சிகள், பூகம்பங்கள் நிகழும். ஆனால் வரலாறு எதனாலும் மறைவதில்லை. பக்திவயப்பட்ட வரலாறும் அப்பான்மையதே. வண. டி. பி. நைல்ஸ் அடிகளாரின் அருள்நலஞ் சார்ந்த கீர்த்தனைகள் எம்மை அந்த அதீத நம்பிக்கைக்கு இட்டுச்செல்லவல்லனவாகுமென்பதில் ஐயமில்லை.

ed in
then
ibute

and
good
r and
inte-
nister
erest
hrist
s the
Mr.

ஒருவர்
வராக
ன்றது.
விளங்
ரி தன்
முன்னு

ர எம்
மீது

ரிகள்,
ல்லை.
நல்ல
அநீத
ர.

தமிழறிந்தார் அனைவரும் படிக்கவேண்டிய

# தென்னிந்திய திருச்சபை
# யாழ்ப்பாண ஆதீன வெளியீடுகள்.

1. பேராயர் சபாபதி குலேந்திரன்
வரலாற்றுச் சுருக்கம்.
எழுதியவர்: அத்தியட்சர் . எஸ். ஜெபநேசன்
விலை: ரூபா 90/-

2. வணக்கத்துக்குரிய டானியில் பூவர் கதை.
எழுதியவர்: அத்தியட்சர் . எஸ். ஜெபநேசன்
விலை: ரூபா 25/-

3. வணக்கத்துக்குரிய டாக்டர் ஜோன் ஸ்கடர்
கதை.
எழுதியவர்: நாவேந்தன்
விலை: ரூபா 15/-

4. மகதலேனா மரியால் (குறுங்காவியம்) (அச்சில்)
எழுதியவர்: நாவேந்தன்
விலை: ரூபா 50/-

**கிடைக்குமிடங்கள்:**

1. திருமறை இல்லம், 1ம் குறுக்குத்தெரு,
யாழ்பாணம்.
2. அத்தியட்சாதீனப் பணிமனை,
வட்டுக்கோட்டை.
3. கிறிஸ்தவ இறையியற் கல்லூரி,
மருதனார்மடம், சுன்னாகம்.

(மற்றும் பிரபல புத்தகசாலைகளிலும்)